# முப்பத்திரண்டு பதுமை கதை

- தாள் சுவடி

சுவடியியல் மற்றும் பதிப்பியல் நிறைசான்றிதழுக்காக
(Diploma) சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு.


பதிப்பு
**டோ. டேவிட்ஸ்டான்லி**

தமிழ் இலக்கியத்துறை
**சென்னைப் பல்கலைக்கழகம்**
**சென்னை 600 005.**



மே 2004

# முப்பத்திரண்டு பதுமை கதை

- தாள் சுவடி

சுவடியியல் மற்றும் பதிப்பியல் நிறைசான்றிதழுக்காக
(Diploma) சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு.


பதிப்பு

**டோ. டேவிட் ஸ்டான்லி**

மேற்பார்வையாளர்

**முனைவர். வீ. அரசு**

பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்

தமிழ் இலக்கியத்துறை

**சென்னைப் பல்கலைக்கழகம்**

**சென்னை 600 005.**



மே 2004

**முனைவர். வீ. அரசு,**
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - **600 005**

# மேற்பார்வையாளர் சான்றிதழ்

'சுவடியியலும் பதிப்பியலும்' நிறைசான்றிதழுக்கான பதிப்பேட்டை ஆய்வாளர் டோ. டேவிட் ஸ்டான்லி அவர்கள் என் மேற்பார்வையில் தாள் சுவடியிலிருந்து **'முப்பத்திரண்டு பதுமை கதை'** என்னும் பதிப்பேட்டை உருவாக்கியுள்ளார். இந்த பதிப்பேடு அவரின் சொந்த முயற்சியில் உருவானது என்று சான்றளிக்கிறேன்.

வீ. அரசு,
(மேற்பார்வையாளர்)

இடம் : சென்னை
நாள் :

*டோ. டேவிட் ஸ்டான்லி, எம்.ஏ., எம்.ஃபில்.,*
*ஆய்வாளர்,*
*தமிழ் இலக்கியத் துறை,*
*சென்னைப் பல்கலைக்கழகம்,*
*சென்னை 600 005.*

# பதிப்பு உறுதிமொழி

'சுவடியியலும் பதிப்பியலும்' நிறைசான்றிதழுக்கான **'முப்பத்திரண்டு பதுமை கதை'** என்னும் தாள் சுவடி பதிப்பேடு என் சொந்த முயற்சியால் உருவானதாகும். இந்தப் பதிப்பேடு இதற்குமுன் வேறு எந்த பட்டத்திற்கும் ஆய்வரங்கிற்கும் அளிக்கவில்லை என்று உறுதி அளிக்கிறேன்.

(டோ. டேவிட் ஸ்டான்லி)

இடம் :
நாள் :

# நன்றியுரை

'சுவடியியலும் பதிப்பியலும்' என்னும் நிறைசான்றிதழ் பயில வாய்ப்பளித்து பதிப்பேடு உருவாக்கம், தலைப்பு தேர்ந்தெடுத்தல், ஆலோசனைகளை வழங்கல் போன்ற அனைத்து நிலைகளிலும் உதவிய எனது நெறியாளரும், தமிழ் இலக்கியத் துறை தலைவரும், பேராசிரியருமான முனைவர் **வீ. அரசு** அவர்களுக்கு நன்றி.

பதிப்பிற்கான பல கருத்துகள் வழங்கிய தமிழ் இலக்கியத்துறை விரிவுரையாளர்கள் ய. மணிகண்டன், முனைவர் கி. ஜெயக்குமார் மற்றும் முனைவர் கோ. பழனி ஆகியோருக்கும் என் நன்றி.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள கீழ்திசை சுவடியியல் காப்பாளர் பல்வேறு சுவடிகளை மாற்றி, இறுதியாக இந்த தாள் சுவடியை "பெரிய மனசு பண்ணி" மனமுவந்து கொடுத்ததற்கு அவருக்கும் மற்ற நூலகப் பணியாளர்களுக்கும் நன்றி.

இந்த தாள்சுவடியை நூல்படிவில் கொண்டு வருவதற்கு அனைத்து நிலைகளிலும் உறுதுணையாக இருந்த ஆய்வாளர் சு. லட்சுமிக்கும் அச்சுவடிவம் செய்த ஜி. ரமேஷ் அவர்களுக்கும் நன்றி.

என்னுடன் நூலகத்திற்கு வந்து எனது ஆய்விற்கு பெரிதும் துணை புரிந்த ஆய்வாளர் நா. மனோகரிக்கு நன்றி.

# பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | பதிப்புரை | |
| 2. | முப்பத்திரண்டு பதுமை கதை | 1 |
| 3. | முதலாம் பதுமை கதை | 23 |
| 4. | இரண்டாம் பதுமை கதை | 25 |
| 5. | மூன்றாம் பதுமை கதை | 30 |
| 6. | நான்காம் பதுமை கதை | 33 |
| 7. | ஐந்தாம் பதுமை கதை | 35 |
| 8. | ஆறாம் பதுமை கதை | 37 |
| 9. | ஏழாம் பதுமை கதை | 41 |
| 10. | எட்டாம் பதுமை கதை | 44 |
| 11. | ஒன்பதாம் பதுமை கதை | 46 |
| 12. | பத்தாம் பதுமை கதை | 50 |
| 13. | பதினொன்றாம் பதுமை கதை | 51 |
| 14. | பன்னிரன்டாம் பதுமை கதை | 56 |
| 15. | பதிமூன்றாம் பதுமை கதை | 60 |
| 16. | பதினான்காம் பதுமை கதை | 82 |
| 17. | பதினைந்தாம் பதுமை கதை | 85 |
| 18. | பதினாறாம் பதுமை கதை | 89 |
| 19. | பதினேழாம் பதுமை கதை | 94 |

| | | |
|---|---|---|
| 20. | பதினெட்டாம் பதுமை கதை | 98 |
| 21. | பத்தொன்பதாம் பதுமை கதை | 101 |
| 22. | இருபதாம் பதுமை கதை | 104 |
| 23. | இருபத்தியோறாம் பதுமை கதை | 107 |
| 24. | இருபத்திரண்டாம் பதுமை கதை | 109 |
| 25. | இருபத்துமூன்றாம் பதுமை கதை | 111 |
| 26. | இருபத்துநான்காம் பதுமை கதை | 113 |
| 27. | இருபத்தைந்தாம் பதுமை கதை | 116 |
| 28. | இருபத்தியாறாம் பதுமை கதை | 119 |
| 29. | இருபத்தேழாம் பதுமை கதை | 122 |
| 30. | இருபத்தெட்டாம் பதுமை கதை | 124 |
| 31. | இருபத்தொன்பதாம் பதுமை கதை | 127 |
| 32. | முப்பதாம் பதுமை கதை | 130 |
| 33. | முப்பத்தொன்றாம் பதுமை கதை | 132 |
| 34. | முப்பத்திரண்டாம் பதுமை கதை | 151 |

# பதிப்புரை

'முப்பத்திரண்டு பதுமை கதை' என்ற பெயரில் ஓலைச்சுவடியிலிருந்து மாற்றிய தாள் சுவடியிலிருந்து இப்பதிப்பேடு உருவாக்கப்பட்டுள்ளது. இக்கதை பண்டைய மக்களின் வாழ்க்கை முறை, கொடைத்திறம், தெய்வ பக்தி போன்றவற்றை விளக்குவதாய் அமைந்துள்ளது.

இக்கதைகளில் யுக்திகள் நிறைந்தனவாயும், பேராற்றல் கொண்ட மனிதர்களை சித்தரிப்பதாயும் உள்ளன. படிப்போர் எண்ணத்தில் ஆர்வத்தை தூண்டுகின்றன. இக்கதைகளில் இயற்கை இறந்த நிகழ்ச்சிகளும் மிகுதிப்படுத்துதலும் நிறைந்துள்ளது. தீயவர்களை வதம் புரிதல், நல்லவர்களை காத்தல் என்பன தெய்வங்களின் செயல்களாய் காட்டப்பட்டுகின்றன. கூடுவிட்டு கூடுபாய்தல், மாந்திரிகம் போன்ற நிகழ்வுகள் சுட்டப்படுகின்றன. இக்கதைகளில் பயின்று வரும் மொழி கோயம்புத்தூர் வட்டாரவழக்கும் பிராமணர்களின் வழக்கும் கலந்த நடையாய் உள்ளது. தேவதாசி முறைகள் பண்டை காலங்களில் வழக்கத்திலிருந்ததாய் காட்டப்பட்டுள்ளது.

பழங்கால தாள் சுவடிகளை பாதுகாக்கும் பொருட்டு, சென்னைப் பல்கலைக்கழக சுவடியியல் நூலகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. பின்பு பதிப்பு நூலாக உருவாக்கப்பட்டது.

இந்த தாள்சுவடியை எழுதிய ஆசிரியர் அனந்தப் பிள்ளை ஆவார். *"டாக்கு துரை ஸ்டன் காயபு பெரிய துபா ------யார்"* என்று விடுபட்டுள்ளதால் இந்த துரை பொருளுதவி செய்திருக்கலாம் என்று கொள்ளலாம். ஓலைச்சுவடியிலிருந்து தாள்சுவடிக்கு மாற்றியவர் எம்.ஆர் சிவப்பிரகாசு பிள்ளை. இந்த எழுத்துப்பணி 14.09.1958-ல் தொடங்கி 01.10.1958 அன்று முடிந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**முப்பத்திரண்டு பதுமை கதை**

விக்கிரமாதித்த ராசாவின் வீர தீர பராக்கிரமங்களை கூறும் வண்ணம் அமைந்ததே இந்த முப்பத்திரண்டு பதுமை கதையாகும். இக்கதை தாள் சுவடியில் 172 பக்கம் உடையதாய் உள்ளது. இக்கதையில் பெரும்பான்மையும் விக்கிரமாதித்த மன்னனின் கொடைத் திறம், தயாளகுணம், வீரச்செயல், பிறன்மனை விழையாமை, ஆன்றோர் வாக்கை ஏற்று நடத்தல் போன்ற பண்புகள் கூறப்படுகின்றன.

'ஸ்ரீராமஜெயம்' என்ற நாமத்தைக் கொண்டு இக்கதை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சொற்றொடர்களை சேர்த்து கையாளும் முறை பின்பற்றப்பட்டுள்ளது. பண்டைகால எழுத்துக்களை இக்கால முறைக்கேற்றவாறு மாற்றி எழுதப்பட்டு பதிப்பிக்கப் பட்டுள்ளது. ஆய்வாளரால் மிகை எழுத்துக்கள் நீக்கப்பட்டும், குறை எழுத்துக்கள் சேர்க்கப்பட்டும் பிழை திருத்தம் செய்யப்பட்டுள்ளது. சில பகுதிகள் விடுபட்டுள்ளது. அந்த இடங்கள் கோடிட்டு (-----) காட்டப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு பதுமையால் கூறப்படுவதைப் போல ஆசிரியர் அமைத்துள்ளார். இதற்கிடையில் கதைகளின் நடுவிலேயும் கிளைக் கதைகள் பொதிந்துள்ளன. பெரும்பான்மையான வாக்கியங்கள் உரையாடல்களாக உள்ளன. கடவுளர்கள் பேசுவதைப் போன்று எழுதப்பட்டுள்ளது. சில இடங்களில் கதை நிகழ்வுகளை 'அசரீரி' கொண்டு நகர்த்தப்படுகிறது.

''தட்டான் கருவு பொல்லாது'', ''வியாபார சினேகத்தையும், வேசியுறவையும், ஆற்றுப் பெருக்கையும் நம்பலாகாது'' என்பது போன்ற பழமொழிகள் கையாளப்படுகிறது.

தாள் சுவடியில் வடமொழி சொற்களும், பேச்சு வழக்கும் இருந்துள்ளது. காற்புள்ளி, முற்றுப்புள்ளி, கேள்விக்குறி, உணர்ச்சிக்குறி போன்ற குறியீடுகள் இடம் பெறவில்லை. ஆய்வாளர் தம்முடைய பதிப்பில் இவைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இத்தகு மாற்றங்களுடன் பதிப்பிக்கப்படும் இந்த 'முப்பத்திரண்டு பதுமை கதை' பழங்கால தாள் சுவடியை காத்ததோடு நில்லாமல் பெரியோர் முதல் சிறுவர்களும் விரும்பும் விக்கிரமாதித்தன் கதைகளை மக்களுக்கு எளிய தமிழில், இனிமையான நடையில், விளக்கும் கதையாக இக்கதை வடிவம் அமைகிறது.

# முப்பத்திரண்டு பதுமை கதை

சுபமஸ்து அவிக்கிணமஸ்து

ஸ்ரீராமஜெயம்

ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவேதுணை

## முப்பத்திரண்டு பதுமை கதை

ஸ்ரீபரமேஸ்வரனும் பூலோக புவலோக சத்திரியலோகத்...........திலே யோகாந்தமாய் எழுந்தருளியிருக்கிறபோது லோகமாதாவாகிய ஈஸ்வரியம்மன் பரமேஸ்வரனைப் பார்த்து, ஒரு கதை சொல்லச் சொல்லிக் கேட்க, பரமேஸ்வரன் பரமேஸ்வரியுடனே சொன்ன கதை விக்கிரமாதித்தன் கதையாகப் பரமேஸ்வரன்,

''பூலோகத்திலே ஒரு சிம்மாசனமுண்டு அதிலே முப்பத்திரண்டு பதுமையுண்டு. அந்த சிம்மாசனத்தின் பேரில் போஜராஜன் ஏறுவதற்கு வருவார். அப்பொழுது அந்த சிம்மாசனத்திலிருக்கின்ற முப்பத்திரண்டு பதுமைகளும் போஜராஜனைப் பார்த்து முப்பத்திரண்டு கதை சொல்லுமாறு கூறும்'' என்கிறார். அந்தச் சேதி பார்வதிதேவி கேட்டு இந்த சிம்மாசனம் பூலோகத்தில் வந்த கதை சொல்ல வேண்டுமென்று கேட்க அதற்கு ஸ்ரீபரமேஸ்வரர், ''பூலோகத்தில் பத்திரகிரிராசா என்ற ஒரு ராசாவுண்டு. அவன் வாசலிலே தினந்தோறும்

பதாதிகள் சதுரங்க சேனை சீமை பண்டி பண்டமெல்லாம் பத்திரகிரி ராசா விக்கிரமாதித்தனுக்கு பட்டங்கட்டுவித்து இந்தத்தேசமெல்லாம் நீயே அரசாண்டு கொண்டு இருமென்று சொல்லிவிட்டு தான் தபசுக்குப்போனார். அப்போ விக்கிரமன் ராச்சியபாரம் பண்ணிக் கொண்டு வருகிற காலத்தில் ராச்சியமெல்லாம் சுகத்தையடைந்திருந்தது.

அந்த தருவாயில் ஒரு சயிரணி விக்கிரமனைக் கண்டு அவர்முகாந்திரமாக ஒரு வேதாளம் வாகனமான காலத்தில் விசுவாமித்திர மகரிஷியீசுவரர் ஒரு கோவிலிலே தவசு பண்ணிக் கொண்டிருந்தார். அப்போ விக்கிரமன் அந்த மகரிஷியைக் கண்டு சுத்தி வந்து வணங்கி வாய் பொத்தி கை கட்டிக் கொண்டு நிற்கிறபோது விசுவாமித்திரர் ராசாவின் முகத்தைப் பார்த்து ‘‘முப்பத்திரண்டு லட்சணங்களும் விக்கிரமனுக்கு இருக்கிறபடியினாலே இப்படிக் கொற்ற ராசாவுக்குப் பதினாறு வயது பிர்ம்மதேவன் கட்டளையிட்டாரென்று சொன்னார். விக்கிரமன் இதைக் கேட்டு தன்னுடைய அரண்மனை வந்து பட்டியை அழைத்து ஆலோசணை செய்ய பட்டி, உச்சினி மாகாளி கோவிலுக்குப் போனால் அந்த காளி எல்லா விபரமும் சொல்லுவாளென்று சொல்லி விக்கிரமனும் பட்டியும் ஆலோசனை பண்ணிக் கொண்டு மகாகாளி கோயிலுக்குப் போனார்கள். அந்த கோவிலுக்கு முன்னே *‘‘ஏழு செப்புக்கிடாரத்திலே*

*திராவத்தைப் புதைத்து அதனடையில் ஒரு கம்பம் ஆயிரத்துநூறு அடியிலே நட்டு அந்த கம்பத்தின் முனையிலே ஆயிரங்கால் உறி கட்டி அந்த உறிக்குங்கீழே பூமியிலே ஒரு வசியை நட்டு வைத்திருக்கும். அந்தக் கம்பத்தின் பேரிலே ஏறி உரியிலே கழுத்தை மாட்டிக் கொண்டு இந்த வசியின் பேரில் விழுந்தவனுக்கு இந்தக் தனத்தையெடுத்துக் கொண்டு போகிறதென்று''* கல்லின்பேரில் எழுதியிருந்ததை விக்கிரமாதித்தன் வாசித்துப் பட்டியைப் பார்த்துச் சொல்லுகிறான்.

எனக்கு பதினாறு வயதென்று என்று விசுவாமித்திரர் சொன்னாலல்லவோ. இனி பத்து நாளிந்த பூமியிலே இருக்கப் போகிறது. நானிந்த கம்பத்தின் பேரிலே ஏறி உறியிலே கழுத்தை மாட்டிக் கொண்டு ஒரு வெட்டிலே உறியடி வெட்டிக் கொண்டு இந்த வசியின் பேரிலே விழுந்து பிழைத்தால் இந்த திரவியத்தை நீ எடுத்துப் போ. இல்லாவிட்டால் வசியுருகி நான் போனால் இந்த திரவியத்தை நீ எடுத்துப் போவென்று சொல்லிவிட்டு விக்கிரமாதித்தன் அந்த கம்பத்தின் பேரிலே ஏறி அந்த உறியிலே கழுத்தை மாட்டிக் கொண்டு அந்த உறியை வெட்டுகிறபோது வெட்டறாதபடியினாலே பட்டியைப் பார்த்தான். அந்த மட்டில் பட்டி அங்கே சுழட்டிக் காட்டினான். அந்த சைகையை விக்கிரமாதித்தன் கண்டு ஆயிரங்கால் உறியை முறிக்கிக் கொண்டு ஒரு வெட்டாய் வெட்டி உறியடித்துக் கீழே

விழுகிறபோது வசிக்கு முன் சாணில் வருகிறபோது பத்திரகாளி ஓடி வந்து தன் கையிலேந்திக் கொண்டு தன்னுடைய சிங்காதனத்தின் பேரிலே வைத்துக் கொண்டு விக்கிரமகேசரியினுடைய இன்ப சவுந்தரியமும் முப்பத்திரண்டு லட்சணமும் பார்த்து வெகு சந்தோஷத்துடனே ஆனால் நீயிந்த தனத்துக்கு நீயேயல்லாமல் அதிபதி வேறில்லையே நமக்கு ஒரு புரோகிதன் பஞ்சாங்கம் சொல்லுகிறான். இந்த தனத்துக்கு யார் ஒருவன் கர்த்தனாக வருகிறார்களோ அவர்களைக் கேட்டு மூணு சுறைக்காய் தனம் வாங்கிக் கொடுக்கிறேன் என்று வாக்கு கொடுத்திருக்கிறேன். நீ தனத்துக்குடையவனானபடியினாலே நீயும் மனம் பொறுத்து மூணு சுரக்காய் தனம் கொடுக்கிறாயோ என்று கேட்ட அளவிலே விக்கிரமகேசரி சந்தோஷப்பட்டு காளியை நோக்கி வணங்கி முச்சுரக்கா பணமோ பாரம். அந்த எழுகிடார தனமும் கொடுத்தேன் என்று அந்த தனத்தையெல்லாம் அந்த பிராமணனுக்கு தாரை வார்த்தான். அந்த பிராமணன் பணத்தையெல்லாம் எடுத்துக் கொண்டு போனான். அப்போது மகாகாளியம்மன் விக்கிரமாதித்தனைப் பார்த்து, இவன் சவுந்தரியத்திலே மன்மதனுக்கு சமமான மாக்களும் தூரதத்துவம் கொடையிலே கர்ணனுக்கு சமமான மாக்களும், இப்படியிருக்கப்பட்ட ராசவங்கிஷ மாணவன் பூலோகத்தில்

கிடையாதுயென்றும் காளி பார்த்து, 'நீ யார் தம்பி' என்று கேட்டாள்.

விக்கிரம கேசரி அம்மாளை வணங்கி, ''கோவிந்தசாமியென்று ஒரு பிராமணன். அவர் பிரதாபசாலியானபடியினாலே பிராமணம், சத்திரியம், வைசியம், சூத்திரன் என்ற இந்த நாலு சாதியிலேயும் நாலு பெண்ணைக் கொண்டான். அந்த நாலு பேரும் நாலு குமாரர்களையும் பெற்றார்கள். அதிலே நான் ராசகுமார ாகப் பிறந்தேன். எனக்கு பதினாறு வயதென்று விசுவாமித்திர மகரிஷி சொல்லக் கேட்டு உம்முடைய பாதாரவிந்தம் வணங்கி நீர் சொன்ன புத்திகேட்டேன். அந்தப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று வருகிறபோது உன் சன்னதிக்கு முன்னே தனம் புதைத்து வைத்து இருக்கிறதைக் கல்லிலேழுதியிருந்தபடியினாலே எனக்கு பத்து நாளையிலே சாகிறது நிச்சயமென்று துணிந்து கம்பத்தின் பேரில் ஏறி உரியில் கழுத்தை மாட்டிக் கொண்டேன். உரியற வெட்டி விழுகிறபோது நீ வந்து கையிலே ஏந்திக் கொண்டு வந்தாய்''. எனக்கு புத்தியென்னவென்று காளியைக் கேட்க காளியும் சந்தோஷப்பட்டு ஆதித்த பகவானிடம் அனுப்பி வைக்கிறேன். போகிறாயாவென்று காளி கேட்க, விக்கிரமகேசரி போகிறேனென்று சொன்னான்.

அப்போது காளியும் சந்தோஷப்பட்டு இருக்கிறபோது

அந்த வேளையிலே சூரிய மண்டலத்திலிருந்து சூரியனுடைய தெய்வ பூசைக்காக இந்த காளியின் வனத்திலே பூவெடுக்க நித்திய கட்டளையாக கன்னியர்கள் வருவார்கள். காளிதேவி அந்த கன்னியர்களைக் கண்டு அவர்களை அழைத்தாள். அழைத்து, நமக்கு ஒரு மனு கேட்கிறேன். நீங்களிந்த மனு கொடுக்கிறீர்களோவென்று கேட்க தெய்வ கன்னியர்கள் நல்லதென்று சொன்னார்கள். காளிதேவி கன்னியர்களைப் பார்த்தாள், இந்த ராசகுமாரன் அழகிலேயும் ஆண்மையிலேயும் குடையிலேயும் குணத்திலேயும் நல்லவன். இவன் சிறுபிள்ளை. இவனுக்கு பிரம்மதேவன் பதினாறு வயது நிர்ணயம் பண்ணியிருக்கிறார். இவனுக்கு பத்து நாளையிலே ஆயுசு முடிவாம். ஆனபடியினாலே இவனும் நம்மிடம் வந்தான். இவனுக்கு பூரணாயுசு வேணும். அது உங்களாலே ஆகவேணும். நீங்கள் சூரியனிடம் அழைத்துச் சென்றீர்களென்றால், சூரியனிவனைக் கண்டபோதே வெகு சந்தோஷப்பட்டு ஆயுசு நிர்ணயம் பண்ணி அனுப்பி வைப்பார், என்று காளிகாதேவி சொல்ல கன்னியர்கள் நல்லதென்று வெகு சந்தோஷப்பட்டனர். ராசகுமாரனை நூலேணியின் வழியாக அழைத்துப் போனார்கள்.

சூரிய மண்டலம் தூரமென்கிறபோது விக்கிரமகேசரியும் அனல் பட்டு மேனி கருகிப் போனான். அப்போ கன்னியர் இவனை இனி அழைத்துப் போனால் விழுந்து போவானென்று

அவனை அங்கே நிறுத்தி வைத்து கன்னியர்கள் போய் பூவை வைத்துவிட்டு சூரியனைக் கண்டார்கள். சூரியபகவானும் இவர்களைப் பார்த்து, "இன்றைக்கு நேரம் சென்றதென்ன" என்று கேட்க அதற்கு கன்னியர்கள், "காளிகாதேவி ஒரு ராச குமாரனைக் காட்டி இவன் வீரத்துவமெல்லாம் சொல்லி எங்கள் பின்னே அனுப்பினாள். அந்த ராசா எங்கள் பின்னால் நூலேணியில் வருகிறபோது அனல் பட்டு அனலினாலே சரீரம் கருகி நின்று போனான். அங்கே நிறுத்தி வைத்துவிட்டு நாங்கள் வந்தோமென்று சொன்னார்கள். அந்த சேதி சூரியபகவான் கேட்டு இப்படி வரத்தக்கதாக ராசாவும் இருக்கிறானோ இந்த பூமியிலேயென்று சூரியபகவான் குளிர்ந்த பார்வை பார்த்தவுடனே இந்த ராசகுமாரனுக்கு சீவகளை உண்டாக சூரியபகவானும் தன்னுடைய சுயரூபத்தையெல்லாம் மறைத்து ராச வடிவாயிருந்து அவனை அழைத்துவரச்சொல்லி கன்னியர்களை அனுப்பினார். அவர்கள் வந்து இங்கேயிருந்த ராசகுமாரனை அழைத்துப் போய் சூரியன் முன்னே நிறுத்திவிட்டார்கள்.

ராசகுமாரன் சூரியனை வணங்கி வாய்பொத்தி கைகட்டிக் கொண்டு இருந்தான். சூரிய பகவான் இவன் அழகும் ஆண்மையும் சவுந்தரியமும் முப்பத்திரண்டு லட்சணமும் உள்ளவனாயிருக்கிறதைப் பார்த்து நீ யார் தம்பியென்று கேட்க,

அப்போது விக்கிரமராசா, “கோவிந்தசாமி என்றொரு பிராமணன் அவன் பிரதாபசாலியானபடியினாலே பிராம்மண, சத்திரிய, வைசிய, சூத்திரன் இந்த நாலு சாதியிலேயும் நாலு பேர்களைக் கொண்டார். அந்த நாலு பேரும் நாலு குமாரரைப் பெற்றார்கள். அதிலே நான் ராசகுமாரனாகப் பிறந்தேன். எனக்குப் பதினாறு வயது என்று விசுவாமித்திர மகரிஷி சொல்லக் கேட்டு உம்முடைய பாராதவிந்தம் சேவித்தேன். நீர் சொன்ன புத்தி கேட்டு அந்தப்படி நடந்து கொள்ளுகிறேனென்று சொன்னான்”. அப்போது ஆதித்த பகவான் பிரம்மாவிடம் அழைத்துப் போய் காண்பித்தார்.

அவரும் பார்த்து, ‘நீ யார் தம்பியென்று’ கேட்க அதற்கு ஆதித்த பகவான், “பூலோகத்தில் கோவிந்தசாமி என்றொரு பிராமணன். அவன் பிரதாபசாலியானபடியினாலே பிரம்ம, சத்திரிய, வைசிய சூத்திரன் இந்த நாலு சாதியிலேயும் நாலு பேர்களைக் கொண்டான். அந்த நாலு பேரும் நாலு குமாரரைப் பெற்றார்கள். அதிலே இவன் ராசகுமாரனாகப் பிறந்து இப்படி இருக்கிறான். இந்ந ராசகுமாரனுக்குப் பதினாறு வயது என்று விசுவாமித்திர மகரிஷி சொன்னார். அந்தசேதி இவன் கேட்டு காளி கோவிலுக்குச் சென்றான். காளி இவன் சேதியைக் கேட்டு என்னிடம் அனுப்பினாள். நான் உம்மிடத்துக் காண்பித்தேன். இவனுக்கு நிறையாயுசு பண்ண வேண்டும்”

என்று சூரியபகவான் கேட்க அதுக்கு பிரம்மதேவன், ‘‘நம்மாலேயாகுமாவென்று சூரியபகவானும் பிரம்மதேவனும் விக்கிரமகேசரியைக் கூட்டிக் கொண்டு மகாவிஷ்ணுவிடம் போனார்கள்.

மகாவிஷ்ணு இவர்களைப் பார்த்து எங்கே வந்தீர்களென்று கேட்க அப்போது இவர்கள் இருவரும் விக்கிரமகேசரியை அழைத்து மகாவிஷ்ணு பாதத்திலே வணங்கி கைகட்டிக் கொண்டு நிற்கிறபோது இவன் முகத்தைப் பார்த்து மகாவிஷ்ணு சொன்னார். இவன் மன்மதனுக்கு சமமானமானவன். இவன் சூரதத்துவத்திலேயும் தரும தத்துவத்திலேயும் இப்படி முப்பத்திரண்டு லட்சணத்துடனேயிருக்கிறவனைப் பார்த்து இவன் எங்கே வந்தானென்று மகாவிஷ்ணு கேட்க அதுக்கு ஆதித்த பகவான், ‘‘இந்த ராசகுமாரனுக்குப் பதினாறு வயதென்று விசுவாமித்திரர் சொன்னாராம். அது கேட்டு காளிகோவிலுக்கு வந்தான். காளியம்மன் என்னிடத்து அனுப்பினாள். நான் பிரம்மதேவனிடம் அழைத்து வந்தேன். அவர் இவனைப் பற்றி எல்லாம் கேட்டு உம்மிடத்து அழைத்து வந்தோம். நீர் சொன்ன புத்தி கேட்கிறோம்’ என்று சொல்ல மகாவிஷ்ணுவும் இவர்களைப் பார்த்து சந்தோஷப்பட்டு இவர்களைப் பார்வதி தேவியிடம் அழைத்துப் போய் இந்த விந்தாந்தமெல்லாம் சொல்ல அவளும்

சந்தோஷப்பட்டு பரமேஸ்வரனிடத்துக்குப் போவோமென்று இந்த ராசகுமாரனையழைத்து மறைவிலே வைத்துவிட்டு சூரியபகவானும் பிரம்மதேவரும் மகாவிஷ்ணுவும் பரமேஸ்வரியும் இந்த நாலுபேருமாகப் போய் பரமேஸ்வரரைப் பார்த்தனர்.

நீங்கள் நாலுபேரும் வந்த காரணமென்னவென்று கேட்டார். அதற்கு பரமேஸ்வரி, பூலோகத்தில் ஒரு ராசகுமாரன் அழகும் ஆண்மையும் ரூபமும் சவுந்தரியமும் முப்பத்திரண்டு லட்சணமும் கொண்டுள்ளான். ஒன்றும் குறைவில்லை. அவனுக்கு பதினாறு வயதென்று கட்டளை பண்ணினீர்களாம். இனிப்பத்து நாளையிலே அவனுக்கு ஆயுசு சரியானபடியினாலே அவன் எங்களிடம் வந்தான். அவனுக்கு நிறைய வயசு கட்டளையிட்டு அனுப்ப வேண்டுமென்று" பரமேஸ்வரி கேட்டாள்.

ஆதித்த பகவான், பிரம்மதேவன், மகாவிஷ்ணு இவர்கள் மூன்று பேரும் ஈசுவரனுடைய பாதத்தைப் பிடித்துக் கொண்டுயிருக்க அந்த வேளையிலே நாரதத் துந்துபி வாத்தியம் 'சதாஸ்து' என்று சொல்ல, அந்த வாக்கியம் பழுது போகாதபடி விக்கிரமகேசரிக்கு சகாயகாக கட்டளையிட வேண்டுமென்று சொல்லி அம்மையும் விக்கிரமகேசரியை அழைத்து சுவாமி பாதத்திற்போட்டாள். விக்கிரமனும் சுவாமியின் பாதத்தைப் பிடித்துக் கொண்டு இருக்கிறபோது மனமிரங்கி பரமேஸ்வரன், *ஆயிரம் வருஷம் சிங்காதனத்தின் மேலிருந்து ராச்சியபரிபாலனம்*

பண்ணச் சொல்லி கட்டளையிட்டார்.

இந்த ஆயிரம் வருஷம் சென்ற பிறகு சாலிவாகனன் குசவன் வீட்டிலே வளருவான். அவன் கையாலே சாகும்வரம் கொடுத்து இதற்கு நடுவுலே எந்தவொரு ராசாவாலே சாகாதபடி வரங்கொடுத்து அனுப்பினார். அப்போது விக்கிரமகேசரி பரமேஸ்வரன் பாதத்திலே விழுந்து சரணாகதியென்று வணங்கினான். பரமேஸ்வரன் வாழ்த்தி விடைகொடுத்து விடை பெற்றுக் கொண்டு பரமேஸ்வரியை நமஸ்காரம் பண்ணினான். பரமேஸ்வரியும் என்றும் சிரஞ்சீவியாய் ஆயிரம் வருடம் ராச்சியபாரம் ஆளுவாயென்று வாழ்த்தி விடை கொடுத்து அனுப்பினாள்.

அம்மன் கையில் விடை பெற்றுக் கொண்டு பிரம்மாவுடன் பிரம்மலோகம் வந்து பிரம்மாபாதத்திலே வணங்கி சுவாமி உங்கள் தருமத்தினாலே தேவர்கள் பாதமெல்லாம் தரிசனம் கிடைத்தது. இனி எனக்கு புத்தி என்னவென்று கேட்க, பிரம்மதேவன் நீ ஆயிரம் வருஷம் ராச்சியபாரம் பண்ணி சுகமாயிருப்பாயென்று விடைகொடுத்து அனுப்பினார்.

பின்பு சூரியபகவான் விக்கிரமகேசரியை அழைத்துக் கொண்டு தேவேந்திர லோகமே வந்தார். தேவேந்திரனைக் கண்டு விக்கிரமகேசரி நமஸ்காரம் பண்ணினார். தேவேந்தின் விக்கிரமகேசரியைப் பார்த்து சந்தோஷப்பட்டு இவனுடைய ரூப

லாவண்ணிய முப்பத்திரண்டு லட்சணமுங்கண்டு அரம்பை ஊர்வசியை அழைத்து கேளிக்கை ஆடச் சொன்னார். இரண்டு பேரும் ஆடினார்கள். தேவேந்திரன் விக்கிரமகேசரியைப், பார்த்து இவர்கள் இரண்டு பேரில் பெரியவள் யாரென்று விக்கிரமகேசரியைக் கேட்க, "ரம்பை நட்டுவன் கற்பித்தபடியே ஆடினாள். ஊர்வசி, உற்சாகத்திலாடினாள். ஊர்வசியே பெரியவள்" என்று சொன்னார். தேவேந்திரன் விக்கிரமகேசரி பேரிலே சந்தோஷப்பட்டான். அழுக்கானால் வண்ணானுக்குக் போடாமல் நெருப்பிலே போட்டால் வெளுக்கத்தக்க ஒரு பச்சைவடமும் முப்பத்திரண்டு பதுமைகளுடனேயிருக்கிற சிம்மாதனமும் கொடுத்தனுப்பினார். அப்போது விக்கிரமகேசரி தேவேந்திரனிடம் விடை பெற்றுக் கொண்டு, ஆதித்தபகவானும் விக்கிரமகேசரியுமாக ஸ்ரீவைகுண்டத்துக்கு வந்து மகாவிஷ்ணுவை நமஸ்காரம் பண்ணினார்கள். அப்போது மகாவிஷ்ணு சந்தோஷப்பட்டு விக்கிரமகேசரியை ஆயிரம் வருஷம் ராச்சியம் பண்ணிக் கொண்டு பட்டியும் நீயும் சிரஞ்சீவியாய் இருப்பார்களென்று வரங்கொடுத்து அனுப்பிவித்தார்.

அவர் கையிலே விடை பெற்றுக் கொண்டு இரண்டு பேரும் சூரியனுடைய பட்டணத்துக்கு வந்து சூரியபகவான்

விக்கிரமகேசரியைப் பார்த்து நீ ஆயிரம் வருஷத்துக்கு ராச்சியபாரம் பண்ணிக் கொண்டு வருகிற நாளைக்கு நீ எம்மாத்திரம் தருமம் நினைத்தாலும் அம்மாத்திரம் தருமம் கைவசமாக வேணுமேன்று வரங்கொடுத்து அனுப்பினார். விக்கிரமகேசரி ஆதித்த பகவானை நமஸ்காரம் பண்ணி, "தேவரீர் கிருபா கடாட்சத்தினாலே அஷ்ட அயிசுவரியமும் கட்டளையிட்டு அனுப்பினீர்கள். இப்பால் எனக்கு என்ன புத்தியென்று கேட்க, ஆதித்த பகவான் விக்கிரமாதித்தனென்று பேர் கொடுத்து அனுப்பினார். அப்போ அவர் கையிலே விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டு நூலேணி வழியிறங்கி காளிகாதேவி கோவிலுக்கு வந்து காளிகாதேவியை நமஸ்காரம் பண்ணினான்.

காளிகாதேவி வாழ்த்தி, எழுந்திரு மகனேயென்று சொன்னாள். அவன் எழுந்திருந்து கைகட்டிக் கொண்டு நிற்கிறபோது நீ தெய்வலோகத்துக்குப் போனாயே, அங்கே நடந்த சேதி என்னவென்று கேட்டாள். விக்கிரமாதித்தன், "சூரியமண்டலத்துப் போனேன். சூரியன் கண்டு சந்தோஷப்பட்டு நீ எங்கே வந்தாய்யென்று கேட்டார். எனக்குப் பதினாறு வயதென்று விசுவாமித்திர மகரிஷி சொன்னார். அது நான் கேட்டுப் பத்திரகாளி கோவிலில் சீவனை விட்டு கொள்வோமென்று வந்தேன். பத்திரகாளி என் சேதிகேட்டு

உனக்கு நிறையாயுசு வாங்கித் தருகிறேனென்று சொல்லியிங்கே அனுப்பினாள்" என்று சொன்னேன். ஆதித்த பகவான் சந்தோஷப்பட்டு நிறையாயுசு வாங்கித்தருகிறேனென்று பிரம்மதேவரிடத்து அழைத்துப் போனார்கள். அவரும் மகாவிஷ்ணுவிடத்துக்கு அழைத்துப் போனார்கள். மகாவிஷ்ணு பிரம்மதேவன் சூரியபகவான் மூவரும் பரமேஸ்வரியிடத்து அழைத்துப் போனார்கள்.

அம்மன் என்னுடைய முப்பத்திரண்டு லட்சணமும் பார்த்து இப்படிப்பட்ட ராசகுமாரனுக்கு பதினாறு வயது எழுதுவதாவது என்று சொல்லி என்னை அப்பாலே வைத்துவிட்டு பரமேஸ்வரரிடம் போய் என் ரூபியெல்லாம் சொல்ல அவரும் என்னை அழைத்து என் முகத்தில் முப்பத்திரண்டு லட்சணமும் இருக்கப் பார்த்து சந்தோஷப்பட்டுக் கொண்டுயிருக்கிறபோது நாரத மகாமுனி தும்பினார். அப்போது பரமேஸ்வரன் சதாசிவாயென்று சொன்னார். அதே ஆயிரம் வருஷமென்று எண்ணிக்கொண்டு பரமேஸ்வரி பரமேஸ்வரன் பாதத்தைப் பிடித்துக் கொண்டாள். அப்போ பரமேஸ்வரன் மனமிரங்கி என்னைப் பார்த்து சொன்னார். நீ ஆயிரம் வருஷம் சிம்மாசனத்திலேயிருந்து ராச்சியபாரம் பண்ணினபிறகு சாலிவாகனன் கையிலே சாவாய். இது நடுவே எவன் கையிலேயும் சாவில்லை என்று சொன்னார். அதன் பிறகு

அவர் கையிலே விடை வாங்கிக் கொண்டு அம்மனைச் சேவித்தேன். அம்மனும் சிரஞ்சீவியாய் ஆயிரம் வருடம் இருப்பாயென்று சொன்னாள். ஈஸ்வரியிடமிருந்து விடை வாங்கிக் கொண்டு பிரம்மதேவரிடம் வந்து நமஸ்காரம் பண்ணினேன். அவரும் ஆயிரம் வருஷம் ராச்சியம் ஆண்டுக் கொண்டு இருப்பாயென்று விடைகொடுத்தார். அவரிடம் விடை பெற்றுக் கொண்டு மகாவிஷ்ணுவிடம் வந்தேன். அவரும் ஆயிரம் வருஷம் ராச்சியபாரம் பண்ணிக் கொண்டுயிருப்பானென்று வரங்கொடுத்து அனுப்பினார். அவரிடமும் விடை பெற்றுக் கொண்டு தெய்வலோகத்துக்கு வந்தேன். தேவேந்திரன் பார்த்து முப்பத்திரண்டு லட்சணமிருக்கிறதையும் அறிந்து ரம்பை ஊர்வசியை அழைத்து கேளிக்கை ஆடச் சொன்னார். ரம்பை நட்டுவன் பழக்கினபடியும், ஊர்வசி உற்சாகமாகவும் ஆடினாள். ஆதலால் ஊர்வசியே பெரியவளென்று சொன்னேன். அவர்கள் சந்தோஷப்பட்டு ஒரு பச்சைவடம் கொடுத்து இது அழுக்கானால் வண்ணானுக்குப் போட்டால் வெள்ளையாகாது. நெருப்பிலே போட்டால் வெள்ளையாகுமென்று சொன்னார். முப்பத்திரண்டு பதுமைகளுடனே ஒரு சிம்மாசனம் கொடுத்தனுப்பினார். அவரிடம் விடை பெற்றுக் கொண்டு சூரியமண்டலத்துக்கு வந்து சூரியபகவானை நமஸ்காரம் பண்ணினேன். அவரும் ஆயிரம்

வருஷம் ராச்சியபாரம் பண்ணிக்கொண்டு இருப்பாயென்று சொல்லி விக்கிரமாதித்தன் என்று பேருங்கொடுத்து அனுப்பினார். அவரிடம் விடை பெற்றுக் கொண்டு இங்கே வந்தேன்.

தாயே எனக்கு புத்தி என்னவேன்று கேட்க அதுக்கு காளிகாதேவி சந்தோஷப்பட்டு நீ எந்த காரியம் நினைத்தாலும் அந்த காரியம் பழுது வராது என்று வரங்கொடுத்து அனுப்பினாள். அப்போ விக்கிரமாதித்தன் காளியை வணங்கிக் கொண்டு பட்டியிடம் வந்தார்.

அதுபரியந்தரமும் பட்டி அந்த கம்பத்தடியிலே நின்றான். அப்போ பட்டியிடம் தெய்வலோகத்துக்குப் போனதும் பரமேஸ்வரனும் பார்வதியும் தேவேந்திரன் மகாவிஷ்ணு பிரம்மதேவன் ஆதித்தபகவான் இவர்கள் எல்லாம் கூடி வரங்கொடுத்ததும் இந்த விதமெல்லாம் சொல்லி ஆயிரம் வருஷம் சிம்மாசனத்தின் பேரிலிருந்து ராச்சியபாரம் பண்ணச் சொல்லிக் கட்டளையிட்டதும் அதன்பிறகு சாலிவாகனன் கையிலே சாவென்று பரமேஸ்வரன் சொன்னதும் இந்த விதமெல்லாம் சொன்னார். அந்த சேதியெல்லாம் பட்டி கேட்டு, *'பரமேஸ்வரன் ஆயிரம் கட்டளையிட்டாரே நான் ஆயிரம் வருஷம் பூலோகத்திலே இருக்க வரம் தந்தேனென்று'* ***சொன்னார்.*** விக்கிரமாதித்தன் சந்தோஷப்பட்டு பட்டியைப் பார்த்து நீ ஆயிரம்

வருஷம் சொன்னாயே அதெப்படி என்று கேட்க, அதுக்குப் பட்டி, "நாடாறுமாதம் காடாறுமாதம் இருந்தால் இரண்டாயிரம் வருடம் இருக்கலாமென்று" சொல்ல அப்படியே ஆகட்டுமென்று பட்டியும் விக்கிரமாதித்த ராசாவும் உச்சனியிலே வந்து அப்படியே நாடாறு மாதம் காடாறு மாதமாயிந்த இரண்டாயிரம் வருடம் தேவேந்திரன் கொடுத்த சிம்மாசனத்திலிருந்து ராச்சியபாரம் பண்ணிக் கொண்டு வருகிறான்.

இற்த நாளையிலே குசவன் வீட்டிலே சாலிவாகனன் வளருகிறது. விக்கிரமாதித்தன் கேட்டு இந்தப் பிள்ளையை ஆக்கினை பண்ண வேணுமென்று தன்னுடைய தளமெல்லாங்கூட்டிக் கொண்டு விக்கிரமாதித்தன் வருகிற சேதி சாலிவாகனன் கேட்டு தான் விளையாடின மண் குதிரை, மண்யானை, மண்காவாள், மண்கத்தி, மண்கேடயம், வில்லு, அம்புராத்தோணி இதுகளுக்கு உயிருண்டாக வேணுமென்று எண்ணினான். அதற்காக காவேரியிலே முழுகி பூசை முடித்துக் கொண்டு பரமேஸ்வனையும் மகாவிஷ்ணுவையும் தோத்திரம் பண்ணிக்கொண்டு செம்பிலே நீரும் திருநீற்றுப்பையையும் பிரம்பும் கையிலே பிடித்துக் கொண்டு வந்து தான் விளையாடின மண்குதிரை யானை சேனைகளுக்கெல்லாம் அபிமந்திரித்து விபூதியிரைத்து தண்ணீரைத் தெளித்துப் பிரம்பாலே தட்ட அதுவெல்லம் உயிருண்டாகி ஆயுதத்துடனே வெளியே

புறப்பட்டது.

அப்போது சாலிவாகனன் வாயுவேகமென்கிற குதிரை மேலேறிக் கொண்டு தன்னுடைய ரத கெச துரகபதாதியுடனே வந்து விக்கிரமாதித்தன் சேனையெல்லாம் கொன்று விக்கிரமாதித்தன், தலையை வெட்டியெறிந்தான். அந்தத் தலை விக்கிரமாதித்த தேவி மஞ்சரியென்கிறவள் மடியிலே போய் விழுந்தது. அது கண்டு அழுது பட்டி வந்து அவள் அழுகையிலே அவளுக்கு புத்தி சொன்னான். அப்போ மஞ்சரியென்கிறவள் பட்டியைப் பார்த்து இந்த பிள்ளையை நீ வளர்த்துக்கோவென்று அவன் கையிலே பிடித்துக் கொடுத்துவிட்டு அவள் விக்கிரமாதித்தனுடனே அக்கினிப்பிரவேசமானாள்.

அப்போ அந்தப் பிள்ளையை வைத்துக் கொண்டு பட்டியும் ராச்சியபாரம் பண்ணிக்கொண்டு இருக்கிறபோது 'விக்கிரமாதித்தன் இருந்த சிம்மாசனத்தின் பேரில் இந்தப்பிள்ளை இருக்கக்கூடாது. இதை ஒரு இடத்திலே குழியை வெட்டிப் புதைத்துப் போடுங்கள்' என்று அசரீரி வாக்கியமாகச் சொல்ல அந்த பிள்ளையும் பட்டியுமாய் ராச்சியப்பாரம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். அந்த சிம்மாசனத்தை புதைத்த இடம் மேடிட்டுக் கொல்லையாய் போயிற்று. அந்தக் கொல்லையை ஒரு பிராமணனுக்கு தாரை வார்த்துக் கொடுத்தார்கள். அந்த பிராமணன் அதிலே பயிர் போட்டுக்

கொண்டுயிருக்கிறபோது இந்தப் பிள்ளையும் பட்டியும் சென்றார்கள். அதன்பிறகு பிராமணன் அந்தக் கொல்லையிலே கம்பு சோளம் வெள்ளரி பலதானியமும் போட்டுக் கொண்டு காவலிருப்பான். அந்த கொல்லையிலே நடுவிலே மேடாயிருந்தது. அதிலே பந்தல் போட்டுக் கொண்டு காவலிருப்பான்.

அப்போது உச்சனிக்கு வடக்கே காதவழியிலே தருமபுரி என்றொரு பட்டணமுன்டு. அந்தப் பட்டணத்தை போசராசா ஆளுகிறார். அந்த ராச்சியத்திலே போசராசா தரும சிந்தனையுடனே இருக்கிறபோது ஒருநாள் ராசா மந்திரியை அழைத்து இன்றைக்கு வேட்டைக்கு போக வேண்டும். ரத கெச துரக பதாதிகள் முஸ்தீது பண்ணிக் வேட்டைக்காரர் பன்றிவலை முயல்வலை மான்வலை காடை கவுதாரி கன்னிகள் நாய்களும் பிடித்துக் கொண்டு தலையிலே தோல் குல்லாவும் கட்டி, கல்லடம் காலில் பில்லை செருப்பும் போட்டுக்கொண்டு பாங்கு கையிலே பிடித்துக் கொண்டு முஸ்தீப்புடனே வந்து ராசாவைக் கும்பிட்டார்கள். அப்போது ராசாவும் மந்திரியும் பயணமாகி புறப்பட்டு வந்து காட்டிலே வேட்டையாடி திரும்புகிறபோது அந்தப் பிராமணன் கொல்லைவழியாய் வந்தார்கள்.

அந்த பிராமணன் கொல்லையின் நடுவே பந்தல் போட்டுக் கொண்டு பந்தலிலே இருக்கிறவன் போசராசாவின்

சேனைகளையெல்லாம் கண்டு இந்த பிராமணன், ஓகோ பரிவாரமே! ராசாக்களே! நீங்கள் வேட்டைக்குப் போய் அலைந்து இளைப்பாய் போகிறீர்கள். என் கொல்லையிலே கம்பு சோளம் அவரை துவரை கடலை வெள்ளரிக்காய் இதுவெல்லம் இருக்கிறது. வேணுமென்கிறது சாப்பிட்டு மடுவிலே தண்ணீர் குடித்துப் பசியாறுங்களென்று பிராமணன் சொன்னான். அப்போது சேனைகளெல்லாம் வந்து கொல்லையிலே புகுந்து வேண்டியது தின்று மடுவிலே தண்ணீர் குடித்துக் கொண்டிருக்கிறபோது பிராமணன் சலபாதைக்குப் பந்தல்விட்டிறங்கி வெளியே வந்து பார்த்தான்.

போசராசன் சேனைகள் கொல்லையிலே புகுந்து அழிக்கிறதைப் பார்த்து அபயம் அபயம் ஓகோ ராசாவே உம்முடைய சேனையெல்லாம் என் கொல்லையிலே புகுந்து அழித்துப் விட்டார்கள் என்று கூப்பிட்டான். போசராசா கேட்டுத் தன் சேனைகளை அழைத்துக் கேட்டார். அவர்கள், "நாங்கள் வழியோடே போகிறச்சே இந்த பிராமணன் பந்தலிலேயிருந்து எங்களைக் கூப்பிட்டு நீங்கள் வேட்டைக்குப் போய் இளைப்பாய் போகிறீர்கள் என் கொல்லையில் வேண்டிய பதார்த்தமிருக்கிறது. சாப்பிட்டு மடுவிலே தண்ணீர் குடித்து மரத்தடியிலேயிருந்து இளைப்பாறிப் போங்களென்று சொன்னான். ஆனபடியினாலே நாங்கள் வந்தோமென்று" சொன்னார்கள்.

அந்த சேதி போசராசன் கேட்டு தன் மந்திரி புத்திரிகன் என்கிறவனை அழைத்து இந்த பிராமணன் பந்தலிலேயிருக்கிறபோது தானாக கூப்பிட்டுப் பசியாறிப் போங்களென்று சொல்லி அதன்பிறகு பந்தலைவிட்டு இப்பால் வந்து இப்படி கூச்சல் போடுகிறானென்று சொல்லி இந்த ராசாவும் மந்திரியும் ஆச்சரியப்பட்டனர். அதனால் இதை அறியவேணுமென்று அந்த பிராமணனைப் பார்த்து நீர் இந்த பந்தலிலே போய் இருமென்று சொன்னார்கள். அப்படியே பிராமணன் பந்தலிலே போயிருந்து ராசாவைப் பார்த்து சொல்லுகிறான். போசராசாவே உம்மைக் கண்டமாத்திரத்திலே என்னுடைய தரித்திரம் நிவாரணையாச்சுதென்று சொல்ல அந்த ராசாவும் மந்திரியும் ஆலோசனை பண்ணிக் கொண்டு பிராமணனை இப்பாலே அழைத்து இந்த கொல்லைக்குப் பத்து லட்சம் பொன்னுக்கு விட்டு சந்திர சூரியனுள்ளவரைக்கும் நடக்கத்தக்கதான காத.... பிராமணனுக்கு எழுதிக் கொடுத்துப் போட்டு அந்த கொல்லையை வாங்கிக் கொண்டு பிராமணனை அனுப்பிவித்தார்கள். அதன்பிறகு அந்தப் பந்தலின்மேல் ராசா போயிருந்து பார்க்கிறபோது திரிலோகமும் தானே ஆளவும் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் பண்ணவும் சகல சனங்களுக்கும் உபகாரம் பண்ணவும் மகாதரும சிந்தனையாக நடக்கவும் தோணிற்று. அப்போ போசராசன் மந்திரி புத்திரகன்

என்கிறவனை அழைத்து இந்தத் தலத்திலே இப்படியிருக்கிற விதமென்னவென்று கேட்க அதுக்கு மந்திரி, இவ்விடம் தெய்வீகமான ஸ்தலம். இவ்விடத்தில் அதிசயமுண்டு. அதை வெட்டி சோதிக்க வேணுமென்று மந்திரி சொல்ல அப்போ அந்த இடத்தைத் தோண்டச் சொன்னார்கள். ஒரு ஆளு மட்டம் வெட்டுகிறபோது அதிலே ஆயிரம் சந்திரோதயமானதைப் போல ஒரு சிம்மாசனமிருந்தது.

அந்த சிம்மாசனத்தை எடுக்க வேண்டுமேன்றபோது அதை அசைக்க அது அசையாதிருந்தபடியினாலே அப்போ மந்திரி, இது தெய்வீகமான சிம்மாசனம். இதுக்கு இவ்விடத்திலே பிராமண போசனம் பண்ணிவித்துப் பூசையும் பண்ணி பலியுங்கொடுத்தாலோழிய எடுக்கக் கூடாதென்று சொன்னான். போசராசாவும் வெகு சந்தோஷப்பட்டு அப்படியே பிராமண போசனமும் மகாதானம் பண்ணிவித்து ரெட்டை பலியுங்கொடுத்து பூசைகள் பண்ணிவித்து அதன்பிறகு சிம்மாசனமெடுத்தார்கள். அந்த சிம்மாசனத்தை நூலேணியின் பேரில் எடுப்பித்துக் கொண்டுபோய் தருமபுரி பட்டணஞ் சேர்ந்தார்கள். ஆயிரங்கள் தூணிறுத்தி அதிலே நவரத்தினங்களிட்டுயிழைத்து மண்டபங்கட்டி வைத்து அந்த மண்டபத்திலே சிம்மாசனத்தை வைத்து பூசை நைவேத்தியம் கொடுத்து பட்டணத்திலேயுள்ள பிராமணரையும் குடியானவர்கள்

சகல ராசாக்களும் காரியக்காரர் மற்றுமுண்டான சகல சனங்களும் யானை குதிரை சதுரங்க சேனாதிபதிகளும் வந்து நிறை கொலுவாக நின்று கொண்டுயிருக்கிறபோது.

## முதல் பதுமை கதை

போசராசன் சிம்மாசனமேற வேணுமென்று முகப்பு படியிலிருக்கும் பதுமை தலையிலே கையை வைத்தவுடன் அந்தப் பதுமை சொல்லும்,

"ஓகோ போசராசனே இந்த சிம்மாசனம் உமக்கு ஏற பிறாப்தியில்லை. அது எதனாலே என்றால் விக்கிரமராசாவைப் போலே தான தருமமும் பர உபகாரமும் பண்ண வல்லமையுண்டானால் இந்த சிம்மாசமேறலாம். இல்லாவிட்டால் ஏறத்தேவையில்லை" என்று சொன்னது. அப்போ போசராசனும் அதெப்படியென்று கேட்க முதல் பதுமை ஒரு கதை சொல்லுகிறது. "விக்கிரமாதித்தன் ராச பரிபாலனம் பண்ணுகிறபோது தேசங்களிலே என்ன புதுமையுண்டோவென்று வேதாளத்தைவிட்டு விசாரித்து வரச் சொல்லுவார்.

அப்போது வேதாளம் சீமையெல்லாம் விசாரித்துக் கொண்டு வருகிறபோது ஓமகிரியென்றொரு பட்டணம். அதிலே புதுமை கண்டு வந்து வேதாளம் விக்கிரமாதித்தனுக்கு சொல்லியது. அது என்னவென்றால், "சித்திரகுத்தியென்றொரு மலை. அந்த மலையிலே படிகத்தாலே ஒரு கோவிலுண்டு.

அந்த கோவில் முன்னே தாமரைதண்டின் வழியாக தண்ணீர் வந்து விழும். அதிலே முழுகினபேருக்குப் புண்ணியஞ் செய்திருந்தால் பாலாய் விழும். பாவம் செய்திருந்தால் கரியாய் விழும். அந்த கோவிலுக்கு முன்னே ஒரு பிராமணன் ஓமம் பண்ணிக் கொண்டிருக்கிறான். அந்த பிராமணன் ஓமம் வளர்க்கிற சாம்பல் மலை போலே குவிந்திருக்கிறது. அந்த பிராமணனை நீ எத்தனை நாளாய் ஓமம் பண்ணிக் கொண்டுயிருக்கிறாயென்று கேட்டேன். அவன் ஒன்றுஞ் சொல்லாமல் மவுனமாயிருந்தானென்று வேதாளம் சொன்னது.

அப்போது அந்த வேதாளத்தை அழைத்துக் கொண்டு விக்கிரமாதித்த ராசாவும் சித்திரகுத்தியென்ற மலையிலே வந்து அந்தத் தண்ணீர் விழுகிற இடத்திலே வந்து விக்கிரமாதித்தன் முழுகினான். பாலாயிருந்தது. அதன் பிறகே காளிகாதேவியை நமஸ்கரித்து ஓமம் பண்ணுகிற பிராமணனிடத்துக்கு வந்து, "ஓகோ பிராமணா நீ எதனால் ஓமம் வளர்க்கிறாய் என்று விக்கிரமாதித்தன் கேட்டான். பிராமணன், "ராசாவே நான் தேவி பிரத்தியட்சமாக தேவியை நோக்கி நூறு வாஷமாய்த் தவசிருந்து ஓமம் வளர்க்கிறேன். இன்னமும் பிரத்தியட்சமாகவில்லை" என்று அந்த பிராமணன் சொன்னான். அதைக் கேட்டு விக்கிரமாதித்தன், மகாகாளியை நமஸ்கரித்து வேண்டிக் கொண்டு தன் கழுத்தை அறுத்துக் கொள்ளுகிற தருவாயில்

தேவி ஓடிவந்து விக்கிரமாதித்தன் கையைப் பிடித்துக் கொண்டு ஓகோ ராசாவே இப்படிப்பட்ட காரியம் செய்வார்களோவென்று சந்தோஷப்பட்டு உமக்கு வேண்டிய வரம் கேளுமென்று சொன்னாள். விக்கிரமாதித்தன், ''வாராய் காளிகாதேவி, அம்மா இந்த பிராமணன் வெகு நாளாய் ஓமம் வளர்க்கிறானே நீ பிரத்தியட்சமாகாதே போனதேன் என்று கேட்க தேவி, "வாராய் விக்கிரமாதித்தா இந்த பிராமணன் பல நினைவாயிருந்து ஓமம் வளர்த்தான். ஆனபடியினாலே நான் பிரத்தியட்சமாகாதே போனேனென்று சொல்ல ராசாவானவன் தேவியை நமஸ்காரம் பண்ணி இந்த பிராமணனுக்கு அவன் கேட்ட வரம் கொடுக்க வேணுமென்று கேட்க தேவி கேட்டு பிராமணனுக்கு வேண்டியவரங் கொடுத்து அனுப்பிவித்தாள்.

விக்கிரமாதித்தனும் காளிகாதேவியை நமஸ்கரித்து விடை பெற்றுக் கொண்டு தன்னுடைய உச்சனி மாகாளி பட்டணம் வந்து சேர்ந்தார். நீயும் அப்படி சகாயம் பண்ண வல்லவனானால் சிம்மாசனம் பொறுக்கும். இல்லாது போனால் பொறுக்காது. ஏறத் தேவையில்லை" என்று முதல் பதுமை சொல்ல போசராசன் வெட்கிப் போனான்.

முதல் பதுமை கதை முற்றும்

## இரண்டாம் பதுமை கதை

பின்னேயும் சிறிது நாளைக்குப்பிறகு போசராசா சிங்காதனமேறவேண்டுமேன்று பதுமையருகிலே வந்து சிங்காதனமேருகிற தருவாயிலே இரண்டாம் பதுமை,

"வாராய் போசராசாவே இந்த சிம்மாசனம் ஏறுதற்கு உனக்குப் பிறாப்தியில்லை. அது எப்படியென்றால் விக்கிரமராசாவைப் போல தானதரும பர உபகாரம் பண்ண உன்னால் சவுரியமுண்டாயிருந்தால் இந்த சிம்மாசனம் ஏறலாம். இல்லாவிட்டால் ஏறத்தேவையில்லை என்று இரண்டாம் பதுமை சொல்ல அதுக்குப் போசராசன் அதெப்படி என்று கேட்க அதுக்குப் பதுமை,

"விக்கிரமாதித்த ராசா ராச்சியபாரம் பண்ணுகிற காலத்திலே மதுராபுரியென்ற பட்டணமுண்டு. அந்தப் பட்டணத்திலே பிரசன்னகுமாரனென்று ஒரு ராசா. அவனுக்கு ஒரு குமாரத்தியுண்டு. அவள் பெயர் சித்திரலோசினி. அவளுக்கு பன்னிரண்டு வருடம் கன்னிகழியாதே இருந்தபடியினாலே உப்பரிகை கட்டி வைத்து அதிலே அந்தப் பெண்ணை வைத்தான்.

அந்த உப்பரிகையின் பேரில் விளையாடிக் கொண்டிருக்கிறபோது அந்த தேசத்திலே கவுசிகன் என்றொரு பிராமணன் அவளைக் கண்டு மோகித்து அந்தப் பெண்ணை எந்த வகையிலேயும் விவாகம் பண்ணுவோமென்று

விசுவகர்மனிடத்துக்கு வந்து தினம் பஞ்சாங்கம் சொல்லிக் கொண்டு வருகிற நாளையிலே ஒருநாள் ஆசாரி பிராமணனைப் பார்த்து ஒகோ அய்யா நீர் எது கொடுத்தாலும் வாங்குகிறதில்லையென்று சும்மா போகிறீரே என்னால் ஆக வேண்டிய காரியமென்னவென்று கேட்டான். அதற்குப் பிராமணன், எனக்கு உன்னாலே ஒரு காரியம் ஆக வேண்டியிருக்கிறபடியினாலே நான் எதுவும் வாங்கமலிருக்கிறேன். எனக்கு இரும்பினாலே ஒரு கருடனும் ஒரு சங்கு சக்கரமும் பண்ணிக் கொடுக்க வேணுமென்று சொன்னான். அப்படியே ஆசாரி பண்ணிக் கொடுத்தான்.

பிராமணன் அதை வாங்கிக் கொண்டு தன் வீட்டிக்குப் போய் அதை உருவேத்தினான். அது உயிராச்சுது. அந்தக் கருடன் மேலேறிக் கொண்டு சங்கு சக்கரமும் பிடித்துக் கொண்டு வாயு மார்கத்திலே கிளம்பினான். அந்தப் பெண்ணிடம் சென்று நான் பள்ளி கொண்டிருக்கிறபோது உன்னுடைய சேதி எனக்குத் தெரியப்பட்டது. ஆனபடியினாலே இங்கே வந்து உன்னைக் கண்டேன். என் பேர் மகாவிஷ்ணு. நீயும் மகாலட்சுமி வடிவாயிருக்கிறாய். ஆனபடியினாலே உன்னை விவாகம் பண்ணவேண்டுமென்று வந்தேனென்று சொன்னார். அப்போது ராசகுமாரத்தி சந்தோஷப்பட்டு அவள் போய் தன்னுடைய தாயாருக்கும் தகப்பனாருக்கும் சொன்னாள்.

அவர்கள் வெகு சந்தோஷப்பட்டு இவரை வந்து பார்த்து மகாவிஷ்ணுவேயென்று இவரே வந்து கேட்டால் கொடுக்கறதில்லையென்று சொல்லுகிறோமா என்று தாயும் தகப்பனும் சம்மதித்து அப்படியே கவுசிகனென்ற பிராமணனுக்கு கலியாணம் பண்ணிக் கொடுத்தார்கள்.

அவர்கள் இரண்டு பேரும் ஏகபோகமாயிருந்தார்கள். இப்படியிருக்கிற நாளையிலே அந்தப் பெண்ணுடைய தகப்பன் பிரசன்னனென்கிற ராசா மகாவிஷ்ணுவே மருமகன் ஆனதினாலே நமக்கு யாரும் எதிரில்லையென்று சுத்திலும் இருக்கிற ராசாக்களெல்லாரையும் சண்டை பண்ணி சீமையெல்லாம் கட்டிக் கொண்டு ராச்சியபாரம் பண்ணிக் கொண்டு இருக்கிற நாளையிலே ராச்சியத்திலே இருக்கிற ராசாக்களெல்லாருங்கூடி பிரசன்ன ராசாவின் பேரிலே பாளையமெடுத்துக் கொண்டு வந்து கோட்டையைச் சுற்றி இறங்கி சண்டை செய்தனர்.

பிரச்ன்ன ராசா கோட்டைக்குள்ளே வந்து புகுந்து கோட்டை நாலு வாசலும் மூடிக் கொண்டிருக்கிறபோது ராசா தன் குமாரத்தியை அழைத்து உன்னுடைய பர்த்தாவாகிய மகாவிஷ்ணு இருக்கையிலே நம்முடைய கோட்டையிலே பாளையப்பட்டு ராசாக்கலெல்லாம் வந்து கோட்டையைச் சுற்றியிறங்கி முற்றுகை போட்டுயிருக்கிறார்களே. இப்போது உன் புருஷன் மகாவிஷ்ணுயிருந்தும் நமக்கு இப்படி வந்தென்று

கஷ்டப்பட்டுக் கொண்டுயிருக்கிற போது அந்தப் பெண் இந்த சேதியை தன்னுடைய பர்த்தாவிடம் சொல்லி அழுதாள்.

அப்போ கவுசிகனென்கிற பிராமணன் கேட்டு கெருட வாகனத்தின்மேலேறி சங்கு சக்கரம் கையிலே பிடித்துக் கொண்டு ஆகாசத்திலே கிளம்பி பாளையத்துக்கு மேல் நின்று நாம் திருப்பாற்கலிலே பள்ளி கொண்டிருப்போம். நாம் பிரசன்னராசா மகளைக் கலியாணம் பண்ணியிருக்க அந்த ராசாவுடனே நீங்கள் சண்டை பண்ணினால் நாம் பார்த்திருக்கப் போவதில்லை. நீங்கள் மரியாதையுடனே போகிறீர்களோ இல்லாது போனால் உங்கள் பேரில் சக்கரத்தைவிட்டால் எல்லாரையும் சம்காரித்துவிடும். நீங்கள் சும்மா உங்கள் தேசமே போய்ச் சேருங்கள். போகாமலிருந்தால் நாளைக்கு வந்து உங்களைச் சம்காரம் பண்ணி விடுவேனென்று சொல்லிவிட்டு கவுசிகனென்கிற பிராமணன் அரண்மனைக்குப் போனான். அப்படியும் அவர்கள் போகாமல் கோட்டையின்பேரில் வெகுவாய் சண்டி பண்ணினார்கள்.

அப்போது திருப்பாற்கடலிலே பள்ளி கொண்டிருக்கிற மகாவிஷ்ணு அறிந்து எழுந்திருந்து பார்த்து கவுசிகனென்ற பிராமணன் முறிந்து போனால் மகாவிஷ்ணு முறிந்து போனாரென்று லோகத்துக்கு அபகீர்த்தியாகப் போகிறதென்று மகாவிஷ்ணு கெருட வாகனத்திலேறிக் கொண்டு இந்த

அதுக்குத் தாயார் திரவியங்கள் கொடுக்கிற கலசத்தை வாங்கி வாவென்றான். பெண்சாதி வஸ்திரங்கள் கொடுக்கிற கலசத்தை வாங்கிவாவென்றாள். தனக்கு யானை குதிரை கொடுக்கிற கலசத்தின் பேரில் விருப்பம். இவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு வந்து விக்கிரமாதித்தராசாவுடனே இவர்கள் சொன்ன சேதியெல்லாம் சொன்னார். அந்த ராசா கேட்டு அந்த நாலு கலசத்தையும் அவன் கையிலே கொடுத்தார்". அப்படி நீயும் தியாகம் கொடுக்க வல்லவனானால் இந்த சிம்மாசனம் ஏறலாம் என்று இரண்டாம் பதுமை சொல்ல பேசாமல் வெட்கிப்போனான்.

இரண்டாம் பதுமை கதை முற்றும்

## மூன்றாம் பதுமை கதை

பின்னையும் சிறிது நாளைக்குப் பிறகு போசராசா சிம்மாசனமேற வேணுமென்று வருவான். அப்போ மூன்றாம் பிரதமை சொல்லும் கதை.

"ஓகோ போசராசனே கேளும். விக்கிரமாதித்தராசா காடாறு மாதம் நாடாறு மாதம் திரிகிற காலத்திலே மலைகள் கற்களுள்ள காடுகளில் திரிந்து மகாபருவதத்தின் கீழே போகிறபோது அஸ்தமனமாகும் சமயத்தில் வந்தார். அஸ்தமனமாகி ஒரு சாமத்துக்குப் பிறகு ஒரு ஆலமரத்தின் கீழே வந்திருந்தார். அவ்விடத்தில் வெகு இருளாயிருந்தது. அந்த ஆலமரத்தின் மேலே தேசத்திலுண்டான பட்சிகளெல்லாம்

வந்திருக்கும் அதிலே ஒரு கருடனிருக்கும். அந்த கருடனை இந்தப் பட்சிகளையெல்லாம் ராசாவாய் வைத்திருக்கும். பொழுதுபோன பிறகு பட்சிகள் நாலா பக்கமும் மேய்ந்து திரிந்து அந்த ஆலமரத்திலே வந்து சேரும். அப்போ கருடன் நாலா பக்கமும் நாலாதேசமும் திரிந்து வருகிற பட்சிகளை அழைத்து அவரவர் போய்வந்த திசைகளிலே புதுமைகள் ஏதாகிலும் உண்டாவென்று கேட்டது.

அதிலே செம்புகன் என்கிற பட்சி சொல்லும். “இன்று காலமே பருவதத்துக்கு வடக்கே மூவாயிர யோசனை தூரத்தில் ஒரு குளமிருக்கிறது. அந்த குளத்தில் தாமரை புஷ்பமிருக்கிறது. குளத்தைச் சுற்றித் தென்னை மரங்களும் பல புஷ்ப வகைகளுமாக இருக்கிறது. அதிலே ஒரு கழுகு இரையெடாமலிருந்தது. அதை நான் பார்த்து இப்படியிருக்கிற விவரமென்னவென்று கேட்க அப்போது அந்த கழுகு மெத்த விசனப்பட்டு சொல்லிற்று. அதெப்படியென்றால் அவ்விடத்தில் பகாசூரன் என்கிற ராட்சதன் வந்து நித்திய கட்டளைபடிக்கு சண்டை பண்ணிக்கொண்டு தினமொரு மனுஷனையும் ஒரு மிருகமும் பட்சியையும் கொன்று தின்பானென்று சொல்லிற்றென்று” சொன்னது.

அந்தச்சேதி பட்சிகளையுடைய பாஷை அறிந்தவனான விக்கிரமாதித்தராசா கேட்டு வேதாளத்தை அழைத்து அதன்

மேலேறிக்கொண்டு நிமிஷத்திலே அவ்விடம் போய் அந்த பகாசூரனிருக்கிற இடம் பார்த்த அளவில் பலநாளும் மனுஷரையும் மிருகசந்துக்களையும் பட்சிகளையும் கொன்று தின்கிற எலும்புகளெல்லாம் ஒரு மலை போலே குவிந்திருந்தது. அந்த ராட்சதனையும் கண்டான். அந்த ராட்சதன் முப்பத்திரண்டு லட்சணமுள்ளவனாய் இருக்கிறாய் நீ யாரு. இங்கே எங்கே வந்தாயென்று பகாசுரன் கேட்க விக்கிரமராசா சொல்லுவார். நான் உச்சனி பட்டணமாளுகிற ராசா. உன்னுடைய சேதி கேட்டு வந்தேன் என்று ராசா சொன்னார். அப்போது பகாசுரன் சந்தோஷப்பட்டு உனக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்க அதுக்கு விக்கிரமாதித்த ராசா சந்தோஷப்பட்டு சொல்லுவார். நீ தினமொரு மனுஷனையும் மிருகங்களையும் பட்சிகளையும் சாப்பிடாமல் இருக்க வேணுமென்று கேட்க, அப்படியே இன்று முதல் விட்டுவிட்டேனென்று பகாசூரன் சொல்ல விக்கிரமராசா அவன் கையில் அபயஸ்தம் வாங்கிக் கொண்டு ராசா உச்சனிப்பட்டணம் வந்து சேர்ந்தார். நீயும் அப்படி சகாயம் பண்ண வல்லவனானால் இந்த சிம்மாசனம் ஏறலாம்'' என்று மூன்றாம் பதுமை சொல்ல போசராசா வெட்கிப் போனான்.

மூன்றாம் பதுமை கதை முற்றும்

# நாலாம் பதுமை கதை

பின்னேயுஞ் சிறிது நாளைக்குப் பிறகு போசராசா சிம்மாசனம் ஏறவேண்டுமென்று வருவான். அப்போ நாலாம் பிரதமை சொல்லும் கதை

"விக்கிரமாதித்தன் ராச்சியபாரம் பண்ணும் காலத்தில் சம்புகாரி என்றொரு பட்டணம். அதில் கனகேந்திரனேன்கிற செட்டி உச்சினி மாகாளி பட்டணத்துக்கு வந்து விக்கிரமராசாவுக்கு சிறிது ரத்தனங் கொண்டுவந்து முன்னே வைத்துக் கும்பிட்டு சுவாமி இன்னும் சிறிது ரத்தினம் இருக்கிறது. அதைக் கொண்டுவந்து விற்க வந்தேன். அது வித்தபிறகு இன்னும் சிறிது ரத்தினம்யிருக்கிறதென்று சொன்னான். விக்கிரம ராசா இன்னும் எத்தனை ரத்தினம் இருக்கிறதென்று கேட்க, கனகேந்திர செட்டி இன்னும் பத்து ரத்தினமிருக்கிறதென்று சொன்னான். அந்த ரத்தினத்தின் விலையென்னவென்று கேட்க ஒரு ரத்தினம் கோடி திரவியமென்று செட்டி சொல்ல அப்படியே விக்கிரமாதித்தராசா அந்தப் பத்து ரத்தினத்தையும் விலைக்கு வாங்கிக் கொண்டு பத்து ரத்தினமும் கொடுத்து அனுப்புமென்று செட்டியாருடன் ஒரு முத்திரை மனுஷனையும் அனுப்பினார்.

செட்டியார் இரண்டு நாளையிலே அனுப்புகிறோமென்று முத்திரை மனுஷனையும் கூட்டிப்போய் முத்திரை மனுஷன் கையில்

ரத்தினம் கொடுத்தனுப்பினார். பத்து ரத்தினமும் முத்திரை மனுஷன் கொண்டுவருகிறபோது வழியிலே ஒரு ஆறு மகாபிரளயமாக பெருகி வந்தது. அது கண்டு முத்திரை மனுஷன் பார்த்து நம்மை ராசா எட்டு நாளையிலே வரச்சொன்னார். அந்த கெடுவுக்குள் போகாமலிருந்தால் நமக்கு ஆக்கினை வருமென்று சொல்லி ஒடம் விடுகிற ஓடக்காரனிடம் வந்து நாம் ராசாவினுடைய முத்திரை மனுஷன். நான் ராசாவுக்கு ரத்தினம் கொண்டு செல்கிறேன். என்னை அக்கரையிலே கொண்டுபோய் விடவேண்டுமென்று சொல்ல அதுக்கு ஓடக்காரன், இப்போ தண்ணீர் அதிகமாக வருகிறது. இப்ப ஆகாது. இன்னும் நாலு நாள் போகட்டுமென்று சொன்னான். முத்திரை சேவகன் கேட்டு ராசாவுக்கு பத்து ரத்தினங்கள் கொண்டு போகிறோமே கெடுவு தப்பிப் போனால் ஆகாதேன்று திரும்பிப்போய் செட்டியாருடனே சொல்லி செட்டியாரையும் அழைத்துக் கொண்டுவந்தான்.

செட்டியார் ஓடக்காரனிடம் வந்து, இப்போ ராசாவுக்கு ரத்தினம் கொண்டு போகிறான் ஓடம் விடுமென்று சொன்னார். ஓடக்காரன், 'வியாபாரி சினேகத்தையும் வேசியுறவையும் ஆற்றுப் பெருக்கையும் நம்பிப் போகக்கூடாதென்று சொல்லுவார்கள் அது மெய்யயிருக்கிறதென்று' என்று சொல்ல, அப்போ முத்திரை மனுஷன் அவனிடம் இந்த பத்து ரத்தினத்திலே அஞ்சு ரத்தினம்

ஓடக்காரன் கையிலே கொடுத்தான். ஓடத்திலேறி ஆறு கடந்து உச்சனிப்பட்டணம் வந்து விக்கிரமாதித்தராசாவை கும்பிட்டு அஞ்சு ரத்தினத்தை முன்னே வைத்தான். விக்கிரமாதித்தராசா பார்த்து இன்னும் அஞ்சு ரத்தினம் எங்கேயென்று கேட்டார். அதற்கு நான் வருகிற போது ஆத்திலே பிரளயம் வந்தது. ஆனபடியினாலே ஓடக்காரனுக்கு அஞ்சு ரத்தினம் கொடுத்து ஓடமேறி ஆறுதாண்டி கெடுவு தப்பாமல் வந்தேனென்று சொன்னான்.

விக்கிரமாதித்தராசா முத்திரை மனுஷன்பேரிலே சந்தோஷப்பட்டு நம்முடைய தவணை தப்பாமல் வந்ததே நல்ல காரியமென்று சொல்லி அந்த முத்திரை மனுஷனை அழைத்து அந்த அஞ்சு ரத்தினத்தையும் அவனுக்குக் கொடுத்துப் போகச் சொன்னார். அந்த செட்டியாருக்குப் பத்து ரத்தினத்துக்கு பத்து கோடி திரவியமும் கொடுத்து அனுப்பிவித்தார்''. அப்படி நீயுமனந்துணிந்து கொடுக்க வல்லமையுண்டானால் சிம்மாசனமேறலாமென்று நாலாம் பதுமை சொல்ல போசராசா வெட்கிப் போனான்.

நாலாம் பதுமை கதை முற்றும்

## ஐந்தாம் பதுமை கதை

பின்னையும் சில நாளைக்குப் பிறகு போசராசா சிம்மாசனமேற வேணுமென்று வருவான். அப்போ ஐந்தாம் பிரதமை சொல்லுங்கதை

“ஒகோ போசராசனே கேளும். விக்கிரமாதித்தராசா ராச்சியபாரம் பண்ணுகிற வேளையிலே வசந்தமான புஷ்பசாதிகள் கந்த கஸ்தூரி பரிமள சிங்கார தோப்பிலே நவரத்தினத்தாலே ஒரு மண்டபங்கட்டியிருக்கும். அதிலே கிந்தினி, அஸ்தினி, சங்கினி, பதுமினி என்று சொல்லப்பட்ட நாலு சாதியிலேயும் நாலு பெண்கள் ஒடவும் அதுமட்டுமில்லாமல் அரிவை, தெரிவை, பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை இப்படி அனேகம் பெண்களுடனே வசந்தமான பாட்டுக்கள் பாடிக்கொண்டிருக்கிற வேளையிலே விஷ்ணு கேசன் என்கிற பிராமணன் வந்து விக்கிரமாதித்தராசாவை நமஸ்காரம் பண்ணினான். அப்போ ராசாவும் வணங்கினான்.

அதன்பிறகு அந்த பிராமணனைப் பார்த்து உனக்கு என்ன வரம் வேணும் பிராமணாவென்று ராசா கேட்டார். அதுக்கு பிராமணன் சொன்னது. என் தரித்திரம் நிவாரனையாகவேண்டும் என்று தேவியை நோக்கி வெகு நாளாய் தவசு பண்ணிக் கொண்டுயிருந்தேன். ராத்திரி என்னுடைய சொப்பனத்திலே வந்து தேவி சொன்னது. விக்கிரமாதித்தராசா சிங்காரத் தோப்பிலே யோக போக்கியங்களுடனே அனுபவித்துக் கொண்டிருப்பார். நீ அவரிடம்போய் அவரைக் கண்டு நாம் போகச் சொன்னோமென்று சொல்லும். அவர் உனக்கு

என்னவேண்டுமென்று கேட்பார். தேவி சொன்னாளென்று தங்களை பார்க்க வந்தேன் என்று சொல் என்று சொன்னான். பிராமணனுக்கு சகல வெகுமான்யமும் பண்ணி சிறிது திரவியமுங்கொடுத்து பதினாயிரங்கால் குதிரையும் யானையும் லட்சங்களும் கொடுத்து அனுப்பினான். அப்படிக் கொற்ற தானமும் பரோபகாரமும் பண்ண உம்மாலேயாகுமென்றால் இந்த சிம்மாசனம் ஏறலாம் என்று ஐந்தாம் பதுமை சொல்ல போசராசன் வெட்கிப் போனான்.

ஐந்தாம் பதுமை கதை முற்றும்

## ஆறாம் பதுமை கதை

பின்னையும் சிறிது நாளைக்குப் பிறகு போசராசா சிம்மாசனமேற வேணுமென்று வருவான். அப்போது ஆறாம் பிரதமை சொல்லுங்கதை

''ஒகோ போசராசனே கேளும் விக்கிரமாதித்தராசா தானமும் தருமமும் பரோபகாரமும் பண்ணுவார். அப்படி செய்ய உன்னாலேயாகுமா. அதெப்படியானால் அழகாபுரியென்றொரு பட்டணமுண்டு அந்தப் பட்டணத்திலே நாராயண செட்டி என்றொருவர் உண்டு. அவனுக்கு வெகு திரவியமுண்டு. அந்த திரவியத்தை எடுத்துத் தான தருமம் பரோபகாரம் பெற வேண்டுமென்று இருப்பான். அப்போது அவன் மனதிலே ஒரு நினைவு நினைத்துக் கொண்டு பூலோகத்திலே தருமம் பண்ண

வேண்டுமென்று திரவியங்களை எடுத்து கோவில், குளம், ஊருகள், கிராமம், அன்னசத்திரம், சாலைகள் இப்படிக் கொற்ற தருமமும் ஆச்சந்திர காலமும் நடக்கத்தக்கதாய் கட்டளை பண்ணிவைத்துவிட்டு தான் கப்பல் மேல் சிறிது சரக்கேத்திக்கொண்டு போனான்.

அங்கே மகாவிஷ்ணுவை கண்டு அவரை வணங்கினான். சுவாரத்தின தீவுக்குப் போய் கொண்டுபோன சரக்கையெல்லாம் வித்து பதில் சரக்கு வாங்கி கப்பலிலேறிக் கொண்டு வருகிற வழியிலே ஒரு தீவுருந்தது. அந்தத் தீவுக்குள்ளே பொன்னாலே கோவிலிருந்தது. அதில் அதிபயங்கரமான வயிரவனைக் கண்டு வணங்கி எருந்திருந்து கோவிலுக்குள்ளே போய் பார்த்தபோது ஒரு பிள்ளையும் ஒரு பெண்ணும் கழுத்தை அறுத்துத் துடிக்கத்துடிக்க கிடக்கிறதைக் கண்டு பயந்து கோபுர வாசலிலே வந்து நின்று அந்தக் கல்லிலே எழுதியிருக்கிற கவியை வாசித்துப் பார்த்தான். அதில் எவரொருவர் முப்பத்திரண்டு லட்சணத்துடனே இருக்கிறவன் வந்து கொப்பரையில் காயும் நெய்யிலே விழுகிறானோ அப்போ அந்தப் பெண்ணும் பிள்ளையும் பிழைக்குமென்று எழுதியிருந்தது. அதை வாசித்துப் பார்த்துக் கொண்டு உச்சனி பட்டணம் வந்து விக்கிரமராசாவைக் கும்பிட்டான். ராசாவும் செட்டியாரைக் கண்டு வந்தீரோவென்று கேட்டு நீர் போனவிடத்து ஏதாகிலும் புதுமைகளுண்டோவென்று

கேட்டார். அதுக்கு செட்டியார், நான் இங்கேயிருந்து பயணம் புறப்பட்டுப் போய் துவாரகாபுரியில் மகாவிஷ்ணுவைக் கண்டு சேவித்துக் கொண்டு அப்பால் சுவர்ணத்தீவுக்குப் போய் அவ்விடத்தில் கொண்டுபோன சரக்கை விற்று பதில் சரக்கு வாங்கிக் கொண்டு வருகிறபோது வழியில் ஒரு வயிரவன் கோவில் இருந்தது. அந்த கோவிலுக்குப் போய் பார்க்கவேணுமென்று வயிரவனைக் கொண்டு சேவித்து அவ்விடத்திலுள்ள கோவிலில் ஒரு பிள்ளையும் பெண்ணையும் கழுத்தை அறுத்துத் துடிக்கத்துடிக்கக் கிடந்தார்கள். பயந்து இப்புறம் வந்து கோபுரவாசலிலே நின்று கொண்டு கல்லில் எழுதியிருந்த சாசனத்தைப் படிக்க முப்பத்திரண்டு லட்சணமுள்ளவன் எவனோ அவன் இந்த கொதிக்கும் நெய்க் கொப்பரையில் குதித்தால் அந்தப் பிள்ளைகள் பிழைக்குமென்று இருந்தது கண்டு வந்தேனென்று சொன்னார்.

அது கேட்டு விக்கிரமராசா அதைப் பார்க்க வேண்டுமென்று செட்டியாரும் ராசாவும் புறப்பட்டு சுவாரத்தின தீவுக்கு போய் வயிரவனையுங்கண்டு நமஸ்காரம் பண்ணி சன்னதிக்கு முன்னே நிற்கையிலே பிள்ளையும் பெண்ணும் கழுத்தை அறுத்துத் துடிக்கிறதையும் கண்டு கல்லில் எழுதியிருந்த சாசனத்தையும் பார்த்து காய்கிற நெய் கொப்பரையிலே குதிக்கிறார். அப்போ பிள்ளையும் பெண்ணும்

பிழைத்தது. ராசாவும் பன்னீருக்குள்ளே குதித்தெழுந்ததைப் போல கொப்பறையைவிட்டு வெகு சந்தோஷமாய் வெளியே வந்தார்கள்.

பிள்ளையும் பெண்ணும் எழுந்திருந்திருந்ததை விக்கிரமராசாவும் செட்டியாரும் வெகு சந்தோஷமாய்ப் பார்த்துக் கொண்டு நிற்கையில் வயிரவன் வந்து பிரத்தியட்சமாகி விக்கிரமாதித்த ராசாவைப் பார்த்து வெகு சந்தோஷப்பட்டு உன்னைப் போலே மனந்துணிந்து செய்கிற ராசாக்கள் இந்த பூலோகத்திலேயில்லை. உன்னைப் போலே தருமவான் யாருமில்லையென்று சொல்லி வெகு சந்தோஷப்பட்டு உனக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்க அப்போது ராசா, இந்தப் பிள்ளைக்கும் பெண்ணுக்கும் நூறுகோடி திரவியங்கொடுத்து அனுப்பி வைக்க வேண்டுமென்று சொல்ல அப்படியே வயிரவன் நூறு கோடி திரவியம் கொடுத்தார். அதை விக்கிரமராசா வாங்கி அந்தப் பொண்ணுக்கும் விள்ளைக்கும் கொடுத்து அவர்களை ஊருக்கு அனுப்பிவைத்தார். விக்கிரமராசாவும் செட்டியாரும் உச்சனிப்பட்டணம் வந்து சேர்ந்தார்கள். அப்படி நீயும் மனந்துணிந்து சகாயம் பண்ண வல்லவனானால் இந்த சிம்மாசனமேறலாம் என்று ஆறாம் பிரதமை சொல்ல போசராசன் வெட்கிப் போனான்.

ஆறாம் பதுமை கதை முற்றும்

# ஏழாம் பதுமை கதை

பின்னேயுஞ் சிறிது நாளைக்குப் பிறகு போசராசா சிம்மாசனமேற வேணுமென்று வருவான். அப்போ ஏழாம் பதுமை சொல்லுங்கதை ,

''விக்கிரமாதித்தராசா ராச்சியபாரம் பண்ணுகிற காலங்களிலே வேற்று ராசர்கள் தம்மை நல்லவனென்று சொல்லுகிறார்களோ அல்லது பொல்லாதவன் என்று சொல்லுகிறார்களோவென்று ராச்சியங்களிலே போய் விசாரித்து வரச் சொல்லி சேவகரை அனுப்பி வைத்தார். அப்போ அந்த சேவகர் புறப்பட்டு காசிதேசம் பரியந்தம் போய் பார்க்குமிடத்தில் கர்ணாபுரியென்றொரு பட்டணத்தில் கனகேந்திரனென்கிற செட்டி ஒரு திருக்குளம் வெட்டி வைத்தான். அந்தக் குளத்திலே தண்ணீரில்லாமல் போச்சுது. செட்டியானவன் குளத்தைப் பார்த்து பெருமூச்செறிந்தான். சிறுது நாளைக்குப் பிறகு ஈசுவரி வாக்கியமாக முப்பத்திரண்டு லட்சணமுள்ளவர்கள் இந்தக் குளத்தில் நின்று கழுத்தை அறுத்து அந்த ரத்தம் குளத்தில் விழுந்தால் அப்போ தண்ணீர் வந்து குளம் நிரம்பிப் போகுமென்று சொல்லிப் போச்சுது. செட்டியார் இந்த சொப்பனங் கண்டு ஒரு உபாயமெடுத்து பொன்னாலே மனுஷனாகப் பண்ணி வைக்கவேண்டுமென்று கோடி திரவியமெடுத்து மனுஷனாகப் பண்ணி ஒரு பொன் கம்பமும் பண்ணி இதை யாதாமொருவன்

முப்பத்திரண்டு லட்சனமுள்ளவன் கழுத்தை அறுத்துக் கொள்கிறானோ அவன் எடுத்துக் கொள்ளுகிறதென்று எழுதியிருந்தது. அதைச் செட்டியார் கண்டு வந்து விக்கிரமாதித்த ராசாவிடம் சொன்னார்.

விக்கிரமாதித்தராசா வெகு சந்தோஷப்பட்டு அவனையுங்கூட அழைத்துக் கொண்டு போய் அந்த ஏரியைப் பார்த்தார்கள். அந்த ஏரிக்குள்ளே விசுவகர்மன் தன்னுடைய சமத்தையெல்லாம் காட்டி அதிலே ஒரு வயிரவனையும் பண்ணி வைத்து அங்கே வந்த பேருக்கெல்லாம் இஷ்டகாமியமெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறான். அந்தக் கோவிலிலே ஒரு யோகேந்திரன் இருந்து விக்கிரமாதித்த ராசாவை அழைத்து யோகம் சாதித்து சித்தியானால் அநேககாலம் சாவில்லாமல் இருக்கலாம் ஆகையால் நான் யோகம் சாதித்துக் கொண்டிருக்கிறேன். நீயும் அப்படி யோகம் சாதிக்க வல்லமையானால் அநேககாலம் சாவில்லாமல் இருக்கலாம் என்று யோகீஸ்வரன் சொல்ல அதற்கு விக்கிரமாதித்தராசா, எனக்கு சுவாமி ஆயிரம் வருஷம் சிம்மாசனத்திலிருந்து ராச்சியபாரம் பண்ண கட்டளையிட்டதை தப்பி நடக்கப் போகிறதென்ன என்று சொன்னார். அப்போது யோகீஸ்வரன், இந்த ஏரியிலிருந்து கழுத்தை அறுத்துக் கொண்டால் தண்ணீர் பெருகும். கெங்கா பவானி உனக்குப் பிரசன்னமாவாள். கேட்டவரம் கொடுப்பாள்.

தண்ணீர் உண்டாக்கிவித்தால் நூறாயிரம் வருஷம் ராச்சியபாரம் ஆண்டமாதிரியென்று சொன்னார். அப்படியே விக்கிரமாதித்தராசா நடு ஏரியிலே வந்து நின்றுகொண்டு கழுத்தையறுத்துக் கொள்ளுகிறபோது கெங்காபவானி பிரசன்னமாகி நீ கழுத்தை அறுத்துக் கொள்ள வேண்டாம் நீ ஒரு மனதுண்டானவன். உனக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்க அப்போது விக்கிரமாதித்த ராசா, இந்த ஏரியிலே தண்ணீர் எத்தேசகாலமும் நிரம்பி, வற்றாமலிருக்க வேண்டுமென்று வரங்கேட்டான். அப்படியே வரந்தந்தோமென்று ஏரியில் தண்ணீர் நிரம்பி வந்தது.

அந்த பொற் பிரதமையும் பொற் கம்பமும் எடாமல் விக்கிரமாதித்த ராசா உச்சனி பட்டணமே வந்து சேர்ந்தார். பிறகு செட்டியாகும் ஏரியை வந்து பார்த்து தண்ணீர் நிரம்பி இருக்கிறதையும் பொற் பிரதமை பொற் கம்பமும் எடுத்துப் போகாமல் இருக்கிறதையும் பார்த்து வெகு சந்தோஷப்பட்டு அந்தப் பிரதமையும் கம்பமும் கோடி தனமல்லோ, அதை எடுத்து பிராமணருக்கும் அரிதேசி பரதேசிகளுக்கும் தானம் பண்ணிவிட்டு செட்டியார் சந்தோஷமாயிந்தார். அப்படி விக்கிரமாதித்த ராசாவைப் போலே தான தருமமும் பரோபகாரமும் பண்ண உம்மாலே ஆகுமென்றால் சிம்மாசன மேறலாமென்று" ஏழாம் பதுமை சொல்ல போசராசன் வெட்கிப்

போனான்.

ஏழாம் பதுமை கதை முற்றும்

## எட்டாம் பதுமை கதை

பின்னையுஞ் சிறிது நாளைக்குப் பிறகு போசராசா சிம்மாசனம் ஏற வேணுமென்று வருவான். அப்போது எட்டாம் பதுமை சொல்லுகிற கதை

"ஒகோ அரசனே கேளும். விக்கிரமாதித்த ராசா ராச்சியம் பண்ணுகிற நாளையிலே ராசாவுடைய புரோகிதன் சூரசேனன். என்கிறவன் எக்காலமும் புத்திரமித்திரர்களுடனே போக போக்கிய அஷ்ட ஐசுவரியங்களை அனுபவித்துக் கொண்டிருப்பான். புறப்பட்டு காசிக்குப் போய் மணிகர்ணிகை நதியிலே ஸ்நானம் பண்ணி சுவாமியை சேவித்து கங்கையிலே பிண்ட பிராதனம் பண்ணுவித்துவிட்டு வருகிற வழியிலே சிங்காரமென்கிற பட்டணத்துக்கு வந்தான். அங்கே ஒரு செப்புக் கொப்பரையிலே எண்ணெய் காய்கிறது. காயும் எண்ணைக் கொப்பரையிலே குதித்தவனுக்கு அந்த ராச்சியமும் கொடுத்து என்பது கோடி திரவியமும் கொடுக்கிறோமென்று செப்பேட்டில் எழுதியிருந்தது. அந்த புதுமையைக் கண்டு உச்சனிக்கு வந்தவன் சிம்மாசத்திலே இருந்து கொண்டு தபோதனருக்கும் பிராமணருக்கும் வித்வாங்கிஷருக்கும் இருபது கோடி திரவியம் தான தரும தியாகங்களும் கொடுத்து அதிக சந்தோஷமாக

வசந்த ராகமும் பாடி வைத்துக் கொண்டுயிருக்கிற வேளையிலே ஒரு விருத்தப் பிராமணனும் அவனுடைய குமாரத்தியும் வந்து ராசாவைக் கண்டார்கள்.

நீர் எந்த தேசத்திலேயிருந்து வருகிறீர்களென்று ராசா கேட்டவுடன் பிராமணன் சொல்லுவான். நான் சம்புகாபுரி என்ற பட்டணம் சேர்ந்தவன். என் பேர் வித்தியாற்றி. எனக்கு எண்பது வயதுக்கு மேலாகிறது. இந்தப் பெண் பிறந்து, இந்தப் பெண்ணை கன்னிகாதானம் செய்து கொடுக்க வேணுமென்றால் வகையில்லாத படியினாலே உன்னிடம் வந்தேனென்று சொன்னான். ராசாவும் சந்தோஷப்பட்டு பிராமணனுக்கு ஆபரணங்களுடனே கூடினதும் பத்து கோடி திரவியமுங் கொடுத்து அனுப்பினார்.

அந்த வேளையிலே காசிக்குப் போன பிராமணன் சூரசேனன் என்கிற புரோகிதன் வந்து விக்கிரமாதித்த ராசாவைக் கும்பிட்டான் அப்போ ராசாவும் கும்பிட்டு நீர் போன தேசத்திலே ஏதாகிலும் புதுமைகளுண்டோ என்று கேட்டார் பிராமணன், சிங்காரமென்கிற பட்டணத்திலே போனான். அங்கே ஒரு கொப்பரையிலே எண்ணெய் காய்கிறது. அதிலே குதித்தவனுக்கு எண்பது கோடி திரவியமுங் கொடுத்து அந்த ராச்சியமுங் கொடுக்கிறோமென்று எழுதியுள்ளது என்று சொன்னான். அதுகேட்டு அந்தக்கணமே சிங்காதம்

விட்டு எழுந்து, அந்தப் பிராமணனையும் அழைத்துக் கொண்டு சிங்காரமென்கிற பட்டணமே வந்து குளத்திலே ஸ்நானம் பண்ணி கோவிலிலே எண்ணெய் காய்கிறதைக் கண்டு விக்கிரமாதித்த ராசா குதித்தார். அப்போ அந்தக் காய்கிற எண்ணெய் பன்னீர் குளிர்ந்தாற் போலே குளிர்ந்து விளையாடி ராசா தன்னுடைய குமாரத்தி ..........மாவதி என்கிற பெண்ணைக் கலியாணம் பண்ணிக் கொடுத்து தன்னுடைய ராச்சியத்தையும் பிராமணனுக்குக் கொடுத்து தான் கலியாணம் பண்ணின பெண்ணிடத்திலே புரோகிதனை வைத்து, இந்த தேசமெல்லாம் பார்த்துக் கொண்ணடிரு நான் வருஷத்துக்கு ஒரு தரம் வந்து விசாரித்துக் கொண்டு போக வருகின்றேனென்று சொல்லி விட்டு அவர் கையிலே விடை பெற்றுக் கொண்டு விக்கிரமாதித்த ராசா உச்சனிபட்டணத்துக்கு வந்தார். அவரைப்போல நீயும் சகாயமும் தியாகவும் பரோபகாரமும் பண்ண வல்லவனானால் இந்த சிம்மாசனம் ஏறலாமென்று" எட்டாம் பதுமை சொல்ல போசராசாவும் வெட்கிப் போனான்.

எட்டாம் பதுமை கதை முற்றும்

ஒன்பதாம் பிரதமை கதை

பின்னையுஞ் சிறிது நாளைக்குப் பிறகு போசராசா சிம்மாசனமேற வேணுமென்று வருவான். அப்போது ஒன்பதாம் பதுமை சொல்லுங் கதை

"ஒகோ போசராசனே விக்கிரமாதித்த ராசா ராச்சியபாரம் பண்ணுகிற காலங்களிலே விக்கிரமாதித்த ராசாவினுடைய புரோகிதனுக்கு திரிபுராந்தகனென்று ஒரு பிள்ளையுண்டு. அவன் செல்வத்துடனே வளர்ந்தான். அவனுக்கு வேத சாஸ்திரம் கற்காதேயிருந்த படியினாலே ரோஷம் வந்து இனி வேத சாஸ்திரத்தைக் கற்றாலொழிய பிதாவின் முகம் பார்க்கிறதில்லை என்று வித்தியாதியென்கிற பட்டணம் வந்து சந்திர சூரியனென்கிற புரோகிதனைக் கண்டு, அவரை நமஸ்காரம் பண்ணி அவரிடத்திலே சேர்ந்து வெகு சாஸ்திரம் கற்றுக் கொண்டு அவரிடம் விடை பெற்றுக் கொண்டு ஊருக்கு வருகிறபோது காஞ்சீபுரத்துக்கு வந்து ஏகாம்பார நாதரையும் காமாட்சியம்மனையும் கண்டு சேவிக்க வேணுமென்று வந்தான்.

அப்போது தெருவீதியிலே நாட்டுத் தேவடியாள் மோகினி என்கிறவள் வெகு ரூப சவுந்திரியத்துடனே எதிரில் வரக்கண்டு அவள்பேரிலே மோகித்து சித்தாகிரிந்தனாய் நிற்கையிலே அவ்விடத்திலிருந்தவர்கள், இவள் நாட்டு மோகினி. இவளுக்கு யாதாமொருவன் வந்து விசுவாசம் கொண்டு இவளோடே பேசுகிறவனை நடுச்சாமத்திலே அவளோடே சம்போகம் பண்ணுகிறதற்கு முன்னே ஒரு ராட்சதன் வந்து கொன்று போடுவானென்று சொனனார்கள். இந்த விசேஷம் பிராமணப் பிள்ளை கேட்டு உச்சனி பட்டணம் வந்து, மாதா பிதாவைக்

கண்டு நமஸ்காரம் பண்ணி தான் கற்று வந்த வித்தைகளைத் தகப்பனுடனே சொன்னான். அவன் கேட்டு, வெகு சந்தோஷப்பட்டு தகப்பனும் பிள்ளையுமாய் விக்கிரமாதித்த ராசாவிடம் வந்து ராசாவுக்கு ஆசிர்வாதமென்று அட்சதை கொடுத்தார்கள். அப்போது ராசாவும் சந்தோஷப்பட்டு, என்ன வித்தை கற்று வந்தீர்கள். அவ்விடத்தில் ஏதாகிலும் புதுமைகளுண்டாவென்று கோட்டார். உடனே பிராமணப் பிள்ளை, காஞ்சிபுரத்திலே நாட்டு மோகினி என்றொரு தேவடியாள். சவுந்தரியமானவள். ஆனதால் அவளைக் கண்டு மோகித்து நின்றேன். அங்கேயிருக்கின்றவர்கள் அவளுக்கு விசுவாசங் கொடுத்து போனவர்களை நடுசாமத்திலே ராட்சதன் வந்து கொன்று விடுவானென்று சொன்னார்கள் என்று சொன்னான். அந்தசேதி கேட்டு ராசா திரிபுராந்தகனென்கிற பிராமணனையும் கூட்டிக் கொண்டு காஞ்சீபுரம் வந்தான். அந்த மோகினியின் நிழலைக் கண்டமாத்திரத்திலேயே ராசா பிரமித்து பிராமணனை அழைத்து இவளுடைய ரூபம் பிரம்மா சிருஷ்டிப்புக்குள்ளே இப்படிப்பட்ட அழகுள்ள பேரில்லை. ஆனால் நீ போய் நாட்டு மோகினியுடனே சொல்லும் ஒரு ராசா வந்திருக்கிறான். அ.நத ராசாவுக்கு என்ன விசுவாசமென்று கேட்டு வரச் சொல்லி அனுப்பினான். அப்படியே பிராமணன் போய் நாட்டு மோகினியைக் கண்டு ஒரு ராசா உன்னிடம்

விசுவாசம் பேசி வரச் சொன்னாரென்று சொன்னான்.

அந்த நாட்டு மோகினி, என்னிடத்தில் வந்தவனை ஒரு ராட்சதன் அகோர ராத்திரியில் வந்து கொன்று போடுவானென்று சொன்னாள். இந்த சேதியை ராசாவிடம் சொன்னான். ராசா கேட்டு பிராமணனைக் கூட்டிக் கொண்டு நாட்டு மோகினிஎிடம் வந்தார். நாட்டு மோகினி ராசாவைக்கண்டு இவர் குணமறித்து அப்போ ராட்சதன் வருகிற தேசகாலமாச்சுதென்று இவர்கள் இரண்டு பேரையும் ஒரு மறைவிலே ஒளித்து வைத்து தான் இருட்டு வீட்டிலே ஒரு மறைவிலே ஒளிந்தியிருந்தாள். அப்போது ராட்சதன் வந்து ஆண் நாற்றம் வருகிறதென்று கொக்கரித்தான் அது கண்டு விக்கிரராதித்த ராசாவும் சப்தமேகம் போல் புறப்பட்டு தன் அஸ்தத்தினாலே கொடுமுடி போலிருக்கிற சிரசை வெட்டியெறிந்து போட்டார். அப்போ நாட்டு மோகினி வந்து விக்கிரமாதித்த ராசா காலிலே சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்து, உம்முடைய கிருபா கடாட்சத்தினாலே என் பேரிலிருந்த பீடை நிவாரணமாயிற்று. இனி நீர் கட்டளைப்படி பக்தியாய் செய்கிறேனென்றாள்.

அப்போது ராசாவும் சந்தோஷப்பட்டு, நம்முடைய புரோகிதன் திரிபுராந்தகனுக்கு மாலையிட வேண்டுமென்றார். அப்படியே சம்மதித்து மாலையிட்டுக் கொடுத்து திரிபுராந்தகனும் நாட்டு மோகினியுமாக ஏகபோக பாக்கியங்களையும்

அனுபவித்துக் கொண்டு இருக்க சொல்லி கோடிதிரவியத்தைக் கையிலே கொடுத்து விட்டு விக்கிரமாதித்த ராசா உச்சனிப் பட்டணம் வந்தார். நீயும் அப்படி சகாயம் பண்ண வல்லவனானால் இந்த சிம்மாசனம் ஏறலாம் என்று ஒன்பதாம் பதுமை சொல்ல போசராசன் வெட்கிப் போனான்.

ஒன்பதாம் பதுமை கதை முற்றும்

## பத்தாம் பதுமை கதை

போசராசா சிம்மாசனமேற வேணுமென்று வருவான். அப்போ பத்தாம் பிரதமை சொல்லும் கதை

"ஒகோ போசராசனே கேளும். விக்கிரமாதித்தராசா ராச்சியபாரம் பண்ணுகிற நாளையிலே ஒரு யோகீஸ்வரன் வந்து, விக்கிரமாதித்த ராசாவைக் கண்டு உமக்கு அறுபத்து நாலு கலைகளின் ஞானமும் வருமல்லோ இப்போ வாயுயோகஞ்சாதித்தால் கல்பாந்திரகாலமாயிருக்குமென்று சொல்ல, அப்படி யோகம் சாதிக்க வேணுமென்று விக்கிரமாதித்த ராசாவும் யோகீஸ்வரனுமாக காட்டிலே போய் மரவுரி தரித்துக் கொண்டு திரிசந்திரகாலம் ஸ்நானம் பண்ணி யோகீசுவரன் கையில் உபதேசம் பெற்று ஒமம் பண்ணுகிற காலத்திலே பரமேசுவரன் பிரசன்னமாய் வந்தார். தேவநாயகன் என்கிற குளிகையும் கொடுத்து, உச்சனியே போகச் சொல்லி அனுப்பி வைத்தார்.

அப்போது விக்கிரமாதித்த ராசா யோகீஸ்வரனிடம் சொல்லிக் கொண்டு உச்சனிக்கு வருகிற போது வழியிலே ஒரு குஷ்டரோகி மரத்தடியிலே காலும் கையும் குறைந்து நடக்கமாட்டாமலிருந்தான். அவனைக் கண்டமாத்திரத்திலே ராசாவுக்குப் மிகவும் துக்கம் வந்து பெரியவர்கள், எவருக்கேனும் ஆபத்து வந்தால் தன் சரீரத்தையாகிலும் கொடுத்து ரட்சக்க வேணுமென்று சொல்லுவார்களே. நாம் இவனை காக்க வேண்டுமென்று பரமேஸ்வரன் கொடுத்த குளிகையை கொடுத்து உள்ளுக்குக் கொள்ளச் சொன்னன் அதை முடவன் உள்ளுக்கு கொண்ட மாத்திரத்திலேயே தெய்வீக சொரூபமாகி பதினாறு வயது பாலகுமாரனானான். அவனை ராசா பார்த்து சந்தோஷப்பட்டு அனுப்பினார். விக்கிரமாதித்த ராசா உச்சினிக்கு வந்து சேர்ந்தார். நீயும் அப்படி செய்ய வல்லவனானால் இந்த சிம்மாசனமேறலாம்" என்று பத்தாம் பதுமை சொல்ல போசராசா வெட்கிப்போனான்.

பத்தாம் பதுமை கதை முற்றும்

## பதினோராம் பதுமை கதை

பின்னையுஞ்சிறிது நாளைக்குப் பிறகு போசராசன் சிம்மாசனமேற வருவான். அப்போ பதினோராம் பதுமை சொல்லுங்கதை

"ஒகோ போசராசனே கேளும். சம்புகாபுரியென்கிற

பட்டணத்திலே பத்திரசேனன் என்கிற செட்டி அநேக தான தரும உபகாரம் பண்ணுவான். அப்போது அவனுடைய குமாரன் புத்திரகோடி என்கிற பிள்ளைக்கு முப்பது கோடி திரவியங்கொடுத்து விட்டு அவன் காலம் பண்ணிப்போனான். அந்தப் பிள்ளையும் தன்னுடைய தகப்பனைப் போல தானதரும பரோபகாரமும் பண்ணாதவன் மனுஷனாவென்று தானும் அப்படி தான தரும பரோபகாரம் பண்ணுவான். அப்போ பெரியவர்கள் இருந்துகொண்டு தம்பி! இப்படி சிலவழிக்கலாமோ? பிதாவானவன் தேடிய திரவியம் பதனம் பண்ணி வைத்துவிட்டு நீ தேடிய திரவியம் தான தரும பரோபகாரம் பண்ணவேணுமே ஒழிய முதலை இப்படி சிலவழிக்கலாமோ? இது புத்தியல்லவென்றார்கள். மனுஷ சரீரம் அநித்தியம் நீர்மேற்குமிழி. நித்தியமல்ல. இந்த திரவியத்தை யார் அனுபவிக்கவேணுமென்று கல்விகளறிந்தவனான படியினாலே ஒருவர்பேச்சும் கேட்காமல் அந்த முப்பது கோடி திரவியமும் சிலவழித்து விட்டான்.

அதன்பிறகு பெரியோர்கள் எல்லோரும் கூடி தகப்பன் வைத்துப் போன பழம் பொருளை உணராமல் சிலவழித்து நொந்து போனானேன்று சொல்லிக் கேட்க முடியாதென்று எண்ணி பறப்பட்டு தேசமெல்லாம் திரிந்து மதுராபுரியென்கிற பட்டணம் வந்தான். அந்தபட்டணத்திலே ஒரு

பிராமணனிடத்திலே சாப்பிட்டுவிட்டு படுத்துக் கொண்டிருக்கையிலே நடுசாமத்தில் ஒரு பெண் அபயமிட்டு அழுதாள். அது என்ன விவரமென்று கேட்டதற்கு ஒருத்தரும் தெரியாதென்றார்கள்.

அது கேட்டு புத்திரகோடி என்கிறவன் உச்சனிபட்டணம் வந்து விக்கிரமாதித்தராசாவைக் கும்பிட்டு என்னுடைய தந்தை பிராபத்திரசேனனேன்கிற செட்டியார் முப்பதுகோடி திரவியம் வைத்து மரித்துப் போனார். அதுவெல்லாம் நான் தானதருமம் பண்ணிவிட்டு தேசாந்திரமாக புறப்பட்டு மகேந்திரகிரிக்கு நடுவேயிருக்கிற தெய்வத்தலங்களெல்லாம் சேவித்துக் கொண்டு போவோமேன்று வந்தேனேன்று செட்டி சொன்னான். அதுகேட்டு ராசாவும், நீர் போனவிடத்து யாதாகிலும் புதுமைகளுண்டாவென்று கேட்டார். அப்போது செட்டி, நான் வருகிற வழியிலே மதுராபுரி என்கிற பட்டணத்துக்கு வந்து ஒரு ராத்திரியிருந்தேன். ராத்திரி பதினைந்து நாழிகையிலே ஒரு பெண் அழுதாள். அது என்ன விவரமேன்று பட்டணத்திலிருக்கிறவர்களைக் கேட்க அவர்கள் அப்படி அநேக நாளாய் அபயமிட்டு அழுகிறாளென்று சொன்னார்கள்.

விக்கிரமாதித்தராசா செட்டியாரையும் கூட்டிக் கொண்டு புறப்பட்டு மதுராபுரிக்கு வந்து பிராமணன் வீட்டிலே இரண்டு பேரும் சாப்பிட்டு அன்று ராத்திரி அந்த தலத்திலே

தங்கியிருந்தார்கள். அப்போ அந்த ராத்திரியிலே ஒரு பெண்சாதி அபயமிட்டு அழுதாள். அதுகேட்டு விக்கிரமாதித்தராசா தனியாகப் புறப்பட்டுப் போனான். ஒரு ராட்சதன் வந்து அவள் தலைமயிரைச் சுற்றிப் பிடித்துக் கொண்டு அடிக்கிறபோது அவள் அபயம் அநியாயமென்று அழுகிற சத்தங்கேட்டு வாராய் பெண்ணே உன்னை நான் ரட்சிக்கிறேன். நீ அழ வேண்டாமென்று விக்கிரமாதித்தன் சொல்ல அந்த ராட்சதன் கேட்டு, இத்தனைநாள் மட்டும் இவளை நாம் அடிக்கிறபோது ஒருவரும் வந்து இவளுக்கு ஆறுதல் சொன்னவர்களில்லை. இவன் விக்கிரமாதித்தராசாவே. சரி இவன் கையால்தான் நான் சாகப் பிறாப்தியென்று எதிர்வந்து கோடாக்கத்தியுடனே வந்தெதிர்த்தான். அப்போது விக்கிரமாதித்தராசா வேதாளத்தின் பேரிலேறிக்கொண்டு மேகத்தையளாவியிருக்கிற ராட்சத முடியை வெட்டினான். அப்போ ஈஸ்வரி வாக்கியமாக அவன் தேவேந்திரனுக்குப் பயப்படாமலிருந்த ராட்சதனைக் கொன்று போட்டானென்று தேவர்கள் எல்லோரும் விக்கிரமாதித்தராசாவுக்குப் புஷ்பமாரி பொழிந்தார்கள். அப்போது விக்கிரமாதித்தராசா முன்னே ராட்சதன் வந்து நமஸ்காரம் பண்ணி உன்னாலே எனக்கு விமோசனமாச்சுதென்று சொன்னான்.

விக்கிரமாதித்தராசா அவனை நீ யாரென்று கேட்க ராட்சதன்,

இந்தப் பட்டணத்திலே தருமசாலியென்றொரு வித்துவான். அவனுடைய பெண்சாதி ஒரு நேரம் பண்ணினாள். அப்போது ஊரருகில் ஒரு காடு. அந்தக் காட்டிலே வந்துவிட்டு இப்படிகோஷம் பண்ணினாள். இவள் ஒரு ராட்சதன் கையில் அகப்படக்கடவதென்று சாபங்கொடுத்து போனான். ஆனபடியினாலே இந்த சாபம் எனக்கு எப்போ தீருமென்று கேட்டதுக்கு விக்கிரமாதித்தராசா வருவார். அப்போ விமோசனமென்று சொல்லி தன் பெண்சாதியை தினம்தினம் தண்டனை பண்ணச் சொல்லி காட்டிக் கொடுத்துப் போனான். அப்படியே தினம் தண்டித்துக் கொண்டு வந்தேன். நீர் நீதியுள்ள விக்கிரமாதித்தராசாவானபடியினாலே அவள் அழுகிறதைக் கேட்டு நீர் பராமரித்தபடியினாலே உம்முடைய ஆயுதத்துக்கு இரையானேன் என்று ராட்சதன் சொல்ல விக்கிரமாதித்தராசா சந்தோஷப்பட்டார். அப்போது ராட்சதன், நான் முப்பதுகோடி திரவியங் காத்திருந்தேன். அந்த திரவியத்தை நீர் எடுத்துக் கொள்ளும் என்று சொல்லி திரவியமிருக்கிற இடம் காட்டி ராட்சதன் மோட்சத்தை அடைந்தான். அந்த முப்பது கோடி திரவியமும் எடுத்து புத்திரகோடியென்கிற செட்டியாருக்கு கொடுத்து, அந்த தருமசாலியென்கிற வித்துவான் பெண்சாதியை வித்துவானிடத்தில் எப்போதும் போலிருக்கச் சொல்லி கோடி திரவிமுங்கொடுத்து அவனை வீட்டுக்கு

அனுப்பிவிட்டு விக்கிரமாதித்தராசா புத்திரகோடியென்கிற செட்டியையும் அழைத்து உன்னுடைய தகப்பன் தேடின தருமமும் நீ தருமதானம் பண்ணின தருமமும் நீயும் தினசரி பண்ணிக் கொண்டிருந்தபடியினாலே உனக்கு அந்தப் ,பணம் முன்னின்றது. உனக்கு முப்பதுகோடி தனமும் வந்து சேர்ந்தது என்று செட்டியை அனுப்பி வைத்துவிட்டு விக்கிரமாதித்தராசா உச்சனிப்பட்டணம் வந்து சேர்ந்தார். நீயும் அப்படி சகாயம் பண்ண வல்லவனானால் இந்த சிம்மாசனம் ஏறலாம்'' என்று சொல்ல போசராசன் வெட்கித் தலை குனிந்தான்.

பதினோராம் பதுமை கதை முற்றும்

## பன்னிரண்டாம் பதுமை கதை

பின்னையுஞ் சிறிது நாளைக்குப் பிறகு போசராசன் சிம்மாசனமேற வருவான். அப்போ பன்னிரண்டாம் பதுமை சொல்லுங்கதை

''ஒகோ போசராசனே கேளும். விக்கிரமாதித்தராசா காடாறு மாதம் வனசஞ்சாரம் பண்ணுகிற வேளையிலே கங்கைக் கரையில் தருமபுரி என்கிற பட்டணமுண்டு. அதை ஆளுகிறவன் சித்திரசேனனேன்கிற ராசா. அவன் காலமே எழுந்திருந்து கங்கையில் ஸ்நானம் பண்ணி அனுஷ்டான செபதப நேமநிஷ்டை பூசை முடித்துக் கொண்டு தரும கதைகளைக் கேட்க வேண்டுமென்று சத்திய மண்டபத்தின் அண்மையிலே

வந்து பெரியோர்களை நமஸ்கரித்து தருமபுராணங் கேட்பது வழக்கம். விக்கிரமாதித்தராசாவும் அங்கே வந்து புராணம் சொல்லுகிறதை கேட்டுக் கொண்டிருக்கிற தருவாயில் பிராமணன், 'மனுஷனாய்ப் பிறந்தவனுக்கு சிங்காரத்தைக் கண்டால் முகப்பிரீதியாயிருக்கும். தருமகதை சொல்லுகிறபோது தான் தேடிய திரவியமெல்லாம் தருமம் பண்ணுகிறவனாயிருப்பான். அப்படிக் கொற்றவனிடம் சரணாகதியென்று வந்தவர்களை ரட்சிக்கிறதே தருமமென்று இருப்பானேன்று புராணத்தில் சொல்லுகிறது' என்று கூறும் தருவாயில் சலத்திலேயிருக்கிற முதலை வந்து பிராமணனை எடுத்துக் கொண்டு போச்சுது.

அப்போது பிராமணனுடைய பெண்சாதி வந்து அழுவதை விக்கிரமாதித்தராசா கேட்டு சித்திரசேனனென்கிற ராசாவைப் பார்த்து உன்னுடைய தேசத்திலே புராணம் சொல்லுகிற பிராமணனை முதலையெடுத்துக் கொண்டு போகும்போது நீர் பார்த்துக் கொண்டு இருக்கலாமோ என்று கேட்டார். அப்போது சித்திரசேனன் நான்னென்ன செய்யப்போகிறேனென்று கேட்க, அப்போ விக்கிரமாதித்தராசா ஆயுதத்தை உருவிக்கொண்டு முன்னே ஆதிநாராயணசுவாமி ஆணையை விடுத்ததுப் போல் கங்கையிலே குதித்து முதலையை வெட்டி அந்த பிராமணனை விடுவித்துக் கொண்டு கரையேறினார். அப்போ பிராமணன்

ராசாவைப் பார்த்து நீ முப்பத்திரண்டு லட்சணமுள்ள ராசாவானபடியினாலே முதலையை வெட்டி என்னை மீட்டாயென்று சந்தோஷப்பட்டு உம்முடைய தருமத்தினாலே முதலை வாயிலே மீண்டேன். உமக்கு என்ன உபகாரம் பண்ணப் போகிறேனேன்று பிராமணன் சொல்ல அதற்கு விக்கிரமாதித்தராசா, ஒருவருக்கு ஆபத்து வந்தால் அதை நாம் ரட்சிக்கிறதே ஒழிய பின் வாங்குவதில்லையென்று சொல்லி பிராமணனை நமஸ்கரித்து போமய்யாவென்று சொன்னார். அந்தப் பிராமணன் உமக்கு ஒரு உபகாரம் செய்யாமற் போகிறதில்லை. நீர் உபகாரஞ்செய்து கொள்ளாவிட்டால் நான் பிராணனை விடுகிறேனேன்று பிராமணன் சொன்னார். எதுக்கு பிராமணா பிராணனை விடுகிறாய், உபாரம் பண்ணவேண்டுமென்று சொன்னாயல்லவா நல்லது, நமக்கு ஒரு மந்திர உபதேசம் பண்ணுமென்று சொன்னார்.

பிராமணன் முன்னே அக்கினித்தேவன் கையிலே எப்படிப்பட்ட ஆபத்துக்கள் வந்தாலும் தப்புவிக்க வேணுமென்று வரம் பெற்றிருந்தான். அந்த வரத்தைக் கொடுத்துவிட்டுப் பிராமணன் தபசுக்குப் போனான். அதன்பிறகு விக்கிரமாதித்தராசாவும் புண்ணியத்தலமெல்லாம் சேவித்து ஒரு பருவதத்துக்கு வந்தான். அவ்விடத்திலே சூரிய சந்திராதிகள் பிரகாசிக்கப் போகாதயிடமாயிருந்தது.

அவ்விடத்தில் ஒரு கோவில் முன்னே ஒரு பிரம்மாண்டமான அரசு நின்றது. அந்த அரசு மேலே ஒரு பிரம்மராட்சதனிருந்தான். அந்த ராட்சதனைக் கண்டமாத்திரத்திலே ரிஷிகள் தேவர்கள் எல்லோரும் பயந்து ஓடிப் போவார்கள். அப்படிப்பட்ட காட்டுக்குள்ளே விக்கிரமாதித்தராசா வந்து அந்த ராட்சதனைக் கண்டு ஆயுதத்தை உருவிக்கொண்டு ஆர்பரிக்கிறபோது ராட்சதன், நாம் ஆயிரம் வருடமாய் இந்த அரச மரத்திலேயிருக்கிறோம். நம்மை யாரென்று கேட்க யாருமில்லை. இந்த வனத்தில் ஒருவரும் வரப்பயப்படுவார்கள். இவன் மனந்துணிந்து வந்திருக்கிறான். முன்னால் தேவர்கள் சாபங்கொடுக்கிறபோது விக்கிரமாதித்தராசா வருவான். அப்போ உனக்கு சாபவிமோசனம் என்று கட்டளையிட்டார்களே. இப்படி வந்து ஆர்பரித்தபோதே இது விக்கிரமாதித்தராசாவே என்று ராட்சதன் பயந்து கிட்டே வந்து விக்கிரமாதித்தராசாவை நமஸ்கரித்து நான் பெரியோர்களை உதாசீனம் செய்த படியினாலே இப்படி ஆயிரம் வருடம் ஆகார நித்திரையில்லாமல் இந்த அரசின் கீழேயிருந்தேன். இப்போது உன்னைக்கண்ட மாத்திரத்திலே என்னுடைய சாபம் விமோசனமாச்சுது. நீர் புண்ணிய புருஷன் உம்மாலே கதிபெற வேணும். கங்கைக் கரையிலே தருமபுரிப் பட்டணத்திலே பிராமணனை முதலை பிடிக்குப் போனபோது

முதலையை வெட்டி பிராமணனை விடுவித்த பலனும், அந்த பிராமணன் கொடுத்த மந்திரத்தின் பலனும் இந்த இரண்டு பலனையும் கொடுத்தால் நான் சொர்க்கலோகம் போவேனென்று பிரம்ம ராட்சதன் சொல்ல, அந்த இரண்டு பலனையும் தாரை வார்த்தார். அப்போ விமோசனமாச்சுது. ராட்சதன் வடிவைவிட்டு திவ்ய சொரூபமானான். அப்போ தெய்வலோகத்திலேயிருந்து இந்திர விமானமும் தெய்வ கன்னியர்கள் இருபுறமும் வெண்சாமரம் போட இப்டியாய விக்கிரமாதித்தராசாவுக்கு முன்னே ராட்சதன் தெய்வலோகம் போனான். அதன்பிறகு விக்கிரமாதித்தராசா உச்சனி பட்டணம் வந்து சேர்ந்தார். அப்படி நீயும் சகாயம் பண்ண வல்லவனானால் இந்த சிம்மாசனமேறலாமென்று" பன்னிரண்டாம் பதுமை சொல்ல போசராசன் வெட்கிப் போனான்.

பன்னிரண்டாம் பதுமை கதை முற்றும்

## பதிமூன்றாம் பதுமை கதை

பின்னையுஞ்சிறிது நாளைக்குப் பிறகு போசராசன் சிம்மாசனமேற வருவான். அப்போ பதிமூன்றாம் பதுமை சொல்லுங்கதை

"ஒகோ போசராசனே கேளும். விக்கிரமாதித்தராசா ராச்சியபாரம் பண்ணுகிறவேளையிலே விசயாபுரமென்கிற பட்டணமுண்டு. அந்தப் பட்டணத்திலே

பூவிலுமெய்யாளென்றொரு தேவடியாள். அவளுக்கு அநேக திரவியமுண்டு. அவளுக்கு அநேகநாள் பிள்ளையில்லாமல் அறுபது வயது ஆகிற மட்டுக்கும் பிள்ளையில்லாமலிருந்தது. அதுக்கு மேல் பரமேசுவரன் கிருபாகடாட்சத்தினாலே ஒரு பெண்பிள்ளையைப் பெற்றாள். அந்தப் பெண் அஞ்சு வயதானவுடனே பள்ளிக்கு வைத்து அரிவரி முதற்கொண்டு வண்ணச்சிந்து வெண்பா கலிப்பா, கலித்துறை இன்னிசை, தாழிசை, திவாகரம், திருமுறை, திருப்புகழ், தணிகை, நன்னூல், கொக்கோகம், சிந்தாமணி, பாஞ்சாலி பாதகாய்திரம் இப்படிப் படிப்பித்து வித்தையெல்லாம் கற்றபின்பு தாயாருடனே சொல்லி தனக்கு ஒரு அரண்மனை புறம்பாய் கட்டச்சொன்னாள்.

அந்த அரண்மனை எப்படியிருந்ததென்றால் எட்டுக்கட்டு வாசல் உண்டு பண்ணி அதுக்கு அப்பால் சந்தனச் சேறு பத்தாங்கட்டிலே நத்தக் கூட்டிலே தண்ணீர் அதுக்கப்பால் தூங்கும் மஞ்சத்துக்கு நாலுகாலுக்கும் நாலு பதுமையிருக்கும். ஒரு பதுமை தலையிலே சாணி வைக்கவும், ஒரு பதுமை தலையிலே விளக்கு வைக்கவும், இப்படிப்பட்ட அரண்மனை கட்டச் சொன்னாள்.

தனக்கு பன்னிரண்டு வயதானவுடனே அந்த அரண்மனையிலே நல்ல முகூர்த்தம் பார்த்து பஞ்சமியும் கற்கடக சந்திரோதையமும் உத்திராட நட்சத்திரமும் பெற்ற நாளில் நல்ல

முகூர்த்த வேளையிலே அந்த அரண்மனையிலே குடியிருந்துக் கொண்டு தினமொன்றுக்கு ஆயிரம் பொன் விசுவாசம் வாங்கிக் கொண்டு கன்னியழியாமல் தேடிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாள். அதெப்படியென்றால் விசுவாசங் கொடுத்த பேர் வந்தவுடனே முதல் கட்டில் வந்தால் கம்பக் கூத்தாடிகளும் நோக்கர்களும் வந்து ஒரு சாமம் பொழுது போக்குவார்கள். இரண்டாம் கட்டில் வந்தால் சாதிக் கூத்தாடிகளும் பதினெட்டு வகை கோழிச் சேவலுங்கட்டி ஆடுவார்கள். அது ஒரு சாமம் பொழுதுபோக்கவார்கள். அதுக்குந்தப்பிப் போனால் அஞ்சாங்கட்டிலே வளர்கிடா கட்டியிருக்கும். அதுக்குந்தப்பிப் போனால் ஆறாங்கட்டிலே வேட்டை நாய் கட்டியிருக்கும். அதுக்குந்தப்பிப் போனால் ஏழாங்கட்டிலே கரடி கட்டியிருக்கும். அதுக்குந்தப்பிப்போனால் எட்டாங்கட்டிலே புலி கட்டியிருக்கும். அதுக்குந்தப்பிப்போனால் ஒன்பதாம் கட்டிலே சந்தனக் கிணறு இருக்கும். அதுக்குந்தப்பிப்போனால் பத்தாங் கட்டில் தண்ணீர் வைத்திருக்கும். அதிலே கை, கால் அலம்பிக் கொண்டுப் போக வேணும்.

அதுவும் தப்பிப் போனால் நித்திரை மனையிலே போய் பார்த்தால் தூங்கும் மஞ்சமிருக்கும். அது கால்மாடு தலைமாடு பார்த்து அமர வேண்டும். அறியாமலிருந்தால் நாலு காலுக்கும் நாலு பதுமையிருக்கும். ஒரு பதுமை தலையில் தண்ணீர்

விடும். ஒரு பதுமை தலை சிரைக்கும். ஒரு பதுமை தலையில் சாணத்தை வைக்கும். ஒரு பதுமை விளக்கேற்றி வைக்கும். இப்படி நாலுகீர்த்தியும் பண்ணும். இதுக்கெல்லாம் உபாயம் பண்ணிக் கொண்டு போனாலும் கால்மாடு தலைமாடு அறிந்தாலும் அவள் வராமல் இரண்டு தெண்ட சிறுக்கிகளை அலங்காரம் பண்ணி அனுப்புவாள். அது அறிய வேணும். அது அறிந்தால் அந்த வசந்தமாலை வருவாள். அவளை எந்த உபாயமுண்டோ அப்படி கதை கவியாகிலுஞ் சொல்லி மூன்று வார்த்தை பேச வைத்தாலொழிய வந்த நாயகனுடனே பேசாள். அப்படி மூன்று வார்த்தை கொண்டாலும் சுய கவிசொல்ல பாஞ்சாலியும் மதன சாஸ்திரமும் இதுவெல்லாம் அறிந்தவனுடனே இஷ்டமன்மத உல்லாசத்துடனேயிருக்கிறதல்லாமல் மற்ற பேருடனே கூடுகிறதில்லை.

இப்படியிருக்கிற நாளையிலே அழகாபுரிபட்டணத்திலே நவகோடி நாராயண செட்டியாரென்றொரு செட்டியாருண்டு. அந்த செட்டியாருக்கு அநேகங்கோடி திரவியமுண்டு. அவருக்கு வெகுநாளாய் பிள்ளையில்லாமலிருந்து அவருக்கு அறுபது வயதுக்குமேல் பரமேசுவரர் தயவுபண்ணி கட்டளையிட்டு ஒரு ஆண் பிள்ளை பிறந்தது. அவனுக்கு அஞ்சுவயது ஆன பிறகு பள்ளிக் கூடத்திலே வைத்து அரிவரி முதல் கொண்டு

யாப்பலங்காரம் நன்னூலும் கற்ற பிறகு அவன் சமத்தனான பிறகு அந்த வர்த்தமானங்கேட்டு அந்த வசந்தமாலையை கன்னி அழிக்க வேணுமென்று சொல்லி அனேக திரவியமும் எடுத்துக் கொண்டு விசையாபுரி என்கிற பட்டணமே வந்து அவளுக்கு தினம் ஆயிரம் பொன் விசுவாசங்கொடுத்து நாலுகட்டுப்போனதேயொழிய அப்பாலே போனதுயில்லை. வசந்தமாலை இப்படிப்பட்டவளென்று அறியான்.

கொண்டு வந்த திரவியமெல்லாம் வெகுவிரைவிலே சிலவு பண்ணி விட்டோமென்று வசந்த தியானனென்கிற செட்டி மெத்தவும் விசனபட்டு சலித்துக் கொண்டு நாம் நம்முடைய பட்டணத்துக்குப் போனால் நமக்குச் சமானமான பேர்கள் சிரிப்பார்களென்று தான் தம்முடைய ஊருக்குப் போகிறதில்லையென்று தன்னுடனே கூட வந்த பேரையெல்லாம் ஊருக்கு அனுப்பிவிட்டுத் தானும் பரதேசம் போய் ராச்சியம் எல்லாம் சுற்றித் திரிந்து வருவோமென்று மனதிலே நினைத்துக்கொண்டு ஆரண்ணியமான காட்டிலே புகுந்து போய்க்கொண்டிருந்தான்.

நடுகாட்டிலே ஒரு பத்திரகாளி கோவிலிருந்தது. அந்த கோவிலுக்கு வந்து தாமரை தடாகத்திலே முழுகி மகாபரமேசுவரியான மகாகாளி சன்னதியிலே வந்து இரண்டு ஊசியை நிறுத்தி அதின் பேரில் தலை கீழும் கால் மேலுமாக

தபசு பண்ணுகிறதைப் பத்திரகாளி கண்டு சந்தோஷப்பட்டு "வசந்த தியானனென்கிற செட்டியரே வாராய். உனக்கு சகல சம்பத்தும் பரமேசுவரன் கட்டளையிட்டிருக்க நீ இப்படி அரிய தவம் இருக்கக்காரணமென்னவென்று" மகாபத்திரகாளி கேட்க அதுக்கு வசந்த தியானனென்கிற செட்டி சொல்லுவான். அந்த பாக்கியமெல்லாம் உம்முடைய தருமத்தினாலே வேண்டியது இருக்கிறது தாயே. அதுக்கெல்லாம் பஞ்சமில்லை.

விசையாபுரியென்கிற பட்டணத்திலே வசந்தமாலையென்கிற பெண்ணிருக்கிறாள். அவள் இல்லாத காரணமெல்லாம் கற்ப்பித்துக் கொண்டு இருக்கிறாளென்று வந்தேன் தாயே. அந்தப் பெண்ணை எனக்குப் மனைவியாகச் செய்து தரவேணும் தாயே என்று கேட்டடான். அப்போ பத்திரகாளி, "வாராய் வசந்த தியானனென்கிற செட்டியாரே வசந்தமாலையை மாலையிட்டுத் தர வேண்டும் என்றால் உச்சனி மாகாளி பட்டணத்து விக்கிரமாதித்தராசாவாயிருந்தால் மாலையிட்டுத் தருவார். அதுக்கு எப்படியாகவேணுமென்றால் உன்னுடைய பட்டணத்துக்குப் போய் லட்சம் பொன் எடுத்துக் கொண்டு போய் மைனாபி என்கிற மலைச்சார்பிலே பாதை மார்க்கத்திலே சேர்ந்த நடுக்காட்டிலே ஒரு குளம் வெட்டி அதைச் சுற்றி நந்தவனமும் வைத்து ஒரு சத்திரமும் கட்டி வைத்து ஒரு தண்ணீர் பந்தலும் போட்டு இந்தத் தருமம் விக்கிரமாதித்த

ராசாவினுடைய தருமமென்று கல்லுவெட்டி நாட்டிவைத்தால் விக்கிரமாதித்த ராசா நாடாறு மாதம் ராச்சியம் பண்ணி காடாறு மாதம் வனவாசம் பண்ண வருவான். அப்போ இதுவெல்லாம் பார்த்து அதிசயமாகி உன்னிடம் வருவான். அப்போ நீ வசந்தமாலையை மாலையிட்டுத் தரவேணுமென்று கேளும். அப்படியே மாலையிட்டுத் தருவாரென்று பத்திரகாளி சொல்லிவிட்டுப் போனாள்.

வசந்த தியானனென்கிற செட்டி அப்படியே தன்னுடைய பட்டணமே வந்து லட்சம் பொன்னெடுத்துக் கொண்டு போய் மைனாபியென்கிற மலைச்சார்பிலே மார்க்கத்திலே வழியைச் சேர்ந்தாப் போலே ஒரு குளம் வெட்டி, நந்தவனமும் வைத்து, ஒரு திருவாசலும் கட்டி, சத்திரமும் கட்டிவிட்டு, ஒரு தண்ணீர் பந்தலும் வைத்து இந்தப் புண்ணியமெல்லாம் விக்கிரமாதித்த ராசாவினுடைய தருமமென்று கல்லிலே வெட்டி நாட்டி வைத்துவிட்டு நித்தியம் போசனம் நூறு பேருக்குக் கொடுக்கக் கட்டளை பண்ணி வைத்துவிட்டு தன்னுடைய அழகாபுரி பட்டணத்துக்குப் போனார். சிறிது நாளைக்குப் பிறகு விக்கிரமாதித்தராசா காடாறுமாதம் வனசஞ்சாரத்துக்கு வந்து மைனாபியென்கிற மலைச்சார்பிலே வந்தார். அவ்விடத்திலே காதம் காதம் தண்ணீரில்லாமல் காடு மலையுமாயிருந்தது. ராசா வனசஞ்சாரம் பண்ணி வருகிறபோது மத்தியானமானபடியினாலே

ராசாவுக்குத் தண்ணீர் தாகமாய் வந்ததது. தண்ணீர் தேடிக் கொண்டு வருகிறபோது அவ்விடத்து பசுக்கள் வந்து மேய்ந்தது. அந்த பசு மேய்க்கிற இடையனைக் கண்டு இவ்விடத்தில் தண்ணீருண்டாவென்று கேட்க அந்த இடையன் குளத்துக்கு அடையாளஞ் சொன்னான். அந்த அடையாளமாக வந்து தண்ணீர் சாப்பிட்டு அந்த தருமங்கள் செய்து இருக்கிறதும் அந்த சத்திரத்திலே எவனொருவன் வந்தாலும் அன்னம் கொடுக்கிறதை பார்த்து அதிசயப்பட்டு இந்த ஆரண்ணியமான அத்துவான காட்டிலே இப்படிப்பட்ட தருமம் பண்ணுகிறவன் எந்த புண்ணியவானோவென்று மகா' சந்தோஷப்பட்டு அவ்விடத்திலேயிருக்கிற பேரைக் கூப்பிட்டு இது யாருடைய தருமமென்று கேட்டார். இது விக்கிரமாதித்தராசாவுடைய தருமமென்ற கல்லில் வெட்டியிருக்கிறதென்று சொன்னார்கள். அதை வாசித்துப் பார்த்து நாம் இதுவரையிலே அறியோமே நம்முடைய பேர் சொல்லி இத்தனை புண்ணிணும் பண்ணி வைத்தவன் யாரென்று அவ்விடத்திலிருக்கிற பேரைக் கேட்டால் அவர்கள், அழகாபுரி பட்டணத்திலிருக்கிற வசந்த தியானனென்கிற செட்டி என்று சொன்னார்கள். விக்கிரமாதித்தராசா கேட்டு அந்த புண்ணியவானுக்கு நம்மால் வேண்டிய காரியம் என்னமோவென்று அந்த காரியம் எந்த விதமாகிலும் நாம் சாதித்துக் கொடுக்க வேணுமென்று சொல்லி,

ராசா அழகாபுரி பட்டணமே வந்து வசந்த தியானனென்கிற செட்டியாரைக் கண்டார்.

மைனாபி பருவதத்து பாதை மார்க்கத்திலே குளமும் வெட்டி வைத்து நந்தவனமும் வைத்து சத்திரமும் கட்டி தினம் அன்னமுங் கொடுக்கச் சொல்லியிருந்தப் புண்ணியமெல்லாம் விக்கிரமாதித்தராசாவுடைய தருமம் என்று கல்லும் வெட்டி வைத்து இப்படி செய்த காரியமென்ன நான்தான் விக்கிரமாதித்தராசா. உமக்கு என்ன வரம் வேணுமென்று ராசா கேட்க, அப்போ வசந்த தியானனென்கிற செட்டியார், ‘‘வாராய் என்னுடைய சுவாமி விக்கிரமாதித்த ராசாவே அடியேனுக்கு உம்முடைய தருமத்தினாலே வேண்டிய பாக்கியமும் ஐசுவரியமும் உண்டு. அதிலே குறைவில்லை. விசையாபுரமென்கிற பட்டணத்திலே வசந்தமாலை என்றொரு பெண். அவள் தினம் ஆயிரம் பொன் விசுவாசம் வாங்கிக் கொண்டு கன்னியழியாமல் தேடி சாப்பிட்டுக் கொண்டுயிருக்கிறாள். அதெப்படியென்றாள் விசுவாசங் கொடுத்த பேர் வந்தவுடனே முதல் கட்டிலே கம்பங் கூத்தாடிகள், நோக்க வித்தைக்காரர் வந்து ஒரு சாமம் பொழுதோட்டுகிறார்கள். இரண்டாங்கட்டு வந்தால் காதி கூத்தாடிகளும் கோழிச்சாவங்களும் வந்து ஒரு சாமம் பொழுதோட்டுவார்கள். மூணாங்கட்டே வந்தால் மல்ல செட்டிகள் தலைக்கு எண்ணெய்

தேய்த்து ஒரு சாமம் பொழுதுதோட்டுகிறார்கள். நாலாங்கட்டு வந்தால் மல்ல செட்டிகள் வந்து கை கால் குத்துகிறதிலே ஒரு சாமம் பொழுது விடிந்து போகும். விசுவாசங் கொடுத்தபேர் வெளியே போவார்கள்.

அதுவுங்கடந்துப் போனால் அஞ்சாங்கட்டில் வளர்ப்புக் கிடா கட்டியிருக்கும். அதுவுங் கடந்து போனால் ஆறாங்கட்டிலே வேட்டை நாய் கட்டியிருக்கும். அதுவும் கடந்து அப்புறம் ஏழாங்கட்டே போனால் கரடி கட்டியிருக்கும். அதுவுங்கடந்து எட்டாங்கட்டே போனால் புலி கட்டியிருக்கும். அதுக்குந்தப்பிப்போனால் ஒன்பதாம் கட்டிலே சந்தனக் கிணறு இருக்கும். அதுக்குந்தப்பிப்போனால் பத்தாங் கட்டில் தண்ணீர் வைத்திருக்கும். அதிலே கை, கால் அலம்பிக் கொண்டுப் போக வேணும். அதுவும் தப்பிப் போனால் நித்திரை மனையிலே போய் பார்த்தால் தூங்கும் மஞ்சமிருக்கும். அது கால்மாடு தலைமாடு பார்த்து அமர வேண்டும். அறியாமலிருந்தால் நாலு காலுக்கும் நாலு பதுமையிருக்கும். ஒரு பதுமை தலையில் தண்ணீர் விடும். ஒரு பதுமை தலை சிரைக்கும். ஒரு பதுமை தலையில் சாணத்தை வைக்கும். ஒரு பதுமை விளக்கேற்றி வைக்கும். இப்படி நாலுகீர்த்தியும் பண்ணும். இதுக்கெல்லாம் உபாயம் பண்ணிக் கொண்டு போனாலும் கால்மாடு தலைமாடு அறிந்தாலும் அவள் வராமல் இரண்டு

தெண்ட சிறுக்கிகளை அலங்காரம் பண்ணி அனுப்புவாள். அது அறிய வேணும். அது அறிந்தால் அந்த வசந்தமாலை வருவாள். அவளை எந்த உபாயமுண்டோ அப்படி கதை கவியாகிலும் சொல்லி மூன்று வார்த்தை பேசி வைத்தாலொழிய வந்த நாயகனுடனே பேசாள். அப்படி மூன்று வார்த்தை கொண்டாலும் சுய கவிசொல்ல பாஞ்சாலியும் மதன சாஸ்திரமும் இதுவெல்லாம் அறிந்தவனுடனே இஷ்டமன்மத உல்லாசத்துடனே இருக்கிறதல்லாமல் மற்ற பேருடனே கூடுகிறதில்லை. உத்திரம் பிரதி உத்தரம் அவள் மனதுக்குச் சரிப்போக எட்டிவித்தால் அதுக்கு மேல் அவள் கட்டுவாள்.

இந்த விவரமெல்லாம் கேட்டு அவள் மேல் நான் மெத்தவும் மோகித்து மோகமாயிருக்கிறேன். அந்தப் பெண்ணை எனக்கு எந்த விதத்திலேயும் பிரயாசப்பட்டு மாலையிட்டுக் கொடுத்தால் வெகு புண்ணியமுண்டு. இந்த தருமம் செய்தாலும் உமக்குப் பிறவா நெறியுண்டென்று வசந்த தியானனென்கிற செட்டியார் ராசாவுடனே சொன்னார். அதுகேட்டு விக்ரமாதித்தராசா கேட்டு சந்தோஷப்பட்டு ஆகட்டும் அந்தப் பெண்ணை உனக்கு எந்த விதத்திலாகிலும் மாலையிட்டுத் தருகிறேன். அதற்கு சந்தேகமில்லை. ஆனாலும் உனக்கு இந்த விவரமெல்லாம் சொன்னது யாரென்று கேட்க அப்போ வசந்தியானனென்கிற செட்டி, "வாருமையா என் பிதாவான

சுவாமி நான் அவள் மேலே மெத்த மனதாகி அநேக திரவியமெடுத்துக் கொண்டு விசையாபுரமென்கிற பட்டணம் போய் அவளுக்குத் தினமும் ஆயிரம் பொன் விசுவாசம் அனுப்புவித்துக் கொண்டு வெகுநாளிருந்தேன். கையிலிருந்த திரவியமெல்லாம் சிலவழிந்து போச்சுது. இதுவரைக்குள்ளாக அவளுடைய பத்துக்கட்டு அரண்மனையிலே நாலுகட்டு போனதே ஒழிய அப்பாலே எப்படியிருக்குமோ அறியேன். நானும் சலித்து என்னுடனே கூட வந்தவரையும் ஊருக்கு அனுப்பி விட்டுப் பரதேசம் போக வேணும் என்று போனேன்.

நடுகாட்டிலே ஒரு பத்திரகாளி கோவிலிருந்தது. அந்த பத்திரகாளி கோவிலுக்குப் போய் தாமரைக் குளத்திலே ஸ்நானம் பண்ணி அந்த பத்திரகாளி சன்னதிக்கு முன்னே வந்து இரண்டு ஊசியை நிறுத்தி அந்த ஊசி முனையிலே தலைகீழும் கால்மேலுமாக தபசு நின்றேன். அப்போ மகாகாளி வந்து சந்தோஷப்பட்டுப் பிரத்தியட்சமாய் மகனே உனக்கு என்ன வரம் வேணுமென்று கேட்டாள். அப்போ எனக்கு வசந்தமாலையை மாலையிட்டுத் தர வேணுமென்று கேட்டேன். அதுக்கு மாகாளி சொன்னது உச்சினிமாகாளி பட்டணத்தில் விக்கிரமாதித்தராசா இருக்கிறார். அவர் நாடாறு மாதம் போய்க் காடாறு மாதம் வருவார். அதற்கு முன்னே நீ போய் மைனாபி என்கிற மலைச்சார்பிலே ராசபாட்டையில் லட்சம் பொன் சிலவழித்து

குளமும் நந்தவனமும் சத்திரமும் கட்டித் தண்ணீர்ப் பந்தலும் வைத்து, இந்த தருமம் விக்கிரமாதித்தராசாவுடைய தருமமென்று கல்லிலெழுதி வைத்துவிட்டு எப்போதும் போலே உன்னுடைய உன்னுடைய ஊருக்குப் போய் இரும். விக்கிரமாதித்தராசா வந்து அந்த தருமத்தைப் பார்த்து வெகு சந்தோஷப்பட்டு உன்னிடம் வருவார். அப்போ வசந்தமாலையை மாலையிட்டுத் தரச் சொல்லிக் கேளும். அப்படியே எந்த விதத்திலேயும் உன்னுடைய மனதுபடிக்கு வசந்தமாலையை மாலையிட்டுத் தருவாரென்று பத்திரகாளி திருவாக்கு கூறினாள். ஆனபடியினாலே உம்முடைய பேரைச் சொல்லி தருமம் பண்ணி வைத்தேனென்று சொன்னான்.

விக்கிரமாதித்தராசா சந்தோஷப்பட்டு வசந்த தியானனென்கிற செட்டியாரையும் கூட்டிக் கொண்டு விசையாபுரமென்கிற பட்டணம் வந்து வசந்தமாலைக்கு ஆயிரம் பொன் விசுவாசம் கொடுத்தனுப்பினார்கள். அவளும் எப்போதும் போல பணத்தை வாங்கிக் வாங்கிக் கொண்டு தன் வாசல் காவல்காரரை எச்சரிக்கையாயிருக்கச் சொன்னாள்.

விக்கிரமாதித்தராசா பொழுது விழுந்தவுடனே நாலாளை சம்பாதித்துக் கொண்டு, பணியாரம், அறுகம்புல்லு, மாங்கிஷமும் வாங்கிக் கொண்டு, புத்தாஞ்சோறு சம்பாதித்துக் கொண்டு, மூங்கிற்சிம்பி பிடித்துக் கொண்டு வசந்த மாலையின்

அரண்மனைக்கு சென்றனர். அந்த ஆளுகளையும் கூட்டிக் கொண்டு நாலுபேரையும் நாலு வாசலிலே இருந்து அவ்விடத்து நடக்கையெல்லாம் பார்க்கச் சொல்லி வைத்துவிட்டு அஞ்சாங்கட்டே போகிறபோது கட்டியிருந்த வேட்டை நாய்க்கு, ராசா பணியாரத்தைப் போட்டார். ஆறாங்கட்டே போகிறபோது வளர்கிடா கட்டியிருந்தது, அதுக்கு அறுகம்புல்லைப்போட்டார். ஏழாங்கட்டே போகிறபோது கரடி கட்டியிருந்தது, அதுக்குப் புத்தாஞ்சோற்றைப் போட்டார். எட்டாங்கட்டே போகிறபோது புலிகட்டியிருந்தது, அதுக்கு மாங்கிஷத்தைப் போட்டார். ஒன்பதாங் கட்டே போகிறபோது சந்தனக்கிணறு இருந்தது. அந்த கிணற்றிலிறங்கிப் போய் மூங்கிற் சிம்பியால் துடைத்துவிட்டுப் பத்தாங்கட்டில் போகிறபோது நத்தாங்கூட்டில் கால் கழுவ தண்ணீர் வைத்து இருந்தது. அவ்விடத்திலே இருந்த பெண்ணைக் கூப்பிட்டு இந்த தண்ணீரை உங்கள் நாச்சியாரை முகங் கழுவிக்கச் சொல்லென்று கொடுத்துப் போனார்.

நித்திரைமனையிலே போய் தூங்கு மஞ்சத்தின் மேலே எலுமிச்சம் பழத்தைப் போட்டவுடனே கால்மாட்டிலே போச்சுது. இது கால்மாடென்று அறிந்து தலைமாட்டில் அமர்ந்து கொண்டு வசந்த மாலையை வரச்சொல்லி தாதியை அனுப்பினார். அவள் போய் சொன்னவுடனே வசந்தமாலை வராமல் சலித்து

இதுவெல்லாம் கடந்து வந்தபோதே இவர் யாரோவென்று அதிசயப்பட்டு தன்னிலும் ரூபமான பெண்ணை அலங்கரித்து சர்வாபரண பூஷணமெல்லாம் பூட்டி கனக பீதாம்பர சரிகைச் சேலையுடுத்தி புனுகு, சவ்வாது, கந்த, கஸ்தூரி, பல புஷ்ப சாதிகளும் தரித்து ராசாவிடம் போகச் சொல்லி அனுப்பினாள்.

வேதாளம் இதை பார்த்திருந்து வாசல் கூட்டுகிறவளென்று ராசாவிடம் சொல்லிற்று. அதுகேட்டு ராசா வெற்றிலையைக் கிள்ளி கட்டிலின் முன்னே போட்டார். அப்போ அவள் வந்து பார்த்து ராசாயிருக்கிற இடத்தில் செத்தை கிடக்கிறதென்று விளக்குமாரெடுத்துக் கூட்டிவிட்டு கை கழுவாமல் ராசாவின் முன்னே நின்றாள். ராசா அவளைப் பார்த்து வாடி வெள்ளாட்டி உங்கள் நாச்சியாரை வரச் சொல்லென்று போகச் சொன்னார். அவள் போய் இந்த வார்த்தையைச் சொன்னவுடனே மெத்தவும் சலித்துக் கொண்டு பின்னையும் விளக்குப் பார்க்கிறவளை அழைத்து அவளுக்கு தன்னுடைய ஆடை ஆபரணமெல்லாம் பூட்டி, புனுகு, சவ்வாது, கெந்த, கஸ்தூரியும் அணிந்து போகவிட்டாள். அவள் வருகிறபோது ராசா தன்னருகில் உள்ள விளக்குத்திரியை உள்ளுக்கு இழுத்து வைத்தார். அவள் வந்து பார்த்து ராசாவின் முன்னேயிருக்கிற குத்துவிளக்கு அவிந்து போகிறதென்று தன்னுடைய விரலிலே தூண்டிக் கொடுத்து தலையிலே தடவிக்

கொண்டாள். அப்போ ராசா அவளைப் பார்த்து வாடி விளக்குப் பார்க்கிற வெள்ளாட்டி உங்கள் நாச்சியாரை வரச் சொல்லென்று போகச் சொன்னார்.

அவள் போய் சொன்னவுடனே வசந்தமாலை மனம் சஞ்சலித்து வெகு ஆலோசனைகள் பண்ணி நாம் இதுவரைக்கும் பரமசிவம் கட்டளையிட்ட அதிகாரபடிக்க சாதித்துக் கொண்டு இருந்தோம். அந்த அதிகாரம் தீர்ந்ததென்று துரும்பு கிள்ளி தலை குனிந்து கொண்டு ஒரு ஆபரணமும் பூட்டிக் கொள்ளாமல் ராசா முன்னே வந்து கட்டிலின் பேரிலிருந்தாள். அப்போ ராசாவும் பார்த்து சந்தோஷப்பட்டு வசந்தமாலை இவளேயென்று இவளை மூன்று வார்த்தை பேச வைத்தாலொழிய நம்முடனே பேசாளென்று எண்ணினார்.

மேல் கட்டிலே வேதாளத்தை நிறுத்தி ராசா மேல் கட்டிலைப் பார்த்து வாராய் மேற்கடலே வசந்த மாலையும் பேசுகிறதில்லை. பொழுதும் விடிகிறதில்லை. நீயாகிலும் ஒரு கதை சொல்லென்று கேட்க அதுக்கு மேல் கடலும் சொல்லும். என்னை நாலு மூலைக்கும் நாலு கயிறு போட்டு கட்டியிருக்கிறதே. நான் எப்படி கதை சொல்லுவேனென்று சொல்ல அப்போ வசந்தமாலை பார்த்து இது என்ன காரணமென்று மேல் கடலை அவிழ்த்துப் போட்டாள்.

அப்போ வேதாளம் கதை சொல்லுகிறது. மதுராபுரியென்றொரு

பட்டணம் உண்டு. அவர்கள் காலமே எழுந்திருந்து சரீர சுத்திபண்ணிக் கொண்டு பூங்காவனத்துக்குப் போய் புஷ்பங்களெடுத்துக் கொண்டு வருவார்கள். இப்படி இருக்கிற நாளையிலே ஒரு நாள் மூன்று பேருமாகப் போய், புஷ்பங்களெடுத்துக் கொண்டு ஏக போ நாகரீக உல்லாசமாக விளையாடி உடம்பு வேர்த்து இளைப்பாகிச் சற்று நேரம் இந்தப் பூங்காவனத்திலே படுத்திருந்து போவோமென்று மூவருங் கூடி யோசனை பண்ணி ஒரு செண்பகமரத்தின் கீழே மண்ணைப் பரப்பி அந்த நிழலிலே படுத்திருந்தார்கள்.

அப்போ இளந்தென்றல் காற்று அடித்து ஒரு செண்பகயிதழ் முறிந்து ஒருத்தி மார்பிலே விழுந்து ஊடுருவி மாண்டு போனாள். அதன் பிறகு ஒரு கன்னியெழுந்து பார்த்தாள். இவள் மாண்டு கிடக்கிறதைக் கண்டு நாம் வீட்டிலே போய் என்னவென்று சொல்லுவோமென்று அவளும் ஒரு செண்பகயிதழைக் கீழே நாட்டி அதின் பேரில் விழுந்து மரித்துப் போனாள். இவர்கள் இரண்டு பேரும் மரித்துப் போனதின் பிறகு ஒருத்தி எழுந்து பார்த்து இவர்கள் இரண்டு பேரும் மரித்துப் போன சேதி வீட்டிலே வந்து சொன்னாள்.

இவள் இரண்டு பேரிலே மெல்லிய சரீரம் யாரென்று மேல்கடலும் கேட்க ராசா, வசந்தமாலையைப் பேசிவிக்கவேண்டி அவளுக்காக இதழை நாட்டி விழுந்து செத்தவளின் சரீரமே மெல்லியது என்று

சொன்னார். உடனே வசந்த மாலை, "அப்படியல்ல கேளும் ராசாவே முதல் இதழ் முறிந்து விழுகிற போது வந்து இதழ் விழுந்து செத்தாளே அவள் சரீரமே மெல்லியது" என்று சொன்னாள். அப்போ ராசா வார்த்தை ஒன்று கொண்டோமென்பார். அப்போ வசந்தமாலை வாயிலே அடித்துக் கொண்டு மனஸ்தாபமாயிருந்தாள். பின்னுஞ் சிறிது நேரத்துக்குப் பிறகு ராசா சொல்லுவார். வசந்தமாலையும் பேசுகிறதில்லை. பொழுதும் விடிகிறதில்லை வசந்தமாலை மூக்கிலே இருக்கிற மூக்குத்தியே நீயாகிலும் ஒருகதை சொல்லென்று கேட்டார்.

அப்போ மூக்குத்தி, என்னை தட்டானிடம் கொடுத்து உருக்கி நீட்டி மூக்கில் போட்டிருக்கிறாளே. நான் எப்படி சொல்லுவேனென்று சொல்ல அப்போ வசந்தமாலை மூக்குத்தியைக் கழற்றிப் போட்டாள்.

மூக்குத்தி கீழே இருந்து கதை சொல்லும். கேளும் ராசாவே சென்னைப் பட்டணத்திலேயிருந்து நாலு பேர் பரதேசம் போக வேணுமென்று புறப்பட்டார்கள். அவர்கள் நாலு பேரும் யாரென்றால் பிராமணனொருவன், தச்சனொருவன், தட்டானொருவன், கைக்கிளவனொருவன். இவர்கள் நாலு பேரும் புறப்பட்டு தேசமெல்லாம் சுற்றி இமாயபுரமென்கிற பட்டணத்துக்கு வந்தார்கள். அந்த பட்டணத்திலே அசலூரிலே

இருந்து எவனொருவன் வந்தாலும் ராத்திரிக்கு அந்தப்பட்டணத்து சாவடியிலேயிருந்தால் அந்த ராத்திரியிலே பேய் அடித்துப் போடுமென்று சொன்னார்கள். அதுகேட்டு இவர்கள் நாலு பேரும் யோசனை பண்ணிக் கொண்டு நாம் நாலு பேரிருக்கிறோம். ஆளுக்கொரு சாமம் முழித்திருப்போமென்று முடிவு செய்து கொண்டார்கள்.

முதல் சாமத்துக்கு தச்சன் முழித்திருந்தான். அப்போ தச்சன் தனக்கு நித்திரை வராமலிருக்க வேணுமென்று ஒரு பொதிகை கட்டை சம்பாதித்து ஒரு பெண்ணாகப் பண்ணி வைத்துவிட்டுத் தச்சன் படுத்துக் கொண்டான். இரண்டாம் சாமத்துக்கு பிராமணன் எழுந்திருந்து தனக்கு நித்திரை வராமலிருக்க வேணுமென்று தச்சன் பண்ணின பெண்ணுக்கு ஓம் சாந்தி பண்ணி நேமநிஷடையோடுங்கூடி பிரதிஷ்டை பண்ணி சொரூபமுண்டாக்கிப் பேசத்தக்கதாகப்பண்ணிவிட்டு படுத்துக் கொண்டான்.

மூணாஞ்சாமத்துக்குக் கைக்கிளவன் எழுந்திருந்து தனக்கு நித்திரை வராமலிருக்க வேணுமென்று இந்தப் பெண் மானத்துடனே இருக்கிறதைப் பார்த்து ஒரு சித்தாடை நெய்து உடுத்திவிட்டுப் படுத்துக் கொண்டான். பின்பு நாலாஞ்சாமத்துக்கு தட்டான் எழுந்திருந்து பார்த்து தனக்கு நித்திரை வராமலிருக்க வேணுமென்று ஒரு தாலியைப் பண்ணி

இந்த பெண்ணுக்குக் கட்டி விட்டான்.

நாலு சாமமும் சென்று விடிந்த பிறகு இருந்த பெண்ணைப் பார்க்கிறபோது அதிக ரூபமாய் எவ்வர்ண அழகு சவுந்தரியமாயிருக்கிறதைப் பார்த்து உனக்கு எனக்கு என்று அடித்துக் கொண்டார்கள். அந்தப் பெண் யாருக்கு மனையாளாக வேணுமென்று மூக்குத்தி ராசாவைக் கேட்க, அதுக்கு ராசா எதார்த்தம் சொல்லாமல் வசந்த மாலையைப் பேசவிக்க வேண்டி விகடமாய் முதலுண்டாக்கினவன் தச்சனல்லவோ அவனுக்கு அந்தப் பெண் மனையாளென்று சொன்னார்.

உடனே வசந்த மாலை சொல்லுவாள். அப்படியல்ல காண் ராசாவே. முதல் உண்டாக்கின தச்சன் தகப்பனாக வேணும். பிராமணன் பிரதிஷ்டை பண்ணினவன் குருவாக வேணும். சிலையுடுத்தின கைக்கிளவன் தமையனாக வேணும். தாலி கட்டின தட்டானுக்கே அந்தப் பெண் மனையாளென்று சொன்னாள். அப்போ ராசா சந்தோஷப்பட்டு வார்த்தை இரண்டு கொண்டோமென்றார். அப்போ வசந்தமாலை வாயிலே அடித்துக் கொண்டு மெத்த மனஸ்தாபத்துடனே இருந்தாள்.

பின்னையுஞ் சிறிது நேரத்துக்கும் பிறகு குத்து விளக்கைப் பார்த்து பொழுதும் போகிறதில்லை. வசந்தமாலையும் பேசுகிறதில்லை. நீயாவது ஒரு கதை சொல்லென்று ராசா

அப்படியே பரமசிவன் அவனுக்கு மகா மந்திர உபதேசம் பண்ணி இந்த மந்திரத்தை உபதேசித்து சலத்தை ஓதி விட்டால் மாண்டு போன பேரும் பட்ட விருட்சமும் எழுந்திருப்பார்களென்று பரமசிவன் கட்டளையிட்டுப் போனார்.

அவனும் வரம் பெற்று மாசான பூமியே வந்து அந்தப் பெண்ணுடைய எலும்பையெல்லாம் பொருக்கிக் குவித்து கமண்டல சலத்தைத் தெளித்து மந்திர உபதேசம் பண்ணுகிற போது முன்னிலும் அதிகமான ரூபசவுந்தயத்துடனே தூங்கி எழுந்திருந்தாப் போல அந்தப் பெண் எழுந்திருந்தாள். அப்போ கங்கைக்குப் போனவனும் வந்தான். இந்த மூணு பேரும் அந்த பெண்ணை உனக்கு எனக்கு என்று அடித்துக் கொண்டார்கள். அந்தப் பெண் யாருக்குப் மனைவியாக வேணுமென்று குத்து விளக்கு ராசாவைக் கேட்டது.

ராசா வசந்தமாலையைப் பேசிவிக்கிற நிமித்தியம் விகடமாய் எழுப்பினவனுக்குப் மனைவியென்று சொன்னாள். அப்போ வசந்தமாலை அப்படி அல்ல காண் ராசாவே எழுப்பினவன் தகப்பனாக வேணும். கங்கைக்குப் போனவன் பிள்ளையாக வேணும். மசானத்தைக் காத்தவனுக்கு அந்தப் பெண் பாரியாக வேணுமென்று சொல்ல ராசாவும் வார்த்தை மூணு கொண்டோமென்றார். அப்போ வசந்தமாலை எழுந்திருந்து ராசாவின் பக்கம் வர ராசா சொல்லுவார். தன் தாரமே

தாரம். பிற தாரம் புத்திரன் தாரம். என்னண்டையிலே வராதே. அழகாபுரி பட்டணத்திலே நவகோடி நாராயண செட்டியார் குமாரன் வசந்த தியானன் என்கிற செட்டி வந்திருக்கிறான். அவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளென்று ராசா சொன்னார்.

வசந்த மாலை. வாரீர் ராசாவே பதினெட்டு பாஷையும் பாஞ்சாலி பரத சாஸ்திரமும் அறிந்தவனுடனே கூடுகிறதொழிய மற்ற பேருடனே கூடுகிறதில்லை என்று சொனனாள்.

வசந்த தியான செட்டியாரைப் பார்த்து வாராய் வசந்த தியான செட்டியாரே உனக்குயிந்த வகைகளனைத்தும் தெரியுமா என்று கேட்க, ஒன்றுந்தெரியாதென்று சொன்னான் செட்டி. அப்போ முன்னாலே வசந்த தியானன் என்கிற செட்டிக்கு வரங்கொடுத்து பத்திரகாளி கோவிலுக்கு ராசா அழைத்துப் போய் தாமரை தடாகத்திலே ஸ்நானம் பண்ணி பூசை புஷ்பம் முடித்துக் கொண்டு நேமநிஷ்டையோடு பத்திரகாளியை வணங்கி ராசா தன்னுடைய கழுத்தை அறுத்துக் கொள்ளுகிற தருவாயிலே மகாபத்திரகாளி பிரத்தியட்சமாகி வாராய் ராசாவே நீயிப்படி செய்துக் கொள்ளுகிற காரணமென்னவென்று கேட்டாள்.

அதுக்கு ராசா வாராய் அம்மா அழகாபுரி பட்டணத்திலேயிருந்து வசந்த தியானன் என்கிற செட்டி வந்திருக்கிறான். அவனுக்குப் பதினெட்டு பாஷையும் பாஞ்சாலி

பரத சாஸ்திரமும் மதன சாஸ்திரமும் இதுவெல்லாம் மனதிலே உற்பத்தியாக வேணுமென்று பத்திரகாளியை ராசா கேட்க பத்திரகாளி மகாசந்தோஷப்பட்டு மந்திர உபதேசமுஞ் செய்து நாவிலே பீகாட்சரமெழுதி அனுப்பிவித்தாள். அப்படியே பத்திரகாளி கையிலே விடைபெற்றுக் கொண்டு வசந்தியானனென்கிற செட்டியாரையும் அழைத்துக் கொண்டு வசந்தமாலையின் அரண்மனைக்கு வந்து அவள் மனது சரிவர பஞ்சலட்சணமும் பரதசாஸ்திரமும் பதினெட்டு பாஷையும் மதன சாஸ்திரமும் வசந்த தியான செட்டியார் வாக்கினாலே வசந்த மாலைக்கு ஒப்புவிக்கச் செய்தார். வசந்தமாலையும் சந்தோஷப்பட்டுக் கொண்டு செட்டியை கல்யாணம் பண்ணிக் கொண்டாள். ராசா இருவருக்கும் கல்யாணம் பண்ணி வைத்துவிட்டு வசந்த தியானன் என்கிற செட்டியையும் வசந்த மாலையையுங் கூட்டி அழகாபுரி பட்டணத்துக்கு அனுப்பி விட்டு விக்கிரமாதித்தராசா உச்சினி மாகாளி பட்டணம் வந்து சேர்ந்தார். நீயும் அப்படி சகாயம் பண்ண வல்லவன் ஆனால் இந்த சிம்மாசனமே ஏறலாம் என்று பதின் மூன்றாம் பிரதமை சொல்ல போசராசன் வெட்கிப் போனான்.

பதின் மூன்றாம் பதுமை கதை

## பதினான்காம் பதுமை கதை

பின்னையுஞ் சிறிது நாளைக்குப் பிறகு போசராசா

சிம்மாசன மேற வேண்டும் என்று வருவான். அப்போ பதினான்காம் பதுமை சொல்லுங் கதை

''விக்கிரமாதித்தராசா ராச்சிய பாரம் பண்ணுகிற காலத்திலே நோவான் தேசத்திலே ராசாக்களெல்லாரும் கூடியிருந்து விக்கிரமாதித்தராசாவைத் தியாகியென்று சொல்லுகிறார்கள். அவரைப் பார்க்க வேண்டுமென்று தங்கள் மந்திரிகளை அழைத்துக் கேட்டார்கள். அப்போ விக்கிரமாதித்தனுடைய புதுமைகளை விசாரிக்கிற பொழுது ஒரு கல்யாண புருஷன் வந்து கண்டான். அவனைக் கண்ட மாத்திரத்திலே நமஸ்கரித்து விக்கிரமாதித்தராசாவைப் போல சவுகரியமும் தியாகமும் பண்ணத்தக்கபேர் இவரே என்று சொல்லுகிறார்கள். நாமும் அவரைப் போலே தியாகியாக வேண்டுமென்று கேட்ட அளவிலே கல்யாண புருஷன் சொன்னது நீயும் தியாகம் பண்ண வேண்டுமென்றால் மூல மந்திரமும் அஷ்ட ஐசுவரியமும் நூறாயிரம் செபம் பண்ணி ஷேமத்துடனே ஓமம் வளர்த்தி தன்னுடைய தேகத்தை அறுபத்து நான்கு கண்டமாய் அறுத்து ஓமத்தீயிலே மந்திரத்துடனே போட்டு அப்படி ஓமம் பண்ண வேண்டுமென்று சொல்ல அந்தப்படியே ஓம குண்டமுண்டு பண்ணி ஓம முடிந்தளவிலே அந்த அக்கினியிலே ஸ்நானம் பண்ணி ஐசுவரனையும் ஐசுவரியையும் தோத்திரம் பண்ண வேண்டும் என்று சொன்னார்.

அந்தப்படிக்கு நோவான் தேசத்திலே விக்கிரமாதித்தராசாவிருந்த பிரகாரம் அறுபத்து நான்கு யோகமும் தேச கீர்த்தியும் மூல மந்திரமும் உக்காடனம் பண்ணி அக்கினியிலே ஸ்நானம் பண்ணி எழுந்திருக்கிறபோது ஐசுவரிகிருபை வைத்து உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்க... அப்படியே உன்னுடைய தேசமெல்லாம் ஆளவைத்து இந்தப்படி ஓமம் பண்ணினால் அந்த தனமெல்லாம் தியாகம் பண்ணிக் கொண்டு இருந்தான். அப்போ ஒரு வித்துவான் அதிக பிரதாபனென்கிறவன் வந்து அந்த ராசாவின் முன்னே வந்து வித்தை களாட்டம் பண்ணி கோடி திரவியம் வாங்கிக் கொண்டு வந்து விக்கிரமாதித்தராசாவிடம் வந்து ராசாவே உம்மைப் பார்க்கிலும் தியாகியாகயிருக்கிறான். அவன் நோவான் தேசத்திலே இருக்கிறவன் தினம் வித்துவாங்கிஷருக்கும் பிராமணருக்கும் இளைத்தவன் தவித்தவன் தியாகி என்று வந்த பேருக்கும் சொர்ணமயமாய்க் கொடுக்கிற தியாகியாயிருக்கிறானென்று வித்துவான் சொன்னான்.

விக்கிரமாதித்தராசா கேட்டு அந்தக்கணமே நோவான் தேசத்துக்கு வந்து கீர்த்திபனென்கிற ராசாவைக் கண்டு இவனையுங் கூட்டிக் கொண்டு காளிதேவி கோவிலுக்குப் போய் அங்கே ராசா ஓமம் பண்ணி அக்கினியிலே குதித்தான். குதித்த மாத்திரத்திலே காளிகாதேவி ஓடிவந்து ஓகோய்

விக்கிரமாதித்தராசாவே இப்படி சாகசம் பண்ணுவார்களோ. உனக்கு என்னவரம் வேணுமென்று காளிகாதேவி கேட்க அப்போ விக்கிரமாதித்தன் சொல்லுவான். கீர்த்திபனென்கிற ராசா தான் பிரயாசப்பட்டு தனம் தேடி சில விடுகிறான். அவன் ஒரு நாள் பண்ணின ஓமமே கைக்கொண்டு அவன் சிலவழிக்கத்தக்கதாக திரவியம் உக்கிராணம் குறையாமல் நிறைந்திருக்க வேண்டும் என்று கேட்டார். அப்படியே காளிகாதேவி கையிலே வரம் வாங்கிக் கொடுத்து அந்த ராசாவை அனுப்பி விட்டுப் போட்டு விக்கிரமாதித்தராசா உக்கினி மாகாளி பட்டணமே வந்து சேர்ந்தார். அப்படி நீயும் சரீர பிரையாசைப்பட்டு பரஉபகாரம் பண்ண வல்லமையுண்டானால் இந்த சிம்மாசனமே ஏறலாம்'' என்று பதினான்காம் பதுமை சொல்ல போசராசா வெட்கிப் போனான்.

பதினான்காம் பதுமை முற்றும்

## பதினைந்தாம் பதுமை கதை

பின்னையுஞ் சிறிது நாளைக்குப் பிறகு போசராசா சிம்மாசனம் ஏற வருவான். அப்போ பதினைந்தாம் பதுமை சொல்லுங்கதை.

ஓகோய் போசராசனே கேளும். விக்கிரமாதித்தராசா ராச்சியபாரம் பண்ணுகிற நாளையிலே கலியுகத்திலே தருமத்தை நிலை நிறுத்த வேண்டும் என்று தன்னுடைய

ராச்சியத்திலேயிருக்கிற ராசாக்களை அனுப்புவித்து சிம்மாசனத்தின் பேரிலேயிருந்து கொண்டு கப்பங் கொண்டு வரச் சொல்லி அந்த ராசாக்களை அழைப்பித்து நிர்ணயம் பண்ணுகிற வேளையிலே ஒரு சித்தன் வந்து சிங்காசனத்தின் கிட்ட வந்தான். அவனை விக்கிரமாதித்தராசா பார்த்து பூலோகத்துக்குள்ளே அபுரூபமான வஸ்துக்களுண்டோவென்று கேட்டார். அதுக்கு சித்தன் சொல்லுகிறான்.

உதயகிரி பருவத்தில் மந்திரியென்றொரு பட்டணமுண்டு. அதில் சமய பிரதியென்றொரு தெருவீதி. அதிலே சமைய நாராயணன் கோவிலுண்டு. அந்த கோவில் முன்னே ஒரு குளமுண்டு. அந்த குளத்துக்கு ஆகாசத்திலே படிக்கட்டு. அந்தக் குளத்தில் செந்தாமரை, செங்கழணி, அல்லி, நெய்தல் முதலானது நீரில் வாழுகிற புஷ்ப சாதியெல்லாம் பூத்திருக்கும். அந்த குளத்தில் நடுவே பொற்கம்பம். உதயத்தில் ஒரு கம்பம் எழுந்திருக்கும். மத்தியானமாகிறபோது சூரியனைக் கிட்டும். அஸ்தமிக்கிற போது குளத்துக்குள்ளே அஸ்தமிக்கும். அதுகேட்டுப் பட்டியை அழைப்பித்து நான்காடாறு மாதம் போகிறேன். ராச்சியத்திலே பகுதி வாங்கி உக்கிராணத்திலே போட்டுக் கொண்டிருக்கச் சொல்லிவிட்டு உதயகிரி பருவதத்துக்குப் போனார்.

அவ்விடத்தில் மந்திரகிரி பட்டணம் வந்து சமைய பிற

வீதியத்திலே ஸ்நானம் பண்ணி சமைய நாராயண சுவாமியைச் சேவித்து உபகாரமாயிருந்து அந்த குளத்தங்கரையிலே போய் நிற்கையிலே பொழுது விடிந்து சூரிய உதயமாகிற போது குளத்துக்குள்ளேயிருந்து ஒரு பொற்கம்பம் புறப்பட்டளவிலே ராசா வேதாளத்தின் பேரிலே ஏறிக் கொண்டு அந்த பொற் கம்பத்தின் பேரிலேறினான். மத்தியானத்திலே கம்பம் சூரியனைக் கிட்டப் போகிறபோது பயப்படாமலிருந்து சூரிய நாராயணனைத் தோத்திரம் பண்ணினார். அது கண்டு சூரியனும் பிரிய சுவாலையாக இருக்கிற லட்சணங்களைப் பாராமல் நம்மிடம் வந்து கண்டாய். நீயாரென்று கேட்க அதுக்கு விக்கிரமாதித்தராசா சொல்லுவான். ஆயிரத்து நூறு வருஷத்துக்கு முன்னே உச்சினிமாகாளியம்மன் அனுப்பவும் நான் தேவரீர் காட்டிப் போய் பரமசிவன் பார்வதி மகாவிஷ்ணு பிரம்மதேவன் தேவேந்திரன் இவர்களைக் காண்பித்து சுவாமி கையில் ஆயிரம் வருஷம் வரம் வாங்கிக் கொடுத்து விக்கிரமன் என்கிற பேர் வேண்டாமென்று விக்கிரமாதித்தராசாவென்று பேர் கொடுத்து அனுப்புவித்தீர்களல்லவோ. அப்படியே போய் என்னுடைய மந்திரி பட்டியுடனே சொன்னேன். அதுக்கு அவனொரு உபாயம் பண்ணினான்.

ஆயிரம் வருஷம் சிம்மாசனத்தின் பேரிலிருந்து ராச்சியபாரம் பண்ணச் சொல்லிக் கட்டளையிட்டீர்களல்லவோ.

ஆறு மாதம் சிம்மாசனத்தின் பேரிலேயும் ஆறு மாதம் காட்டிலேயும் திரிய உபாயம் பட்டி சொன்னான். அந்தப் படிக்கு காடாறு மாதம் நாடாறு மாதமாயிருப்பேன். ஆகையினாலே இரண்டாயிரம் வருஷத்துக்கு இப்போ ஆயிரத்து ஐந்நூறு வருஷமாச்சுது. இன்னும் ஐந்நூறு வருஷம் இருக்க வேணும். என் பேர் விக்கிரமாதித்தன் என்று சூரிய நாராயண சுவாமியை நமஸ்கரித்தான்.

சூரிய பகவானும் சந்தோஷப்பட்டு வாராய் ராசாவே நீர் என்ன பூஷனாதிகளை நினைத்தாலும் அந்த பூஷணம் கையிலே வந்து இருக்கத்தக்கதாக ஒரு குளிகையுங்கொடுத்து தன்னுடைய காதிலிருக்கும் கவச குண்டலமுங் கொடுத்து அனுப்பிவித்தார். அவரை அனுப்பிவித்துக் கொண்டு சூரியனுடைய தேவியான சாயா தேவியை நமஸ்காரம் பண்ணி தோத்திரம் பண்ணினார். சாயாதேவி சந்தோஷப்பட்டு விக்கிரமாதித்தராசாவின் பேரிலே எத்தேசகாலமும் குங்குமவாசனையுடனே கூடியிருக்க வேணுமென்று ஒரு குளிகை கொடுத்து பூலோகத்துக்கு அனுப்பினாள்.

வெகுமானங்களைப் பெற்று அஸ்தமிக்கிற தருவாயிலே பொற்கம்பத்து குளத்துக்குள்ளே வந்து கம்பத்தின் மேலே ஏறி கரையிலே குதித்தான். அதன் பிறகு உச்சினிக்கு வருகிற வழியிலே ஒரு பிராமணனும் அவன் பெண்சாதி பிள்ளைகளும்

தரித்திரத்திலே மெத்தநொந்து ஒரு மரத்தடியிலே சாப்பாடுமில்லாமல் தவிக்கிற வேளையிலே விக்கிரமாதித்தராசா வந்து கண்டான். அவர்கள் தவிக்கிற பரிதாபத்தைக் கண்டு பிராமணா உனக்கு என்ன வேணுமென்று கேட்டார். அதுக்குப் பிராமணன் எங்கள் தரித்திரம் தீர வேணுமென்று கேட்டார்கள். அப்போ சூரிய பகவான் நினைத்ததெல்லாம் வருமென்று கொடுத்த குளிகையை பிராமணன் கையிலே கொடுத்து அவன் பெண் சாதிக்குப் பூஷணாதிகள் வருமென்கிற குளிகையைக் கொடுத்து அனுப்பி அதனுடைய பரிட்சியைங்காட்டிக் கொடுத்து உச்சினி மாகாளி பட்டணம் சேர்ந்தார். நீயும் அப்படி சகாயஞ்செய்ய வல்லவன் ஆனால் இந்த சிம்மாசனம் ஏறலாமென்று பதினைந்தாம் பதுமை சொல்ல போசராசா வெட்கிப் போனான்.

பதினைந்தாம் பதுமை முற்றும்

## பதினாறாம் பதுமை கதை

பின்னையுஞ் சிறிது நாளைக்குப் பிறகு போசராசன் சிம்மாசனம் ஏற விருவான். அப்போ பதினாறாம் பதுமை சொல்லுங்கதை

ஒகோய் போசராசனே கேளும். விக்கிரமாதித்தராசாவுக்குத் தேவேந்திரன் இந்த சிம்மாசனம்

கொடுத்தது. இந்த சிம்மாசனம் நீ ஏறலாகாது. அவர் தேவதா சொரூபமானவன். இந்த சிம்மாசனம் ஏற வேணுமென்று சொல்லி அதெப்படியென்றால் விக்கிரமாதித்த ராசா ராச்சியபாரம் பண்ணுகிற காலத்திலே சகலமான தேசமெங்கும் திரிந்து காஞ்சிபுரம் வந்து திருக்கம்பையாற்றிலே ஸ்நானம் பண்ணி ஏகாம்பரநாதரையும் சேவித்துக் கொண்டு காஞ்சீபுரத்திலே இருக்கிறபோது கெந்தருவரிஷியைக் கண்டு நமஸ்காரம் பண்ணினார்.

அப்போ ரிஷி சொல்லுவார். வாராய் ராசாவே நீ வந்த காரியம் என்ன என்று கேட்ட அளவிலே நான் உச்சினி என்கிற பட்டணத்திலே விக்கிரமாதித்தன் என்கிற ராசா. பூலோகத்திலே ஏதாகிலும் அபுரூபங்களுண்டோ என்று விசாரிக்க வந்தேன். நான் வந்த லக்கினம் நல்ல லக்கினமானபடியினாலே தேவரீருடைய தரிசனம் ஆச்சுது என்று பின்னையும் நமஸ்கரித்தான். இவ்விடத்தில் என்ன அபூருவங்களிருக்கிறதோ அடியேனுக்குச் சொல்ல வேணுமென்றான்.

அதுக்கு இவ்விடத்தில் அபுரூபமொன்றுமில்லை. உம்முடைய பட்டமே போமென்று கெந்தருவரிஷி சொல்ல அதுக்கு விக்கிரமாதித்தராசா சிரித்து சுவாமி நான் தமிழ்நாட்டுத் தெய்வ பலத்தினாலே பயமில்லையென்று தேசமெல்லாந்திரியுறேன் என்று சொல்ல அது ரிஷி கேட்டு இப்படி ராச்சியத்தை விட்டு

தேசத்தின் பேரில் திரிவார்களா.

முன்னே தமிழ்நாட்டிலே சங்கரசேகரன் என்றொரு ராசா ராச்சியபாரம்பண்ணுகிற காலத்திலே ராச்சியத்திலேயிருக்கிற ராசாக்களெல்லாரையும் பகையாக்கி இந்த ராசாவை ராச்சியத்தை விட்டு ஒட்டி விட்டார்கள். அப்போ தன் பெண் சாதியும் தானுமாகப் புறப்பட்டு காட்டிலே வந்து ஒரு ஆலாவிருட்சத்தின் கீழேயிருந்தார்கள். அங்கே ஒரு ராட்சதி வந்து நீங்கள் யார் ராசவம்சமாயிருக்கிறது என்று கேட்க நான் தமிழ் நாட்டு ராசா. பகைத்த பேர்கள் ராச்சியத்தைக் கட்டிக் கொண்டு என்னை ஒட்டி விட்டார்கள் என்று சொன்னார். அப்போது கொங்கண தேசத்து ராசா பட்டத்துக்கு ராசாயில்லையென்று அந்தப் பட்டணத்துக்கு இவர்களை அழைத்துப் போய் வைக்க வேணுமென்று ராட்சதி ஆலோசனை பண்ணிக் கொண்டுயிருக்கிறபோது இவர்களை பட்டணமே அழைத்துக் கொண்டு போகிறபோது அந்தப் பட்டணத்து மந்திரி பிரதாணிகளெல்லாருங் கூடி பட்டத்து யானையைச் சிங்காரித்து காட்டிலே விட்டார்கள். அப்போ இந்த ராட்சதி போய் யானையைப் பிடித்து வந்து இந்த ராசாவை யானையின் பேரிலே ஏற வைத்து பட்டணத்திலே கொண்டு போய் சிம்மாசனத்தின் பேரிலே வைத்து யானை நமஸ்கரித்தது. அப்போ மந்திரி பிரதானி பெரியோர்களெல்லோருங் கூடி நமஸ்காரம் பண்ணி

சங்கர சேகர ராசா என்கிற பேரும் வைத்து பட்டங்கட்டினார்கள்.

அவன் ராச்சியபாரம் பண்ணுகிற காலத்திலே கெந்தருவரெல்லாருங் கூடி நம்முடைய ராச்சியத்திலே மனுஷர் வந்து ராச்சியபாரம் பண்ணுவதேதென்று இவனை ஒட்டி விட வேணுமென்று கெந்தருவர் எல்லாம் கூடிக் கொண்டு வந்து கோட்டையின் பேரில் முற்றுகை போட்டுக் கொண்டுயிருக்கிறார்கள். அந்த கொங்கண தேசத்துக்குப் போய் அந்த ராச்சியம் அந்த ராசாவுக்குத் தானே அனுகூலம் பண்ணி வைத்து வந்தாயானால் உன்னைப் போன்ற ராசா இல்லை என்று கெந்தருவரிஷி சொன்னார்.

அந்நேரமே வேதாளத்தின் பேரிலேறிக் கொண்டு விக்கிரமாதித்த ராசா கொங்கண தேசத்துக்குப் போய்க் கெந்தருவரைக் கண்டார். அப்போ விக்கிரமாதித்தராசாவைப் பார்த்து நீர் உச்சினி மாகாளி பட்டணத்து ராசாவல்லவோ. இங்கே வந்த காரியம் என்னவென்று கேட்க விக்கிரமாதித்தராசா சொன்னார். சங்கர சேகர ராசா தமிழ்நாட்டிலே இருப்பான். அவ்விடத்து ராசாக்கள் பகைத்து ஓடி விட்டார்கள். அதன் பின்பு கொங்கண தேசத்து ராசா நொந்து போய் பட்டத்து யானையைச் சிங்காரித்து கண்ணைக் கட்டி விட்டார்கள். அந்த யானை வந்து இவனை மத்தகத்தில் வைத்துக் கொண்டு வந்து ராசா சிம்மாசனத்தின் பேரில் வைத்தது. அன்று முதல்

ராச்சியபாரம் பண்ணிக் கொண்டுயிருக்கிறார். அவர் பேரிடத்தில் நீங்கள் சண்டை போட வேண்டாம் என்று விக்கிரமாதித்தராசா சொன்னான்.

நீ முப்பத்திரண்டு லட்சணமுள்ளவர். உம்மைக் கண்டமாத்திரத்திலே எங்களுக்கு சந்தோஷமாகி விட்டது. சங்கர சேகரனுக்கு எப்போதும் போலே ராச்சியத்தை விடுவித்து கோட்டை முற்றுகையையும் வாங்கிவைத்தான். கெந்தருவரை அனுப்பி வைத்து விட்டு ராசா சங்கர சேகரனிடத்தில் வந்தார். அப்போ சங்கர சேகரன் எதிர் கொண்டு வந்து நமஸ்கரித்து உம்முடைய தருமத்தினாலே முற்றுகையும் விலக்கி வைத்தீர் என்றான். இந்த ஆதினம் நிலை நிறுத்தினீர்களென்று சாஷ்டாங்கமாக வணங்கி நின்றான். அப்போ சந்தோஷப்பட்டு விக்கிரமாதித்தராசாவுக்கு சங்கர சேகர ராசா சந்திரகாந்தி எள்ற ஒரு சிம்மாசனம் கொடுத்தார். கொடுத்து இந்த சிம்மாசனம் இஷ்டகாமியமெல்லாம் கொடுக்குமென்று அதன் பரிட்சையும் காட்டிக் கொடுத்து விடை கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டு உச்சினிக்கு வருகிற வழியிலே ஒரு பிராமணன் மகத்தான துக்கத்தை அடைந்திருக்கிறதைக் கண்டான். ராசா பார்த்து கிருபை வைத்து ஒய் பிராமணா நீர் எங்கே வந்தீரென்று கேட்டான். அதுக்குப் பிராமணன் வாரும் ராசாவே என்னுடைய சென்மமெல்லாம் தரித்திரமே

அனுபவித்தேன். விருத்தாப்பியத்தில் துக்கத்தை அனுபவித்தேன் என்று சொன்னான். அப்போது ராசாவுக்கு தயவு வந்து சந்திரகாந்தி என்கிற சிம்மாசனத்தைக் கொடுத்தான். இஷ்டகாரியங்களைக் கொடுக்கிறது என்று பரிட்சையும் காண்பித்துக் கொடுத்தான். பின்பு பிராமணனுக்கு நமஸ்காரம் பண்ணி உச்சினியே வந்து சேர்ந்தார். நீயும் தயவு தாட்சண்ணியம் சகாயம் பண்ண வல்லவனாகி இந்த சிம்மாசனம் ஏறலாம்" என்று பதினாறாம் பதுமை சொல்ல போசராசா வெட்கிப் போனான்.

பதினாறாம் பதுமை கதை முற்றும்

## பதினேழாம் பதுமை கதை

பின்னர் சில நாட்களுக்குப் பிறகு போசராசா சிம்மாசனம் ஏற வேண்டும் என்று வந்தான். அப்போ பதினேழாம் பதுமை கதை சொன்னதாவது

ஓகோய் போசராசனே கேளும் விக்கிரமாதித்தராசாவினுடைய ராச்சியமெல்லாம் கரடி, புலி, பன்றி பயிர்களை அழித்து புலி கரடி மான் மரை முதலான மிருகங்களையும் மனுஷரையும் முதலானவர்களை ஒரு பன்றி வந்து கொல்லுகிறது என்று வேடன் முறையிட்டான். அப்போது விக்கிரமாதித்த ராசா கொலுவிலே இருந்தான். அதை ராசா கேட்டு பராக்கிரமனென்கிற குதிரையைக் கொண்டு அது

சூரனாகப் புறப்பட்டு அந்தப் பன்றி தூரத்திலே கண்டு குதிரையை விட்டு துரத்தினபோது பன்றியும் மந்திர பருவதத்துக்கு மேற்காகப் புறப்பட்டு ஓடியது. குதிரை சோர்ந்து போய் ஒரு கோவிலிலே புகுந்தது.

அந்த கோவில் வாசலிலே குதிரையைக் கட்டி வைத்து ராசாவும் பின் தொடர்ந்து போகையிலே பத்து யோசனை தூரம் பாதாளத்துக்குள்ளே பன்றி போனது. ராசாவும் பின் தொடர்ந்து போகும்போது சிந்து நதி என்றொரு பட்டணம். அதன் நடுவே கயிலாசம் போன்று ஒரு அரண்மனை. அந்த அரண்மனை வாசலிலே போய் ஒரு அசுரனாக வேஷங்கொண்டு அரண்மனைக்குள்ளே போனான். மகாபலி என்கிற ராசாவிடம் விக்கிரமாதித்த ராசாவை அழைத்து வந்து விடவே வந்தேனென்று பன்றியாகிற அசுரன் சொன்னான்.

மகாபலி பதினெட்டு வகை மேள வாத்தியத்துடனே வெளியே புறப்பட்டு வந்து விக்கிரமாதித்த ராசாவைக் கண்டு அழைத்துக் கொண்டு வருகிற தருவாயிலே முப்பத்திரண்டு கட்டு வாசலிலே ஒவ்வொரு வாசலுக்கு ஆயிரம் ஆயிரம் பன்றிகள் இருக்க அதின் நடுவே விக்கிரமாதித்த ராசாவை அழைத்துக் கொண்டு போய் மகாபலி என்கிற ராசா தம்முடன் வைத்துக்கொண்டு இருந்தான். விக்கிரமாதித்தராசா, மகாபலி என்கிற ராசாவைப் பார்த்து உமக்குச் சரியான பேர்

யாருமில்லை. நீர் மகா பலவானாகயிருக்கிறீரென்று தோத்திரம் பண்ணினார். அப்போ மகாபலி என்கிற ராசா விக்கிரமாதித்த ராசாவைப் பார்த்து நீரிருக்கிற பூலோகத்திலே எங்கும் திங்கள் மும்மாரி மழை பொழிந்து பல வகை தானியங்களும் விளைந்து பூலோகமெங்கும் சகல சீவசெந்து உன்னிதமாக இருக்கிறதென்று பசுக்கள் மூன்று வேளையும் தவறாமல் பால் கொடுக்கிறது பூலோகத்திலே நீதி நெறிமையுண்டாக்கி ராச்சியம் மேலோங்கி இருக்கிறது என்றும் தரும சிந்தனையுடனே கூடியிருக்கிற சேதியைக் கேட்டு நாங்களும் உம்மைப் பார்க்க வேணுமென்று ஒரு அசுரனைப் பன்றியாகப் போகச் சொன்னோம். அதன் மூலமாக உம்மைக் கண்டோம். கண்ட போதுதான் நீர் முப்பத்திரண்டு லட்சணமுடைய தாயிருக்கிறபடியினாலே நமக்கு மிகுந்த சந்தோஷமாச்சு. ஒரு அமுதக் கலசத்தையும் கொடுத்து அதனுடைய பலன் விருத்தனாகயிருக்கிற பேருக்கும் ரோகஸ்தராகயிருக்கிற பேருக்கும் இதை அருந்தினால் தெய்வ சுரூபமாயிருப்பார்கள் என்று பரிட்சையும் காட்டி அமுத கலசத்தையும் கொடுத்து வெகுமானமும் பண்ணி அனுப்பினார்.

உள்ளேயிருந்து வெளியே வருகிறபோது வாசலிலே கட்டியிருந்த பன்றியெல்லாம் ராட்சதனாகயிருந்தார்கள். அதைப் பார்த்து விக்கிரமாதித்தராசா "முன்னே வருகிறபோது பன்றியாக இருந்து இப்போ ராட்சதராக இருக்கிறது எப்படி" என்று ராசா

கேட்க அதுக்குரியவர்கள், "ராட்சதர்கள் இவர்கள் எந்தெந்த வடிவம் கொள்ள வேண்டுமானாலும் அந்தந்த வடிவங்கொள்ளுவார்கள். இந்த வரம் நமக்கு மகாவிஷ்ணு கொடுத்த வரம். நீர் கீர்த்திபரனாக இருக்கிறது கேட்டு உம்மைப் பார்க்க வேணுமென்று இந்த ராட்சதனை ஒருவனைப் பன்றியாகப் போய் அழைத்து வரச் சொன்னோம். அப்படியே நீரும் வந்தீர் உம்மையும் பார்த்தால் போல் ஆச்சு. நீர் பூலோகத்துக்குப் போம்" என்று சொல்ல ஒரு ராட்சதனையும் அழைத்துக் கொண்டு போய் விட்டு வரச் சொல்லி அனுப்ப அப்படியே அசுரனை அழைத்துக் கொண்டு வந்து கோவிலில் வாசலிலே குதிரை கட்டியிருந்த இடத்தில் கொண்டு வந்து விட்டுப் போனான்.

ராசா குதிரையின் மேல் ஏறிக் கொண்டு உச்சினிக்கு வருகிற வழியிலே ஒரு பிராமணன் கை கால் குறைந்து ரோகஸ்தனாய் மழையிலே நனைந்து நடுக்கமெடுத்து மெத்த அவஸ்தைப்பட்டு வருகிறபோது விக்கிரமாதித்தராசா கண்டு உனக்கென்ன வேண்டும் என்று கேட்டார். அதுக்குப் பிராமணன் நான் ரோகஸ்தன். இந்த ரோகம் நிவாரணையாக வேணுமென்று சொன்னான். அதுக்கு ராசா தன் கையிலே இருக்கிற அமுத கலசத்தை அந்தப் பிராமணன் கையிலே கொடுத்து அந்தக் கலசம் வாங்கி உள்ளுக்குக் கொண்டவுடனே திவ்வி

சொரூபமானான். அது விக்கிரமாதித்த ராசா பார்த்து சந்தோஷப்பட்டு அந்த பிராமணனுக்கு வேண்டிய தனமும் கொடுத்து அனுப்பி வைத்து விட்டு உச்சினி வந்து சேர்ந்தார். நீயும் அப்படி தியாகமும் சகாயமும் பண்ண வல்லமையுண்டானால் இந்த சிம்மாசனம் ஏறலாம்" என்று பதினேழாம் பதுமை சொல்ல போச ராசான் வெட்கிப் போனான்.

பதினேழாம் பதுமை முற்றும்

## பதினெட்டாம் பதுமை கதை

பதினெட்டாம் பதுமை கதை பின்னையும் சிறிது நாளைக்கும் பிறகு போசராசா சிம்மாசனம் ஏற வருவான். அப்போ பதினெட்டாம் பதுமை சொல்லும் கதை

"ஒகோய் போசராசனே கேளும் விக்கிரமாதித்த ராசா காடாறு மாதம் புறப்பட்டு அபுரூபமான தேசங்களெல்லாம் பார்த்து கொடிமுடி என்கிற பட்டணத்துக்கு வந்து இருக்கிற வேளையிலே நாலு பேர் தபசிகள் வந்தார்கள்.

அவர்களை விக்கிரமாதித்த ராசா கண்டு நீங்கள் எந்த தேசத்திலிருந்து வந்தீர்களென்று கேட்டளவிலே இமபருவதத்திலே திருஞால ஆரணியென்று சித்தன் இருக்கிறான். அவரிடம் போக வேணுமென்று வந்தோம். அவ்விடத்துக்கு ஒருத்தரும் போகக் கூடாது. போகிற வழியிலே ஒரு கோவிலிருக்கும். அந்தக் கோவிலுக்கு வடக்கே ஒரு மலை

உண்டு. அந்த மலையிலே ஒரு துவாரமுண்டு. அந்த துவார வழியிலே போக வேணும். அந்த வழியே போனால் மகா நாகங்களிருக்கும். அதிலே போகக்கூடாதென்றார்கள். ஆகையால் நாங்கள் போகப் பயந்து திரும்பி வந்தோம் என்றார்கள்.

அதைக் கேட்டு ராசா இமபருவதத்துக்குப் போனார். அவ்விடத்துக்குப் போய் துவார வழியே போகிறபோது அதிலிருக்கிற நாகங்களை தடை சுட்டிக் கொண்ட படியினாலே அந்த நாகங்கள் தடைக்கு உள்பட்டு சும்மா கிடந்தது. அது தாண்டி அப்பாலே போகிறபோது திருஞால ஞானியைக் கண்டார்கள். அவர் பரமேசுவரன் வடிவாக எழுந்தருளுயிருந்தார். அவரை நமஸ்கரித்துத் தோத்திரம் பண்ணினார்.

விக்கிரமாதித்தனுடைய பக்தியை ஞானத்தினாலே அறிந்து நாம் இருக்கிற விடம் ஒருவரும் அறிய மாட்டார்கள். இதுவரைக்கும் நம்முடைய தபசு அறிந்த பேருமில்லை. இவன் தேவனே என்று கண்ணை முழித்துப் பார்த்தார். விக்கிரமாதித்தனுக்கு முப்பத்திரண்டு லட்சணமும் ரூபசவுந்தரியமும் பார்த்து நீயார் பிள்ளையென்று கேட்க பூலோகமெல்லாம் ஆளச் சொல்லி சுவாமியார் கட்டளையிட்டு இரண்டாயிரம் வருஷம் பூலோகமெல்லாம் ஆண்டு வருகிறேன். என் பேர் விக்கிரமாதித்தன் என்று அவரை நமஸ்காரம்

பண்ணினான். தேவரீர் பாத தரிசனை கண்டு போவோம் என்று வந்தேன் என்றான். அப்போ திருஞால ஞானியாரும் சந்தோஷப்பட்டு இவன் பூலோகம் எல்லாம் ரட்சிக்கப்பட்ட ராசா என்று ஒரு மாத்திரை கோலும் ஒரு குளிகையும் கொடுத்து அதுக்குப் பரிட்சையும் சொல்லுகிறார். மாத்திரை கோலை வலது கையிலே பிடித்தால் ஆகாசம் கொண்டுபோம். இடது கையிலே பிடித்தால் பூலோகம் கொண்டு வரும். இந்த குளிகை மனதில் நினைத்ததெல்லாம் கொடுக்கும் என்று பரிட்சை காண்பித்து அனுப்பினார்.

அதை வாங்கிக் கொண்டு வருகிற வழியிலே ஒரு ராச குமாரன் தன்னுடைய ராச்சியமெல்லாம் தனமெல்லாம் பரி கொடுத்து ஒரு அவாந்திர காட்டிலே வந்திருந்து இனி மேல் நமக்கு ராச்சியம் ஏது பூமி ஏது. திரவியம் இல்லாது நாலு ராசாக்கள் முன்னே ஒரு ராசகுமாரனென்று சொல்லிக் கொண்டு இருக்கிறதென்னவென்று எல்லாத்தையும் தியானித்து இனி பிராணனை விடுகிறதே சரியென்று அக்கினியை வளர்த்தி அக்கினியிலே குதிக்க வேணுமென்று அக்கினி குண்டத்தைச் சுற்றி வருகிற வேளையிலே விக்கிரமாதித்தராசா ஓடி வந்து கையைப் பிடித்துக் கொண்டார். நீ என்னத்துக்கு அக்கினியிலே விழுகிறாயென்று கேட்டளவிலே இந்த ராசகுமாரன் தன்னுடைய சேதியெல்லாம் சொன்னான்.

ராச வம்சத்திலே பிறந்து இப்படி செய்வார்களோ என்று திருஞால ஞானியார் கொடுத்த மாத்திரை கோலும் குளிகையும் கொடுத்து அதன் பரிட்சையும் சொல்லி சோதனையும் காட்டிக் கொடுத்து இனி நீ போய் உன்னுடைய ராச்சிய பாரம் பண்ணிக் கொண்டு இருக்கச் சொல்லி அனுப்பி வைத்துப் போட்டு தானும் உச்சினி வந்து சேர்ந்தார். நீயும் அப்படி சகாயம் பண்ணவல்லவனானால் சிம்மாசனம் ஏறலாமென்று பதினெட்டாம் பதுமை சொல்ல போசராசன் வெட்கிப் போனான்.

பதினெட்டாம் பதுமை முற்றும்

## பத்தொன்பதாம் பதுமை கதை

பின்னையுஞ் சிறிது நாளைக்குப் பிறகு போசராசன் சிம்மாசனம் ஏற வருவான். அப்போ பத்தொன்பதாம் பதுமை சொல்லும் கதை

ஓகோ போசராசனே கேளும். விக்கிரமாதித்த ராசா ராச்சிய பாரம் பண்ணுகிற நாளையிலே புத்திர் சேனனென்கிற மந்திரி. அவனுக்கு கோகிலன் என்கிற பிள்ளை உண்டு. அவன் எழுத்து வாசனை இல்லாதபடியினாலே அத்வானப் பேய் கொண்டாப் போல திரிவான். அவனைப் பிதாவானவன் பார்த்து சொன்னது நல்ல வம்சத்திலே பிறந்து பருவத்திலே வித்தை கற்காமல் பேயனைப் போலே பார்த்த பேரெல்லாம் சிரிக்கப் பிறந்தாயென்று சொன்னான். பிதாவானவன் இப்படி

சொல்லுகிறாயென்று கவலைப்பட்டு தேசாந்திரம் புறப்பட்டு போனான்.

கோதாபுரி கரையருகே சென்றான். அங்கே ஒரு கோவில். அங்கு ஆறு மாதமிருந்து அந்த ஆத்துக்கு படிகத்தாலே படிக்கட்டுயிருக்கும். அந்த ஆறு எத்தேச காலமும் வற்றாமலிருக்கும். அந்த ஆத்துக்கு நடுவே நீர் கொதித்து எழுந்திருக்கும். புடவையிலே அரிசி கட்டி ஆத்திலே போட்டால் சாதகமாக சமைத்து இருக்கும். அவ்விடத்தில் பறக்கிற பட்சிகளெல்லாம் எரிந்து போய் விடும். அந்த கோவிலிலேயிருந்து ஏழு சப்த கன்னிகைகள் புறப்பட்டு வந்து அதிலே ஒருத்தியாடவும் ஒருத்தி தாளம் போடவும் பஞ்ச வாத்தியங்கள் முழங்க கூத்தாடினார்கள்.

அங்கே கோகிலவன் போனான். அவனைக் கண்டு நீ பாதாள லோகத்துக்கு வருகிறாயோ என்று சப்த கன்னியர்கள் கேட்டார்கள். நான் இந்த சலத்திலே வர பயமாயிருக்கிறதென்றான். அப்போ நீ இங்கே வந்தது ஏனேன்று கேட்டார்கள். நான் வித்தை படியாமலிருந்த படியினாலே என் தகப்பன் கோபித்துக் கொண்டான். ஆனபடியினாலே நான் புறப்பட்டு பரதேசமாக வந்தேனென்று கன்னியர்களுடனே சொன்னான். அப்போ ஏழு கன்னியர்களும் இவனுக்கு மகத்தாகிய வித்தைகளெல்லாம் படிப்பித்து பதினெட்டு பாஷையும்

கற்பித்துக் கொடுத்து விட்டு போனார்கள். அந்த வித்தைகளெல்லாம் கற்றுக் கொண்டு கோகிலவனும் உச்சினியே வந்தான்.

வந்தவுடனே தாய் தகப்பன் காலிலே விழுந்து நமஸ்காரம் பண்ணி தான் கற்று வந்த வித்தைகளெல்லாம் சொல்ல தகப்பன் சந்தோஷப்பட்டு குமாரனை அழைத்துக் கொண்டு போய் விக்கிரமாதித்த ராசாவை நமஸ்கரித்தான். கோகிலவனைக் கண்டு ராசா சந்தோஷப்பட்டு நீ என்ன வித்தைக் கற்று வந்தாயென்று கேட்க கோகிலவன் சொன்னது கோதாவேரிக்குப் போனதும் அங்கே இருக்கிற புதுமைகள் சொல்லக் கேட்டு அந்நேரமே கோகிலவனும் அரசனும் புறப்பட்டு கோதாபுரி கரையிலே போய் நின்று பார்த்தார். அன்று ராத்திரி ஏழு சப்த கன்னியர்களும் புறப்பட்டு கோவிலுக்கு வந்து சுவாமியை சேவித்து ஆடல் பாடலுடனே போகிறபோது விக்கிரமாதித்த ராசா கூடவே போனார்.

அப்போ கன்னியர்கள் எல்லாம் கூடி ராசாவைப் பார்த்து ஏழு பேரும் ஏழு ரத்தினம் கொடுத்தார்கள். அந்த ஏழு ரத்தினமும் வாங்கிக் கொண்டு உச்சினிக்கு வருகிறபோது வழியிலே ஒரு பிராமணன் தரித்திரவான். பெண் சாதியும் பிள்ளைகளும் வந்து ஒரு குளத்திலே ஸ்நானம் பண்ணி பூசை முடித்துக் கொண்டு ஆசனமில்லாமல் தவித்துக் கொண்டு

நிற்கையிலே விக்கிரமாதித்த ராசாவைக் கண்டார்கள். அப்போ ராசா பிராமணனைப் பார்த்து நீங்கள் எந்த தேசம் எங்கே வந்தீர்கள். ஏன் விசாரப்பட்டுக் கொண்டு இருக்கிறீர்கள் என்று கேட்க அப்போ பிராமணன் சொல்லுகிறான். நாங்கள் வெகு தரித்திரத்தில் அடிபட்டு கட்டக் சீலையுமில்லை. தின்கிறத்துக்குச் சோறுமில்லை. இனிமேல் எப்படி பிழைப்போம் எள்று விசாரப்பட்டுக் கொண்டு உங்களிடம் போவோம் என்று வந்தோம். நல்ல வேளையானபடியினாலே உம்மைக் கண்டோம். இனி எங்கள் தரித்திரமெல்லாம் நிவாரணையாச்சுது. உம்மைக் கண்ட போதே தேடிய பொருள் கையிலே கிடைத்தது போலாச்சு என்று பிராமணன் சொல்ல விக்கிரமாதித்த ராசா சந்தோஷப்பட்டு சப்த கன்னியர்கள் கொடுத்த ஏழு ரத்தினமும் கொடுத்து சிலவுக்கு லட்சம் பொன் கையிலே கொடுத்து நீங்கள் சுகமாய் உங்கள் ஊரே போய் சேருங்களென்று சொல்லிவிட்டு விக்கிரமாதித்தராசாவும் உச்சினியே வந்து சேர்ந்தார். நீயும் அப்படி தான தருமம் பர உபகாரம் பண்ண வல்லமையுண்டானால் இந்த சிம்மாசனம் மேல் ஏறலாம்" என்று பத்தொன்பதாம் பதுமை சொல்ல போசராசன் வெட்கிப் போனான்.

பத்தொன்பதாம் பதுமை கதை முற்றும்

## இருபதாம் பதுமை கதை

பின்னையுஞ் சிறிது நாளைக்குப் பிறகு போசராசன்

சிம்மாசனம் ஏற வருவான். அப்போ இருபதாம் பதுமை சொல்லுங்கதை

"ஒகோய் போசராசனே கேளும். விக்கிரமாதித்த ராசா காடாறு மாதம் போய் ஆரண்ணியமான காட்டிலே அலைந்து தண்ணீர் தாகம் எடுத்து விடாய்த்து எங்கும் ஒடிப் பார்த்த அளவிலே அங்கே ஒரு குளமும் கோவில் கோபுரமும் ரத்தினத்தாலே சுற்றி மதிலும் கட்டியிருக்கும். அந்த கோவிலிலே போய் குளத்திலே தண்ணீர் குடித்து தாகம் தீர்ந்து இளைப்பாறி இருக்கிறபோது ஒரு பிராமணன் வேத சாஸ்திரங்களெல்லாம் கற்று தேசமெல்லாம் திரிந்து அங்கே வந்தார். அவரைக் கண்டு விக்கிரமாதித்த ராசா நமஸ்கரித்து நீர் எந்த தேசத்திலிருந்து வந்தீரென்று கேட்டார். அப்போ நீர் முப்பத்திரண்டு லட்சணமுள்ளவராயிருக்கிறீர். நீர் யாரென்று கேட்டவுடன், நான் உச்சினி மாகாளி பட்டணத்து விக்கிரமாதித்த ராசா. பூலோகத்திலே ஏதாகிலும் அபுரூபங்களிருக்கிறத்தைப் பார்க்க வேணுமென்று வந்தேன். உம்மைக் கண்டவுடனே எனக்கு வெகு சந்தோஷமாச்சுதென்று ராசா சொல்ல, அதுக்கு பிராமணன் சொல்லுவான்.

நான் காஞ்சீபுரத்துக்குப் போய் இஷ்டகாமியங்களெல்லாம் உண்டாக வேணுமென்று ஏகாம்பர நாதரையும் காமாட்சியம்மமையும் சேவித்துப் பன்னிரண்டு வருஷம் அன்னம்

ஆகாரமில்லாமல் தலைகீழாத் தபசு பண்ணினேன். எனக்கு தேவி பிரசன்னமாகாதபடியினாலே இப்படி தேசத்தின் பேரிலே திரிகிறேன் என்றான். அந்நேரமே இரண்டு பேரும் புறப்பட்டு காஞ்சிபுரத்துக்கு வந்து , ஏகாம்பர நாதரையும் காமாட்சியம்மனையும் சேவித்துப் பிராமணனை வெளியிலே நிறுத்தி விட்டு விக்கிரமாதித்த ராசா நிலவரைக்குள்ளே புகுந்து போய் மூன்று நாள் திருக்கம்மையாற்றிலே தபசு பண்ணினான். சுவாமியும் அம்மையும் பிரசன்னமாகாதபடியினாலே ராசா கழுத்தை அறுத்துக் கொண்டு கீழே விழுகிற சமயத்திலே அம்மன் ஓடி வந்து கையைப் பிடித்துக் கொண்டு, உனக்கு என்ன வரம் வேணுமென்று கேட்க விக்கிரமாதித்தராசா, உம்மை நோக்கி இந்தப் பிராமணன் பன்னிரண்டு வருஷம் அன்னம் ஆகாரம் இல்லாமல் தலைகீழாக தபசு பண்ணினான். அம்மன் வரம் கொடுக்கவில்லை என்று சொன்னார். இப்போ அவர் கேட்ட வரம் கொடுக்க வேணுமென்று சொன்னார்.

அப்படியே பிராமணனுக்கு கேட்ட வரமும் கொடுத்து விக்கிரமாதித்த ராசாவினுடைய பொக்கிஷத்திலே போட்ட தனமெல்லாம் வளர்ந்து இருக்க வேணுமென்று அம்மை பாலத்திலே இருக்கிற திருக்கம்பையாத்தின் மண்ணிலே கொஞ்சம் மணலும் கொடுத்து அனுப்பினாள். அப்படியே பிராமனுக்குச் சகலமான இஷ்டகாமிய பாக்கியமெல்லாம்

வந்திருந்தது. பிராமணனும் சந்தோஷப்பட்டி விக்கிரமாதித்த ராசாவை உச்சினிக்கு அனுப்பி வைத்தார். அப்படியே வந்து தன்னுடைய தனம் இருக்கிற பொக்கிஷத்திலே மணலைப் போட்டார். அந்நேரமே ஐம்பது கேரடி தனம் எடுத்து கொண்டு வந்து பிராமணனுக்கும் இளைத்தவன் தவித்தவன் கோவில் குளம் தேசங்களிலே என்னென்ன தருமங்களுண்டோ அந்த தருமங்களெல்லாம் பண்ணச் சொல்லிப் பட்டியை அழைத்து கட்டளையிட்டுப் போனார். அந்த மணலைப் போட்ட படியினாலே பின்னையும் திரவியம் வளர்ந்து கொண்டு இருந்தது. நீயும் அப்படி சகாயம் பண்ண வல்லமை உண்டாகில் இந்த சிம்மாசனம் மேல் ஏறலாம்" என்று இருபதாம் பதுமை சொல்ல போசராசன் வெட்கிப் போனான்.

இருபதாம் பதுமை முற்றும்

## இருபத்தோராம் பதுமை கதை

பின்னையுஞ் சிறிது நாளைக்குப் பிறகு போசராசா சிம்மாசனம் ஏற வருவான். அப்போ இருபத்தோராம் பதுமை சொல்லும் கதை

ஒகோய் கேளும் போசராசனே. விக்கிரமாதித்த ராசா காடாறு மாதமும் திரிந்து உச்சினிக்கு வருகிற போது உச்சினி பட்டணத்தைப் பார்த்தால் அமராவதி பட்டணம் போலே இருந்தது. அதைக் கண்டு பட்டணத்துக்கு வெளியிலே ஒரு

உப்பரிகையிருக்கிறதல்லவோ அதன் பேரில் ஏரிப்பார்த்து சந்தோஷப்பட்டு அதின் பிறகு பட்டணத்திலே வந்து பட்டி முதலான ராசாக்களைப் பார்த்துக் கொண்டு அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு அந்தப்புரமே போனார். அந்த ராத்திரி வைடூரிய மண்டபத்திலே தன்னுடைய தேவியும் தானும் தூங்குகிறபோது ராசா ஒரு சொப்பனம் கண்டார்.

மறுநாள் காலமே எழுந்திருந்து சுத்தி பண்ணிக் கொண்டு சிம்மாசனத்தின் பேரிலே வந்துயிருந்துக் கொண்டு வித்துவாங்கிஷரையும் யோகீசுவரரையும் பெரியோர்களையும் புரோகிதரையும் அழைப்பித்து ராத்திரி ஒரு சொப்பனம் கண்டேன். அது எப்படி என்றால் ஒரு கிடாவின் பேரிலே பேரியோர்களேறிக் கொண்டு சிவந்த தளத்தையும் பூசிக் கொண்டு தெற்கு முகமாக ராகு கேதுக்கள் போகக் கண்டேன். இந்த சொப்பனப் பலன் சொல்லுங்கோளென்று கேட்டார். நீர் பூலோக நாயகனாகயிருக்கிறர்வகளுக்கு தெரியாதா. எங்களுக்குத் தெரியுமோவென்று சொல்ல நீங்கள் உங்கள் சாஸ்திரத்தின் படியே சொல்லுங்கோளென்று ராசாவும் கேட்க அப்போ பெரியோர்களெல்லாம் கூடி சொப்பனம் கண்டதன் பலன் பற்றி சொன்னார்கள்.

முதல் சாமத்துக் கண்ட சொப்பனத்துக்குப் பலன் நாலு மாதத்திலே தெரியும். இரண்டாம் சாமத்தில் கண்ட சொப்பனம்

மூன்று மாதத்திலே தெரியும். மூன்றாம் சாமத்திலே கண்ட சொப்பனம் எட்டு நாளையிலே தெரியும். இந்த சொப்பனம் கண்டது ராகு கேது தோஷம் இதுக்கு சாந்தி பண்ண வேணுமென்று சொன்னார்கள். அப்படியே ராச்சியத்திலே இருக்கிற பிராமணரை எல்லாம் அழைத்து சாந்தி பண்ணுவித்து பிராமணருக்கு (தான தருமம்) தட்சணை தாம்பூலம் கொடுக்க வேண்டுமென்று முப்பத்திரண்டு களஞ்சியமும் திறந்து விட்டு பிராமணரே உங்களுக்கு எந்த மட்டும் திரவியம் வேணுமோ அந்த மட்டும் திரவியம் எடுத்துக் கொண்டு போங்கோளென்று சூரையிட்டார். அந்தப் பிராமணரெல்லாரும் அந்த களஞ்சியத்தை எட்டு நாள் கொள்ளையிட்டார்கள். அவர்கள் அப்படி கொண்டு போன திரவியம் கணக்கு பார்க்க நூற்றிருபது கோடி திரவியமாச்சுது. நீயும் அப்படி மனம் துணிந்து பொக்கிஷத்தைத் திறந்து விட்டு உங்களுக்குச் தேவையானபடி என்று பிராமணரை எடுத்துப்போகச் சொல்லி சிலவழிக்க வல்லமை உண்டானால் இந்த சிம்மாசனம் ஏறலாம்'' என்று இருபத்தோராம் பதுமை சொல்ல போசராசன் வெட்கிப் போனான்.

இருபத்தோராம் பதுமை முற்றும்

## இருபத்திரண்டாம் பதுமை கதை

பின்னையும் சிறிது நாளைக்குப் பிறகு போசராசன் சிம்மாசனம் ஏற வருவான். அப்போ இருபத்திரண்டாம் பதுமை

சொல்லும் கதை

"ஓகோய் போசராசனே கேளும் விக்கிரமாதித்த ராசா ராச்சியபாரம் பண்ணுகிற நாளையிலே புரந்தளிர் என்கிற பட்டணத்திலே நீதி பரன் என்றொரு பிராமணன். அவனுக்கு நான்கு பிள்ளைகள் உண்டு. மூத்தவன் பெயர் குணரத்தினம் என்கிறவன். இளையவன் பெயர் சந்திரபிரலாபன். அவனுக்கு இளையவன் பெயர் திரிபுராந்தகன். அவனுக்கு இளையவர் பெயர் சகல கலைப்பிறவீணன். இப்படி நான்கு பிள்ளைகளுண்டு. நீதிபரன் என்கிற பிராமணன் கோமு மிதியிலே தேடியுண்டுக் கொண்டு திரிவான். இப்படி இருக்கிற நாளையிலே ஒரு நாள் தகப்பனார் பிள்ளையை அழைத்து இப்படி திரிகிறது யோக்கியம் அல்லவென்று சொன்னார். அதுகேட்டு புறப்பட்டு தேசாந்திரமாகப் போய் விசனகிரி என்கிற பட்டணம் வந்து இருக்கிற நாளையிலே இந்த நீதிபரன் என்கிற பிராமணன் ஒரு தேவடியாள் வீட்டுக்குப் போனான். அவள் ஆயிரம் பொன் கொடுத்தாலொழிய வரவேண்டாமென்று சொன்னாள், இந்த சேதி கேட்டு இந்த பிராமணன் அதிவேகமாய்ப் புறப்பட்டு வந்து தேவடியாள் சேதி சொன்னார்.

விக்கிரமாதித்த ராசா அந்த சேதி கேட்டு, இந்தப் பிராமணனையும் அழைத்துக் கொண்டு விசனகிரி பட்டணமே

வந்து அந்த தேவடியாள் வீட்டுக்குப் போய் இந்த பிராணனைக் கொண்டு போய் வைத்து அந்த தேவடியாளை அழைத்து இந்தப் பிராமணன் சொன்னபடி கேட்க வேணுமென்று அவளுக்கு ஆயிரம் பொன் கொடுத்துப் போட்டு உச்சினியே வந்து சேர்ந்தார். நீயும் அப்படி சகாயம் பண்ண வல்லமையுண்டானால் இந்த சிம்மாசனம் ஏறலாம் என்று இருபத்திரண்டாம் பதுமை சொல்லப் போசராசன் வெட்கிப் போனான்.

இருபத்திரண்டாம் பதுமை கதை முற்றும்

## இருபத்து மூன்றாம் பதுமை கதை

பின்னையும் சிறிது நாளைக்குப் பிறகு போசராசா சிம்மாசனம் ஏற வருவான். அப்போ இருபத்து மூன்றாம் பதுமை சொல்லும் கதை

ஒகோய் போசராசனே கேளும். "விக்கிரமாதித்த ராசா ராச்சியபாரம் பண்ணுகிற நாளையிலே ஒரு சோதி ரிஷி வந்து ராசாவைக் கண்டு ஆசீர்வாதம் பண்ணி உன்னைப் போலே சகாயம் பண்ணுகிற பேரில்லை என்று அந்த சோதி ரிஷி சொல்லுவான். ராசாவானவனுக்கு அழகேதென்றால் தெய்வப் பிராமணருடைய கிருபையும் ரிஷிகளுடைய கிருபையும் தேவர்களுடைய கிருபையும் உண்டானால் ராச்சியம் சுபேகட்சியாக இருக்குமென்று அக்கிராமங்கள் சிவாலயங்கள் மண்டபங்கள் சிவபூசை, அரிபூசை, குருபூசை தீபாராதனையும்

இப்படி நாளொன்றுக்கு எட்டு சாமம் எட்டு காமத்துக்கும் தினம் சரிபூசை நடந்து வருகிறாப் போல உண்டு பண்ணினால் அந்த பலன் ராசாவுக்கும் ராச்சியத்துக்கும் ஔணணட்சியமாய் பரிபூரணமாயிருக்கிறதே ராசாக்களுக்கு அழகென்று சொன்னார்.

அப்போ ராசாவும் மிகுதியும் சந்தோஷப்பட்டு அந்தப் படியே அக்கிராரம் கட்டி வைத்து நாலு வேதமும் ஆறு சாஸ்திரமும் பதினெண் பிராணமும் படித்துக் கொண்டு நித்திய கருமங்கள அனுஷ்டானமும் முடித்துக் கொண்டு நேமநிஷ்டையாய் சந்தோஷமாக இருக்கிறத்தை சனியேசுவர பகவான் பார்த்து பொறுக்க மாட்டாமல் மழை உண்டானாலல்லோ விளைய வேண்டும். தருமம் நேமநிஷ்டை நடக்க வேணும். நவக்கிரகங்களிலே மேகத்திலே சஞ்சாரமில்லாத படிக்குப் பண்ணிப் போட வேணும். பன்னிரண்டு வருஷம் மழையில்லாமல் போனால் தருமத்தை எண்ணி நடக்கிறதைப் பார்ப்போம் என்று நவக்கிரகத்தை தடை கட்டினான். அப்போ மகாபூசையை பண்ணி தானதருமத்தையும் பண்ணினால் திங்கள் மும்மாரி பேய்ந்து ராச்சியம் சுகத்தை அடையும் என்று கோதிரி சொல்லி பூசையும் தருமமும் பண்ணியும் பன்னிரண்டு வருஷம் மழையில்லை. ராச்சியம் வற்ண்டு போகிறதென்று விக்கிரமாதித்த ராசா மெத்தவும் கவலையாயிருக்கிற வேளையிலே ஆகாசத்திலே அசரீரி வாக்கியமாக அழகாபுரி என்கிற பட்டணத்தே போய்

சதா விஷ்ணுவினுடைய சக்கரத்தை நோக்கி தபசு பண்ணினால் மெத்த நல்லது என்று சொல்லிற்று.

அப்படியே அழகாபுரி பட்டணத்துக்குப் போய் சக்கரத்தை நோக்கித் தபசு பண்ண அப்போ சக்கரம், புறப்பட்டது. ஒரு தேரும் தனுசும் கொண்டு வந்து கொடுத்து அந்தத் தேரின் பேரிலேறிக் கொண்டு ஆகாசமே போய் தனுசை எடுத்து அம்பை தொடுத்து விட்டார். அப்போ சனியேசுவரன் கிரகத்தை எய்தால் மழை உண்டென்று சோதிரிஷி சொல்ல அப்படியே மகாபூசைகளைப் பண்ணி வரம் வேணுமென்று கேட்டார். அப்போ தன்னுடைய ராச்சியமெல்லாம் நீங்கள் மும்மாரி பொழிய வரம் கேட்டுக் கொண்டு உச்சினியே வந்து சேர்ந்தார். அந்த சோதி ரிஷி சொன்னபடிக்கு திங்கள மும்மாரி பொழிந்து ராச்சியம் எல்லாம் சுபிட்சமாயிருந்தது. நீயும் அப்படி சகாயம் பண்ணி பூலோகத்தையெல்லாம் ரட்சிக்க வல்லமை உண்டானால் இந்த சிம்மாசனம் ஏறலாம்" என்று இருபத்து மூன்றாம் பதுமை சொல்ல போசராசன் வெட்கிப் போனான்.

இருபத்து மூன்றாம் பதுமை

## இருபத்து நான்காம் பதுமை கதை

பின்னையும் சிறிது நாளைக்கும் பிறகு போசராசா சிம்மாசனம் ஏற வருவான். அப்போ இருபத்து நான்காம் பதுமை சொல்லும் கதை

“ஓகோய் போசராசனே கேளும் விக்கிரமாதித்த ராசா ராச்சியபாரம் பண்ணுகிற நாளையிலே தேவேந்திரனுடைய சபையிலே யோகீசுவர்கள் தேவர்கள் ரம்பை ஊர்வசி திலோர்த்தமை இவர்களெல்லாம் கூடியிருக்கிற சபையிலே பூலோகத்திலே அநேகம் ராசாக்கள் ராச்சியபாரம் பண்ணுகிறார்கள். விக்கிரமாதித்த ராசாவைப் போல தான தரும பரஉபகாரமும் சகாயமும் தைரியமுடனே செய்கிற பேரில்லை என்று நாரத மகாமுனி சொன்னார். அப்போ தேவேந்திரன் சந்தோஷப்பட்டுக் கொண்டு இருக்கையிலே கரதூஷணரண்டையிலே நின்றார். அவரை அழைத்து பூலோகத்துக்கு நீ போய் விக்கிரமாதித்த ராசா குணம் அறிந்து வரச் சொல்லி அனுப்பினார்.

கரதூஷணர் பூலோகத்துக்கு வந்து விக்கிரமாதித்த ராசா காடாறு மாதம் திரிந்து உச்சினிக்கு வருகிற வழியிலே ஒரு காமதேனு கழுத்தளவு சேற்றிலே விழுந்து அம்மா அம்மாவென்று கூப்பிட்டுது. அத்தை ராசா கண்டு விசனப்பட்டு இந்தப் பசுவை எடுத்து விடுவோம் என்று வாலைத் தூக்கி எடுத்தளவிலே எழுந்திருக்க இல்லை. அஸ்தமித்தும் போச்சுது. அப்போ மேகராசன், வாயுராசன், வருணபகவான் இவர்கள் கூடி அகோரமாய் வந்தார்கள். அந்த சமயத்திலே நாம் விட்டுப் போக ஒண்ணாதென்று தன்னுடைய பச்சை வடத்தைப் பசுவின்

பேரிலே போட்டுக் கொண்டு அந்த ராத்திரி முப்பது நாழிகையும் காத்திருந்து உதையமான பின்பு பசுவை எடுக்க வேணுமென்று இருக்கையில் ஒரு புலி வந்தது. அந்தப் புலி பசுவைப் பார்த்து பாய வருகையிலே விக்கிரமாதித்த ராசாவைக் கண்டு பாய்ந்தது. ராசா ஆயுதம் வாங்கிக் கொண்டு புலியை அதட்டிக் கொக்கரித்த உடனே புலி பசுவை விட்டுப் பின்னையும் பொறுக்காமல் ராசாவைப் பாய்ந்தது. ராசாவுக்கு நகசிகை பரியந்தம் காயம் பட்டு உதிரம் பெருகையிலே தேவேந்திர தேவாதிகளெல்லாம் சந்தோஷப்பட்டுப் புஷ்ப மாரி பெய்தார்கள்.

அப்போ காமதேனு சொல்லிற்று, விக்கிரமாதித்த ராசாவினுடைய தருமத்தை அறிய வேணுமென்று தேவேந்திரர் என்னை அனுப்பினார். நான் கரதூஷணன் பசுவாக வந்தேன். புலியாக வந்தவர் எமதருமராசா. உம்முடைய மனதை சோதிக்க வந்தோம். உம்மைப் பார்க்க சந்தோஷமாச்சுது.

உமக்கு என்ன வரம் வேணுமென்று கரதூஷணன் கேட்க அப்போ ராசா சொல்லுவார். நகசிகை பரியந்தம் பட்டு ரத்தம் பெருகுகிறது மறைத்து எப்போதும் போல சரீரம் ஆனால் போதுமென்று சொல்ல அப்படியே சரீரம் எல்லாம் எப்போதும் போலயிருக்க வரம் கொடுத்து காமதேனுவை ஒட்டிக் கொண்டு வருகிற வழியிலே ஒரு விருத்தப் பிராமணனாகக் கரதூஷணன் வேஷம் கொண்டு பெண் சாதியும் ஆறு மாதத்திய பிள்ளையுமாக

ஏந்திக் கொண்டு வந்து ராசாவுக்கு ஆசீர்வாதம் பண்ணி இந்த பிள்ளைக்குப் பாலில்லை. இந்த காமதேனுவைக் கொடுத்தால் நல்லதென்று கேட்டார். அப்போ ராசா அந்த காமதேனுவை பிராமணனுக்குக் கொடுத்துவிட்டு உச்சினியே வந்து சேர்ந்தார். கரதூஷணன் புறப்பட்டு தேவேந்திரன் அண்டைக்குப் போய் விக்கிரமாதித்த ராசா பற்றி சொன்னார். தேவேந்திரர் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார். நீயும் அப்படி சகாயம் பண்ண வல்லமையுண்டானால் இந்த சிம்மாசனம் ஏறலாம்'' என்று இருபத்து நான்காம் பதுமை சொல்ல போசராசன் வெட்கிப் போனான்.

இருபத்து நான்காம் பதுமை முற்றும்

## இருபத்தைந்தாம் பதுமை கதை

பின்னையும் சிறிது நாளைக்குப் பிறகு போசராசன் சிம்மாசனம் ஏற வருவான். அப்போ இருபத்தைந்தாம் பதுமை சொல்லும் கதை

''ஒகோ போசராசனே கேளும். விக்கிரமாதித்த ராசா காடாறு மாதம் திரிந்து சக்கரகிரி என்கிற பட்டணமே வந்தார். அந்தப் பட்டணத்திலே குடிகளெல்லாம் ஏகமாயிருந்தபடியினாலே வீடுகள் தெருவுகள் தோரண வீதியில் குப்பைகளில்லாமல் சிங்காரமாக இருக்கும். அந்த பட்டணத்திலே ஒரு கோவில். அந்த கோவில் வசந்த மண்டபமாக சூரிய காந்தத்தினாலே

கட்டியிருந்தது. அந்தக் கோவிலிலே ராசாக்கள் போயிருந்தார்கள். அப்போ சிங்காரன் என்றொருவன் சர்வ ஆபரணமுந்தம் தரித்துக் கொண்டு சதுரங்கமாட வருவான். அப்படியே அங்கே இருக்கிற பேரும் தானுமாக சதுரங்கம் ஆடி தோற்று உடைமை எல்லாம் பறி கொடுத்து பின் கட்டாய்க் கட்டிக் கொண்டு தெரு வீதியிலே போய்க் கொண்டு இருக்கையிலே விக்கிரமாதித்த ராசா இவனைக் கண்டு ஆச்சரியப்பட்டு இது என்னவென்று கேட்க அதுக்கு நீர் கேட்டென்ன செய்யப் போகிறீரென்று சொன்னார்கள்.

சதுரங்கமாடி தோத்தவன் அப்போது, நான் சதுரங்கமாடுகிறபோது நமக்குச் சரி யாருமில்லை என்று சதுரங்கமாடி உடைமை எல்லாம் தேடிக் கொண்டு மகாராசானாக இருந்தேன். இப்ப சதுரம் ஆடி தோத்து உடைமை எல்லாம் பறி கொடுத்து பின் கட்டாய்க் கட்டுபட்டேன். தெய்வ பலமில்லாத படியினாலே இப்படியானேன். தெய்வ பலம் வேணுமென்று சிங்காரவீரன் சொன்னான். அது கேட்டு ராசா இவனை எப்படியும் விடுவிக்க வேணுமென்று மனதிலே எண்ணிருக்கையில் அவனைக் காத்திருக்கிறவனும் சொன்னது நீலகிரி என்கிற பருவதத்திலே மனோசத்தி என்கிற தேவதையும் உண்டு. அந்த தேவதைக்கு அஷ்டதிக்கும் எட்டு வயிரவருண்டு. அங்கே போய் அந்த வயிரவனையும் கண்டு

மனோசத்தியையும் சேவித்து மனதிலே தியானித்து கழுத்தை அறுத்துக் கொண்டு பலி கொடுக்கிறபோது மனோ சக்தியாகிறவள் வந்து வேண்டிய வரம் கொடுப்பாளென்று சொன்னார்கள்.

அப்படி நாங்கள் செய்ய மாட்டோமென்று சொல்ல அந்த சேதி ராசா கேட்டு நீலகிரி பருவதத்திக்குப் போய் குளத்திலே ஸ்நானம் பண்ணி, மனோசக்தி சன்னதியிலே போய் கத்தியை உருவி ஊட்டியிலே வைத்துக் கழுத்தை அறுக்கப் போகிற சமயத்திலே மனோசத்தி பிரசன்னமாய் வந்து சந்தோஷப்பட்டு உமக்கென்ன வரம் வேணுமென்று கேட்டாள். அதுக்கு ராசா, "என்னுடைய சிநேகிதன் சதுரங்கமாடி தோற்றான். அவன் பதினாயிரம் பொன் தோற்றிருக்கிறான். அதுவும் கொடுத்து இனிமேல் அவனுடனே எவனொருவன் சூதாடினாலும் எதிராளி தோற்கிறாப் போலேயும் சிங்காரவீரன் ஜெயிக்கவும் இப்படிப்பட்ட வரம் கொடுக்க வேணுமென்று கேட்டார். அப்படியே ஒரு குளிகையும் கொடுத்து அனுப்பினாள். அந்த குளிகையை வாங்கி சிங்காரவீரன் கையிலே கொடுத்த மாத்திரத்திலே இருபது காலி பொன் வந்து முன்னேயிருந்து அந்த பொன்னை முன் சூதாடி ஜெயித்த பேரிடம் கொடுத்து பின்னையும் சதுரங்கமாடி ஜெயித்துக் கொண்டு அந்த குளிகையும் கேட்ட திரவியம் கொடுக்கும். அது முன்னிலையாக நீ மகாராசனாக

இருப்பாயென்று சொல்லிவிட்டு விக்கிரமாதித்தராசா உச்சினி வந்து சேர்ந்தார். நீயும் அப்படி சகாயம் பண்ண வல்லமையுண்டானால் இந்த சிம்மாசனம் ஏறலாம் என்று இருபத்தைந்தாம் பதுமை சொல்ல போசராசன் வெட்கிப் போனான்.

இருபத்தைந்தாம் பதுமை முற்றும்

## இருபத்தியாறாம் பதுமை கதை

பின்னையும் சிறிது நாளைக்குப் பிறகு போசராசன் சிம்மாசனம் ஏற வருவான். அப்போ இருபத்தியாறாம் பதுமை சொல்லும் கதை

“ஒகோய் போசராசனே கேளும். விக்கிரமாதித்த ராசா காடாறு மாதம் புறப்பட்டு பூலோகத்திலுண்டான புதுமைகளெல்லாம் பார்த்து நிழலுக்கு ஒரு மரத்தடியிலே வந்திருக்கிறபோது, பூலோகத்தில் உண்டான பட்சிகளெல்லாம், வெய்யிலுக்கு அந்த மரத்தின் மேல் கூடிக் கொண்டு இருந்தது. அப்போ விக்கிரமாதித்த ராசா பட்சியின் பாஷை அறிந்தவரான படியினாலே பட்சிகள் சொல்லுகிறதைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். அதிலே ஒரு பட்சி, நாலுபேர் வேகமாக ஓடி வருகிறார்கள். இங்கே நிழலுக்கு வந்திருக்கிறவனைப் பிடிக்க வருகிறார்களோ அல்ல நம்மைக் கன்னி வைத்துப் பிடிக்க வருகிறார்களோ தெரியாதென்று சொல்கிறது.

இதை விக்கிரமாதித்த ராசா கேட்டுக் கொண்டு நாலு மூலையும் சுற்றிப் பார்த்துக் கொண்டு இருக்கையிலே அப்படியே வடக்கே இருந்து நாலு பேர் ஓடி வருகிறார்கள். இவர்கள் ஓடி வருகிறதை ராசா பார்த்து நீங்கள் இப்படி ஓடி வருகிற விவரம் என்னவென்று கேட்க அப்போ அவர்கள் சொல்லுவார்கள்.

காலக்குறோணி என்றொரு பட்டணம். அந்த பட்டணத்தில் ஒரு காளி கோவில். அந்த கோவில் கோபுரம் ஆகாசத்தை அளாவியிருக்கும். அந்த காளி அதிகப் பயங்கரமான ரூபத்தையுடையவளாயிருப்பாள். தினம் தினம் நாலு நரபலி இட வேணும். அப்படி பலி கொடுத்த பேருக்கு வேண்டிய வரத்தைக் கொடுப்பாள். இப்படி தினம் தினம் வலுவாயிருக்கிற பேர் பெலி கொடுத்து வரம் வாங்கிக் கொண்டு போவார்கள். நாங்கள் நாலு பேரும் சப்த ரிஷி பருவதத்திலேயிருந்து தேசாந்திரமாகப் புறப்பட்டு புண்ணிய ஸ்தலங்களெல்லாம் தரிசனம் பண்ணினால் பாவம் விமோசனம் என்று புறப்பட்டு புண்ணிய ஸ்தலங்களைச் சேவித்துக் கொண்டு விசய நகரப் பட்டணத்திற்கு அருகிலே கோல தேசம் மச்சதேசம் என்றொரு நாடுகள் உண்டு. அந்த தேசம் பார்க்கப் போனோம். அந்த காளிக்கு பலி கொடுக்கிற பேர் எங்களைத் துரத்திப் பிடிக்க வந்தார்கள். அது கண்டு நாங்கள் வாயு வேகமாய் ஓடி வந்தோம் என்று ராசாவிடம் சொன்னார்கள். அந்த சேதி

கேட்டு வேதாளத்தை அழைத்து இந்த நாலு பேருக்கும் பயம் தீர்த்து இவர்களைக் கொண்டு போய் சப்தரிஷி பருவதத்திலே விட்டு வரச் சொல்லி அனுப்பிவித்து காலக்குறோணி என்கிற பட்டணத்துக்கு ராசா போய் குளத்திலே ஸ்நானம் பண்ணி அந்த மாகாளியை பிரதட்சணமாக வந்து சன்னதிக்கு முன்னே நிற்கையிலே ஒருவனை பலியிடத்தக்கதாக சிங்காரித்து பஞ்சவாத்தியங்கள் முழங்க சன்னதிக்கு முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

அவனைப் பார்த்து ராசாவுக்குக் கிருபை வந்து சம்பத்துக்கும் பிராணனுக்கும் நிலையில்லை. இளமை சிறிது நாளையில் போய் விடும். கீர்த்தியும் தருமமும் உபகாரமும் நிலை நிற்கும். இவனுக்குப் பதிலாக என்னை வெட்டிப் பலி கொடுத்து அவனை விட்டு விடுங்கோளென்று விக்கிரமாதித்த ராசா சொல்ல அப்படி அவன் கழுத்திலிருந்த பூமாலையை வாங்கி ராசாவுக்குப் போட்டு சன்னதி முன்னிறுத்தி வாளையுருவி வெட்ட ஓங்கினான். ஓங்கினவன் கையெழும்பாமல் திகைத்து நின்றான். நிற்கிற போது தேவர்கள் சந்தோஷப்பட்டு புஷ்பமாரி பொழிந்தார்கள். காளியும் சந்தோஷப்பட்டு ராசாவின் முன்னே பிரசன்னமாய் வந்து ராசாவைப் பார்த்து நீ முப்பத்திரண்டு லட்சணத்துடனே இருக்கிறாய். நீ இப்படி பிராணனை விடுகிறாயே. உனக்கென்ன வரம் வேணுமென்று காளி கேட்க

ராசா சொல்லுவார். இன்று முதல் கொண்டு நரபலி கொள்ளாமலிருக்க வரம் தர வேணுமென்று கேட்டார். அப்படியே இன்று முதல் நரபலி வேண்டாமென்று ராச்சியமெல்லாத்துக்கும் பறைசாற்றி வைத்தாள். அப்போ ராசா காளியை வணங்கி விடைபெற்றுக் கொண்டு வந்தார். அப்போ பிரசைகளெல்லாம் உம்முடைய தருமத்தினால் பிழைத்தோம் என்று தோத்திரம் பண்ணினார்கள். பின்பு ராசாவும் உச்சினியே வந்து சேர்ந்தார். நீயும் அப்படி சகாயம் பண்ண வல்லமையுண்டானால் இந்த சிம்மாசனம் ஏறலாம் என்று இருபத்தியாறாம் பதுமை சொல்ல போசராசா வெட்கிப் போனான்.

இருபத்தியாறாம் பதுமை முற்றும்

## இருபத்தேழாம் பதுமை கதை

பின்னையும் சிறிது நாளைக்குப் பிறகு போசராசா சிம்மாசனம் ஏற வருவான். அப்போ இருபத்தேழாம் பதுமை சொல்லும் கதை

"ஒகோய் போசராசனே கேளும். விக்கிரமாதித்த ராசா ராச்சியபாரம் பண்ணுகிற காலத்திலே திங்கள் மும்மாரி பொழிந்து ராச்சியமெல்லாம் சுகத்தை அடைந்திருக்கிற காலத்திலே அதி பிரயனென்றொரு வித்துவான் வந்து ராசாவைத் தோத்திரம் பண்ணி லோகமெல்லாம் உம்மையே கொண்டாடுகிறார்கள் என்று வித்துவான் சொல்ல நீ எந்த எந்த தேசங்களுக்குப் போய்

வந்தீர்கள். அந்தந்த விருத்தாந்தங்களை சொல்ல வேணுமென்று கேட்க அதுக்கு வித்துவான் சொல்லுவான்.

வசந்தமாமுகமென்றொரு பட்டணம். அந்த பட்டணத்திலே வசந்த தியானன் என்றொரு ராசா. அவனுடைய சம்பத்தும் அவனுடைய பெருமையும் வித்தையும் கல்வியும் உண்டான ராசா. அவனை தேச தேசங்களிலே இருக்கிற வித்துவாங்கிஷர்கலெல்லாம் வசந்த தியானர் தியாகம் கொடுக்கிறார். அங்கே அவருடைய கீர்த்தியைக் கொண்டாடினார்கள் என்று சொன்னார்.

விக்கிரமாதித்த ராசாவும் உக்கிராணக்காரரை அழைத்து உக்கிராணத்தைத் திறந்து விடச் சொல்லி வித்துவாங்கிஷர்களை விட்டு உங்களுக்கு வேண்டிய திரவியம் கட்டிக் கொண்டு போங்கோளென்று ஆணையிட்டார். அப்படியே வந்து இருக்கிற வித்துவாங்கிஷர் இஷ்டமானது கட்டிக் கொண்டார்கள். அவரவர் கட்டிப் போன திரவியம் கணக்குப் பார்க்கக் கணக்கு பிள்ளைகளை அழைத்து கணக்குப் பார்க்க மூணரைக் கோடி திரவியமாச்சுது. மூணரைக் கோடி திரவியமாச்சுது என்று ராசாவுக்குச் சொன்னார்கள். ராசா கேட்டு மிகுந்த சந்தோஷப்பட்டு கணக்கு எழுதி கணக்கு சொன்ன கணக்குப் பிள்ளைகளுக்கு வேண்டிய வெகுமானம் பண்ணி நித்தியம் இப்படி வந்தவித்துவாங்கிஷருக்கு கொடுக்கச் சொல்லி

கட்டளையிட்டு அனுப்பினார். அப்படி விக்கிரமாதித்த ராசாவைப் போலே நீயும் தியாகம் பண்ண வல்லமையுண்டானால் இந்த சிம்மாசம் ஏறலாம் என்று இருபத்தேழாம் பதுமை சொல்ல போசராசன் வெட்கிப் போனான்.

இருபத்தேழாம் பதுமை முற்றும்

## இருபத்தெட்டாம் பதுமை கதை

பின்னையும் சிறிது நாளைக்குப் பிறகு போசராசா சிம்மாசம் ஏற வருவான். அப்போ இருபத்தெட்டாம் பதுமை சொல்லும் கதை

"ஓகோய் போசராசனே கேளும். விக்கிரமாதித்த ராசா ராச்சியபாரம் பண்ணுகிற நாளையிலே தான தருமம் பண்ண வேணுமென்று சதுரங்க பலத்துடனே வெளியே புறப்பட்டு கங்கையிலே ஸ்நானம் பண்ணி பூர்வ கதைகளைக் கேட்டு அக்கிரகாரங்கள் முதல் ஆலயங்கள், ஏரிகள், தண்ணீர்ப்பந்தல், திருவாசல்கள், அன்ன சத்திரம் இப்படிக்கெல்லாம் நீதி நெறிமையுடனே செய்ய வேணுமென்று புரோகிதர் வேத சாஸ்திரியார் யோகீசுவர்கள் பெரியோர்கள் எல்லாரையும் அழைத்துக் கொண்டு விசுவநாத சுவாமியையும் சேவித்து பட்டியை அழைத்து தருமங்களெல்லாம் குறையாமல் நடப்பிக்கச் சொல்லி இருபது கோடி திரவியமும் கொடுத்துவிட்டு சிம்மாசனத்தின் பேரிலே இருப்பார். அப்போது

இந்திரஜாலம் அறிந்த வித்தைக்காரர் வந்து ராசாவை நமஸ்கரித்து அறுபத்து நாலு கலைக்கியானம் சகலகலை வல்லவராயிருக்கிற வித்துவாங்கிஷர் உம்முட சமுகத்திலே இருக்கிறவர்கள் முன்பாக என்னாலான மாத்திரம் வித்தை காட்ட வேணுமென்று சொல்லி வித்தை மூட்டை எடுத்து வருகிறேனென்று மறைந்தான். மறைந்த ஒரு நாழிகையிலே ஆகாசத்திலே இருந்து வாலிபமாய் ஆயுத பாணியுடனே ஒரு தெய்வீகமான பெண்ணை கொண்டு வந்து ராசா முன்னே நின்றான். ராசாவை நமஸ்கரித்து தேவேந்திரனுடைய சேவகன் என்னை ஒரு காரியத்துக்காக பூலோகத்துக்கு அனுப்பினார். நீர் பிரானாரி சகோதரனென்று இந்தப் பெண்ணை உம்முடைய அடைக்கலமாக வைத்திருக்க வேணுமென்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே தலையற்று விழுந்தான். பின்னையொரு இடத்திலே காலும் தலையுமாக அறுந்து விழுந்தது. அந்தப் பெண் தன்னுடைய கணவனின் தலைவிழுந்தது என்று இனி நான் அக்கினியிலே விழுவேனென்று ராசாவை அக்கினி கேட்டாள். ராசாவும் மந்திரியும் இன்னும் தீரவிசாரித்துக் கொண்டு அக்கினியிலே விழச் சொன்னார்கள். அப்படியல்லவென்று தீயை வளர்த்தி அந்தத் தீயிலே ஆகாசத்திலே இருந்து விழுந்த முண்டங்களையெல்லாம் எடுத்து தீயிலே போட்டு தானும் தீயிலேவிழுந்தாள். வெந்து நீறாகிப்

போச்சுது.

அந்தக் குழியும் மூடிப் போட்டு ஒரு நாழிகைக்கும் பிறகு புருஷனும் மங்கையுமாக ராசா முன்னே திவ்விய வாசனையுடனே ஒரு மாலையும் கொண்டு தெய்வ லோகத்திலே தேவேந்திரனிடம் இருந்து பூலோகத்துக்கு வந்தேன் என்று தெய்வலோகத்து விசேஷங்கள் சிறிது சொல்லி என்னையும் என் பெண் சாதியையும் பூலோகத்திலே இருக்கச் சொல்லி கட்டளை பண்ணி அனுப்பினார்கள். வந்தேனென்று சொல்லி என்னுடைய பெண் சாதியை விடுமென்று கேட்டான். அப்போ மந்திரி பிரதானி மற்றுமுண்டான பேரும் சொன்னது. உன்னுடைய தலையும் காலும் துண்டம துண்டமாக விழுந்தது கண்டு உன் பெண் சாதி அக்கினிப் பிரவேசமானாளென்று சொன்னார்கள்.

அப்போ அந்த வித்தைக்காரன் சபை நடுவே நின்று நமக்கு நியாயமாய் யார் சொல்லப் போகிறார்களென்று சொல்லி, பெண் சாதியும் அக்கினிப் பிரவேசமானாளோவென்று மிகுதியும் துக்கித்த போது ராசாவும் சற்று நேரம் திகைத்து விசாரப்பட்டு இதுவெல்லாம் பொய்யா இருந்தாலும் மெய் போலே சித்து காட்டினானென்று சொன்னார். ராசா சந்தோஷப்பட்டுக் கொண்டுயிருக்கிற வேளையிலே மந்திரி மற்றுமுண்டான பெரியோர்கள் என்ன விவரமென்று கேட்டார்கள். அதுக்கு

ராசா இதுவெல்லாம் பொய்யாயிருக்கும் மெய் போலே சித்து காட்டினானென்று சொன்னார். சகலமான சபை மன்னரும் சந்தோஷப்பட்டார்களா. அந்த வேளையிலே பாண்டிய ராசா எட்டுக் கோடி திரவியமும் முத்துத் தாவடமும் பன்னிரண்டு லட்சம் யானையும் பதினாயிரம் குதிரையும் தெய்வ ரம்பைகள் போல் நூறு பெண்களுமாகக் கொண்டு வந்து ராசாவைக் கண்டார்கள். நீயும் அப்படி தியாகம் கொடுக்க வல்லமையுண்டாகில் இந்த சிம்மாசனம் ஏறலாம் என்று இருபத்தெட்டாம் பதுமை சொல்ல போசராசன் வெட்கிப் போனான்.

இருபத்தெட்டாம் பதுமை முற்றும்

## இருபத்தொன்பதாம் பதுமை கதை

பின்னையும் சிறிது நாளைக்கும் பிறகு போசராசா சிம்மாசனம் ஏற வருவான். அப்போ இருபத்தொன்பதாம் பதுமை சொல்லும் கதை

"ஓகோய் போசராசனே கேளும் விக்கிரமாதித்த ராசா ராச்சிய பாரம் பண்ணும் காலத்திலே சாந்தசிலன் என்றொரு முனி வந்து ராசாவைக் கண்டு நாம் ஒரு விருட்சத்தின் கீழே ஓமம் பண்ணிக் கொண்டிருப்பேன். அதுக்கு நீர் வர வேணுமென்று சொல்ல, அப்படியே வருகிறேனென்று ராசா சொன்னார்.

முனி சந்தோஷப்பட்டு ஊருக்கு மேற்கே ஒரு முருங்கை மரமிருக்கு. அதிலே ஒரு வேதாளம் இருக்குது. அதைப்பிடித்துக் கொடுத்தால் இந்த ஓமம் முடியுமென்று முனி சொல்ல அப்படியே ராசா போய் வேதாளத்தைப் பிடித்துக் கொண்டு வருகிறார்.

அப்போது வேதாளம், "நானொரு கதை சொல்லுகிறேன் கேளுமென்றது முனியிருக்கிறயிடம் காதவழியிருக்கிறதே. நான் கதை சொல்லி வருகிறேன் கேளும் ராசாவே என்று வேதாளம் கதை சொல்ல ஆரம்பித்தது.

தருமாபுரமென்றொரு பட்டணத்திலே கிருபாகரனென்றொரு ராசாவுக்கு ஒரு பிள்ளையுண்டு. அவனொருத்தர் பேச்சும் கேளாமல் துஷ்டனாயிருப்பான். அவன் ஒரு நாள் வேட்டைக்குப் போனான். வேட்டைக்கிடையாமல் வெய்யிலிலே மிகவும் நொந்து தண்ணீர் தாகமெடுத்து விடாய்த்து வரும்போது ஒரு குளமிருந்தது. அங்கே ஒரு பிராமணனிருந்தான். அவனை அழைத்து இந்தக் குதிரையைப் பிடித்துக் கொண்டு போய் குளத்திலே தண்ணீர் காட்டி வருகிறாயோவென்று சொன்னான். அதுக்குப் பிராமணன் உன்னுடைய ஆளா நான் குதிரை பிடிக்கவென்று சொன்னான். அப்போ ராசகுமாரனுக்குக் கோபம் வந்து இந்தப் பிராமணனை சவுக்காலே அடித்தான். அந்தப் பிராமணன் கிருபாகரன் என்கிற ராசாவிடத்துக்குப் போய்ச் சொன்னார். அப்போ

ராசா, மந்திரி, பிரதானி பிராமணனை வேண்டிக் கொண்டு இந்த தவறைப் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று பிராமணனை அனுப்பி வைத்துப் பின்பு குமாரனை அழைப்பித்து கீர்த்தியும் தருமமும் ஆக இருக்கிறத்தை , நீ அபகீர்த்தி பண்ணலாமோ உன் முகத்திலே முழிக்கக் கூடாது. உன் முகத்திலே விழித்தால் தோஷமென்று குமாரனை வெட்டிப் போடச் சொல்லி ஆணையிட்டார்.

அப்போ மந்திரி, அப்பனுடனும் கருணீகருடனும் பண்டாரத் தாருடனும் பிராமணாளுடனும் போகாதென்றார். அப்போ பிராமணன் சமுத்திரத்தையும் குளத்து நட்சத்திரங்களென்கிறவன் இந்திர பாதாளத்திலே இருப்பான். அவனை பாம்பாகப் போய் கடிக்கப் போனான். அப்படி போல பிராமணனுடைய மனது நோகவொண்ணாதென்று அதனால் ஆணைப் பண்ணச் சொன்னோமென்றார். அப்போ மந்திரி நமஸ்கரித்து இந்த ஆதீனத்துக்கு இந்தக் குமாரனே ஒழிய வேறே பிள்ளை இல்லை என்று சொல்ல பிராமணன் எழுந்திருந்து ராசாவே என்னுடைய கோபமெல்லாம் போச்சுது. குமாரனை அழைப்பியும் என்றார். அப்போ ராசாவுக்குக் கிருபை வந்து ஆணை பண்ண வேண்டாமென்று குமாரனை அழைப்பித்தார். ராசாவானவனும் மதப்பட்ட யானையும் சரி இந்த ராசா பெரியவனோ பிராமணன் பெரியவனோ என்று

வேதாளம் கேட்க ராசா பெரியவளென்று விக்கிரமாதித்த ராசா சொல்லுவார்.

இப்படி இருபத்தேழு கதை வேதாளம் சொல்ல விக்கிரமாதித்த ராசா விடுவித்துக் கொண்டு வருவார். அப்படி போல நீயும் சகாயம் பண்ண வல்லமையுண்டானால் சிம்மாசனம் ஏறலாம் என்று இருபத்தொன்பதாம் பதுமை சொல்ல போசராசன் வெட்கிப் போனான்.

இருபத்தொன்பதாம் பதுமை

## முப்பதாம் பதுமை கதை

பின்னையும் சிறிது நாளைக்கும் பிறகு போசராசன் சிம்மாசனம் ஏற வருவான். அப்போ முப்பதாம் பதுமை சொல்லும் கதை

"ஓகோய் போசராசனே கேளும் விக்கிரமாதித்த ராசா ராச்சியபாரம் பண்ணுகிற நாளையிலே நகர் சோதனை பார்க்கப் புறப்பட்டு உச்சினி பட்டமெல்லாம் சுற்றிப் பார்த்து விசேஷங்களெல்லாம் அறிந்து ராசா வீதி வழி வருகிற போது மழை வந்தது. அந்த மழைக்கு ஒரு திருவாசலிலே வந்திருந்தார். அதிலே முன்பே ஒரு பரதேசியிருந்தான்.

இரண்டு பேரும் இருக்கிறபோது ஒரு பல்லி சொல்லிற்று. ராசா பரதேசியைப் பார்த்து இந்த பல்லி சப்தத்தின் விவரமென்னவென்று கேட்டார். அதுக்கு அவன் சொன்னது

இந்தப் பட்டணத்துக்கு வடக்கே பெருகுகிற ஆற்றிலே தென் கரையிலே முப்பதடிக்கு அப்பாலே ஒரு பிணம் ஆற்றிலே வருகிறதென்று சொல்லிச் சென்றான். அந்த வேளையிலே ஒரு ஓரி கூப்பிட்டது. அதன் விவரமென்னவென்று கேட்டார். ஆற்றிலே வருகிற பிணத்தின் இடுப்பிலே பதினாயிரம் பொன் இருக்கிறதென்று சொன்னான். அந்த அடையாளத்துக்கு ராசா போய் நின்று பார்த்துக் கொண்டிருக்கையில் கால் நாழிகையில் அந்தப் பிணம் வந்தது. அப்போ ராசா அந்தப் பிணத்தை இழுத்துக் கரையிலே போட்டு அரையைப் பார்க்க அதிலே பதினாயிரம் பொன் சரியாயிருந்தது. பிணத்திலே இருந்தபடி இருக்கட்டுமென்று சந்தோஷப்பட்டு தலையாரிகளை அழைப்பித்து சகுனம் சொன்னவனை அவர்கள் வசம் ஒப்புவித்துப் போட்டு ராசா அரண்மனைக்குப் போனார். விடிந்த பிறகு ராசா அரண்மனையிலே இருந்து கொண்டு சகலமான துரைகள் மந்திரி பிரதானிகள் முதலான பேரை அழைப்பித்து அரண்மனையிலே வைத்துக் கொண்டு பரதேசியை அழைத்து வரச் சொன்னார். தலையாரிகள் பரதேசியை அழைத்து வந்து ராசா முன்னே நிறுத்தினார்கள். அவனும் ராசாவைக் கும்பிட்டு நின்றான். ராசா நீயாரென்று கேட்டார். நான் வெள்ளாழன் செட்டி பிள்ளை. வியாபாரம் கொண்டு வந்து இந்தப் பட்டணத்திலே செலவு பண்ணி விட்டு திரவியம்



T. 7059

தேடி மகா தீர்த்தக் கரைக்குப் போய் தீர்த்த யாத்திரை ஆடி தெய்வ ஸ்தலங்களெல்லாம் போய் சேவித்து தான தருமம் பரஉபகாரம் ஓமம் பண்ணி வருகிற தருவாயில் பத்மாகிரி பருவதத்துக்கு வடக்கே மணிகேஸ்வரம் என்கிற பட்டணத்திலே ஒரு ஈசுவரன் கோவிலிலே தெய்வ ரிஷிகள் யோகீஸ்வரர்களெல்லாம் தபசு பண்ணி வரம் பெற்றார்கள். நானும் சோதிடம் சகுன சாஸ்திரம் வேணுமென்று கேட்ட மாத்திரத்தில் அப்படியே வரம் கொடுத்தார்கள். அவர்களை நமஸ்காரம் பண்ணிக் கொண்டு இந்த பட்டணத்துக்கு வந்தேன் என்றான். அப்போ ராசா எழுந்திருந்து அவனைக் கட்டித் தழுவிக் கொண்டு நீ தபசு பண்ணி பரமேசுவரனையும் பெரியோர்களையும் கண்டு எறும்புக் கடை எண்பத்து நான்கு சீவ ஜந்துக்கள் பேசுகிற பாஷைகள் அறியத்தக்க நல்ல வரம் பெற்று வந்தாயென்று ராசா சந்தோஷப்பட்டு அந்த வெள்ளாழன் செட்டிக்கு கோடி திரவியம் கொடுத்து அனுப்பினார். நீயும் அப்படி சகாயம் செய்ய வல்லமையுண்டானால் இந்த சிம்மாசனம் ஏறலாம் என்று முப்பதாம் பதுமை சொல்ல போசராசா வெட்கிப் போனான்.

முப்பதாம் பதுமை முற்றும்

## முப்பத்தோராம் பதுமை கதை

பின்னையும் சிறிது நாளைக்கும் பிறகு போசராசன்

சிம்மாசனம் ஏற வருவான். அப்போ முப்பத்தோராம் பதுமை சொல்லும் கதை

''ஓகோய் போசராசனே கேளும். விக்கிரமாதித்த ராசாவுக்கு தேவேந்திரன் கொடுத்த சிம்மாசனம்., அவனைத்தவிர மற்றொருவர் ஏறப் போகாது. விக்கிரமாதித்த ராசா ராச்சியபாரம் பண்ணுகிற நாளையிலே ஒரு ஆச்சாரியைச் சேர்த்து அவனுடனே ஸ்நேகிதமாக சகலவித்தையும் கூடு விட்டுக் கூடு பாய்கிற வித்தையும் கற்றுக் கொடுத்து காடாறு மாதம் போனாலும் ஆசாரியை கூடவே கூட்டிக் கொண்டு போவார். இப்படி இணை பிரியாமல் வங்கணமாக இருக்கிறதை பட்டி கண்டு ராசாவைப் பார்த்து ஆசாரியுடனே நட்பு ஆகாது 'தட்டார் கருவு பொல்லாது'. அவன் எந்த விதத்திலேயும் மோசம் பண்ணுவானென்று சொன்னார்.

அதை சட்டை பண்ணாமல் ஆசாரியும் ராசாவும் புறப்பட்டு காடாறு மாதம் போகிற போது அத்துவான காட்டிலே கிளிப்பிள்ளை செத்து கிடந்தது. அதை ஆச்சாரி பார்த்து ராசாவே கூடு விட்டு கூடு பாய்கிறது உமக்குத் தெரியுமே. இந்தக் கிளிப்பிள்ளை கூட்டிலே புகுந்து பறந்து போக வேணுமென்று சொல்ல விக்கிரமாதித்த ராசா தன் உடலை விட்டு செத்துக் கிடக்கிற கிளியின் உடலை புகுந்து பறந்து திரிகையிலே ஆசாரிக்கும் அந்த வித்தை தெரிந்திருக்கிற

படியினாலே தன் கூட்டை விட்டு ராசாவின் கூட்டிலே புகுந்து தன்னுடைய கூட்டை சுட்டுவிட்டு உச்சினி பட்டணம் வந்தான்.

அப்போ பட்டியாகிறவன் ராசா வருகிற விசேஷம் கேட்டு காடாறு மாதம் போய் ஆறு மாதம் சென்றதின் பிறகு வருகிற ராசா மூன்று நாளையில் வருவது கபடமாயிருக்கிறதென்று அரண்மனைக்குப் போய் அம்மாளை அழைத்து நான் சொன்னபடிக்கு ஆறு மாதத்துக்கு கேட்க வேணுமென்று கேட்டான். அதுக்கு அம்மா உன்னை விட்டு எனக்கு வேற கதியுண்டோ. நீ சொன்ன புத்தி கேட்கிறேனென்று சொன்னாள். அப்போ அரண்மனையை இரண்டு பண்ணிக் கொடுத்து ஒரு பக்கத்தில் ராசாவின் தேவியாரை வைத்து புறம்பாக வழி விட்டு பின்னையொரு அரண்மனையிலே தாதிகளை அழைத்து ஒரு சிலையை சிங்காரமாக அம்மாளைப் போல சிங்காரித்து தாதிகளை அழைத்து இவள் தான் அம்மாள் என்று சொல்லுங்கள் என்று சொல்லி வைத்துவிட்டு வந்தான். பட்டி ராசாவுக்கு எதிராக ராசாக்கள், சேர்வைகாரர், தளகர்த்தாள், யானை குதிரை சேனை களத்துடனே வந்து ராசாவைக் கண்டு அழைத்து வருகிற போது உடல் வேறு சிவன் வேறுமாயிருக்கிறதைப் பட்டி பார்த்து உடல் மாத்திரம் ராசாவுடைய உடல் என்று அறிந்து அழைத்துக் கொண்டு போய் அரண்மனையிலே வைத்து, பட்டி அந்தப்புரத்துக்குப் போய்

தாதிகளை அழைத்து விக்கிரமாதித்த ராசா பெண் சாதியென்று சொல்லி போக போக்கியங்களை அனுபவித்துக் கொண்டு இருங்களென்று சொல்லி திடப்படுத்தி வைத்துவிட்டு வந்தான். பட்டி மனதிலே வெகு விசாரத்துடனே யோசனை பண்ணி நம்முடைய ராசா எந்த விதத்திலேயாகிலும் உடலிலே வந்து சேருவாரோ என்று யோசனையுடனிருந்தான்.

அப்போ விக்கிரமாதித்த ராசா கிளிப்பிள்ளை உடலிலே புகுந்தவர் வெகுதூரம் போய் பார்த்து ஆசாரிக்கு அமுதமான மாம்பழத்தை மூக்கிலே கொத்திக் கொண்டு தன் உடலைக் காணாமல் திகைத்து ஆசாரி மோசம் பண்ணினானே. பட்டி சொன்ன பேச்சைக் கேளாமல் ஆசாரியுடனே சிநேகம் பண்ணினதற்கு மோசம் வந்துதென்று மனதிலே எண்ணிக் கொண்டு இப்பொழுதே நாம் பட்டியுடம் போகலாகாது. காடாறு மாதமும் சென்ற பிறகு பட்டியிடம் போவோமென்று அங்கேயிருந்து பறந்து போகிறபோது ஒரு ஆலமரத்திலே நூறு கிளிகள் கூட்டங் கூடியிருக்கிறதைக் கண்டு அங்கே போய் சேர்ந்து இருந்தார்.

அந்தக் கிளிகளெல்லாம் பார்த்து இந்தக் கிளியை ராசாவாய் வைத்து அது சொன்னபடி கேட்டுக் கொண்டு இருந்தன. பகவெல்லாம் காட்டிலே மேய்கிறதும் ராத்திரிக்கு அந்த மரத்திலே வந்து அடையும். இப்படியிருக்கிறபோது அந்தக்

கிளிகளை ஒரு வேடன் கன்னி வைத்துப் பிடிக்க வேணுமென்று வெகு நாளாய் திரிந்தான். இப்படி இருக்கிற நாளையிலே ஒரு நாள் காற்றும் மழையும் வந்தது. அந்த வேளையிலே ஒரு காகம் காற்று மழையிலே அடிபட்டு வெகுவாய் நெரந்த காகம் இந்த மரத்துக்கு வந்து இந்தக் கிளிகளை கொஞ்சம் இடம் கொடுங்களென்று கேட்டது. அதற்கு கிளிகள் கரு மனுஷன் இங்கே வரலாகாது இடமில்லை என்று சொல்ல அப்போது இந்த ராசகிளி சொன்னது, யாதாமொருவன் மழையிலே அடிபட்டு நொந்து வந்தால் அவனுக்கு இடம் கொடுக்க வேணும். இல்லை என்று சொல்லப் போகாது. ராத்திரிக்கு பத்து நாழிகை இருந்து போகட்டுமென்று சொல்ல நல்லதென்று இடம் கொடுத்து இருந்தபடியினாலே அந்த காகம் இருந்த இடத்திலே எச்சமிட்டது.

அது எச்சமிட்ட தாவிலே ஒரு மரம் முளைத்தது. கம்பும் கயிறுமாச்சுது. வேடன் அந்த வழியாக ஏறி அந்த நூறு கிளிகளுக்கும் கன்னி வைத்துவிட்டுப் போய் விட்டான். அப்போது மேயப் போன கிளிகள் வந்து அதனதன் இடத்திலே இருக்கும் கூட்டிலே இருந்தது. அப்போ கிளிகளெல்லாம் கன்னியிலே அகப்பட்டுக் கொண்டோமென்று சொல்ல இப்போ ராசகிளியும் நானும் கன்னியிலே அகப்பட்டுக் கொண்டோம் என்று சொல்ல அப்போ கிளிகள் கறுப்பு மனுஷரைச் சேர்க்கலாகாதென்று சொன்னதற்கு நீர் இருக்கட்டும் என்று

சொன்னீரே. இப்போ நமக்கு எல்லாருக்கும் முடிவு காலம் வந்ததென்று பறவைகள் சொன்னது.

இப்ப என்னமாச்சுது. அவன் பொழுது விடிந்து வருவான். அப்போ எல்லாரும் செத்தாப் போல் கிடப்போம். அவன் வந்து பார்த்து கிளிகளெல்லாம் செத்துப் போச்சுது என்று மரத்திலே ஏறி கன்னி விடுவித்து கீழே போடுவான். அப்போ முதல் விழுகிற கிளி எண்ணிக் கொள்ளுங்கோள். நூறு கிளியும் சரியானால் பறந்த போவோமென்று ராசாகிளி சொல்ல கிளிகளெல்லாம் அதே பிரகாரம் கிடந்ததுகள். வேடன் வந்து பார்த்து மரத்திலே ஏறி செத்துக் கிடக்கிற கிளிகளைப் பார்த்து செத்துப் போச்சுதென்று கன்னியை விடுவித்து என்றொன்றாய்க் கீழே போட்டான். அப்போ தொண்ணூற்றொன்பது கிளி கீழே விழுந்தது. ராசா கிளியை கன்னி விடுவிக்கிறபோது வேடனுடைய கத்தி உறை நழுவி கீழே விழுந்தது. அது கண்டு நூறு கிளியும் சரியாச்சுது என்று தொண்ணூத்தொன்பது கிளியும் பறந்து போயிற்று.

வேடன் கிளிகள் நம்மை மோசம் பண்ணி ஓடிப் போச்சுதென்று ராசா கிளியை விடாமல் பிடித்து இரக்கையை ஒடிக்கப் போனான். அப்போ கிளி, என் இரக்கையை ஒடிக்க வேண்டாம். என்னை விந்தமாபுரி என்கிற பட்டணத்துக்குக்

கொண்டு போய் கடையிலே விலை சொல்லும். உனக்கு நூறு பொன் வாங்கித் தருகிறேனென்று சொன்னது. கிளி பேசுகிறதை வேடன் பார்த்து ஆச்சரியப்பட்டு அப்படியே விந்தமாபுரி பட்டணத்துக் கடையிலே கொண்டுபோய் விலை சொல்லும்போது பார்த்த பேர் கிளி விலை என்னவென்று கேட்க இருநூறு பொன்னென்று வேடன் சொல்ல கேட்ட பேரெல்லாம் இந்த கிளி இருநூறு பொன்னாவது. கிளி ஒரு பணம் அல்லவென்றால் அஞ்சு பணம் என்று கேட்ட பேரெல்லாம் சொல்லி பரிகாசம் பண்ணினர்.

தனதானன் என்கிற செட்டியார் கண்டு கையிலே கிளியை வாங்கிப் பார்த்து இதுக்கு இருநூறு பொன் கொடுக்கிறதாவென்று சொல்ல, அப்போ கிளி செட்டியாரைப் பார்த்து சொல்லும். நீர் இருநூறு பொன் போகிறதென்று மலைக்க வேண்டாம். அந்தப் பொன் பத்து நாளையிலே எடுத்துக் கொடுக்கிறேனென்று சொல்ல செட்டியார் கிளி பேசுகிறதை பார்த்து இருநூறு பொன் வேடனுக்குக் கொடுத்து கிளியை வாங்கி கடையிலே வைத்து அதுக்குக் கூண்டு கட்டி வைத்து பாலும் பழமும் கொடுத்து வளர்க்கிற போது கிளி செட்டியாரைப் பார்த்து ஒரு கடை தன் பேருக்கு வைக்கச் சொல்லியது. அது செட்டியார் கேட்டு ஒரு கடை ஏற்பாடு பண்ணி கிளிக்கடை என்று பேரிட்டார்.

முத்து, பவழம், மாணிக்கம், வைடூரியம், கோமேதகம், புஷ்பராகம், பச்சை நீலம் முதலானதெல்லாம் விலை சொல்லி அந்தந்த ரத்தினங்களுக்கு விலை சொல்லி விற்கிறதும் சகலமான வியாபாரம் பண்ணுகிறபோது தனதானனென்கிற செட்டியாருக்கு நாலு மாதத்திலே கிளிப்பிள்ளையால் சிறிது பணம் சேர்ந்தது. வழக்குகளெல்லாம் கிளிப்பிள்ளையிடம் வந்து தீர்க்கிறது. இதைக் கேட்டு ராசா மந்திரி எல்லோரும் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார்கள். தேச தேசங்களெல்லாம் போச்சுது. பின்னையும் தேசங்களிலே இருந்து வழக்குகள் வரும். அந்த வழக்குகளெல்லாம் கேட்டுத் தீர்த்து விடும்.

அந்தப் பட்டணத்திலே கோவில் தேவதாசி குணபரமாலை என்கிறவள் ஒரு நாளைக்கு ஆயிரம் பொன் விசுவாசம் வாங்கிக் கொண்டு விசுவாசம் கொடுத்த நாயகனுடனே யோக போகமாயிருப்பாள். அப்படி நடந்துவரச்சே ஒரு பிராமணன் அவள் பேரில் மோகமாகி தினம் மூன்று வேளையும் அவளுக்குப் பஞ்சாங்கம் சொல்லிக் கொண்டு வருவான்.

ஒரு நாள் ராத்திரி குணபரமாலை தேவடியாளிடம் வந்தாப் போல கை கலந்து யோக போகமாயிருந்தாப் போல கனாக் கண்டான். மறுநாள் காலமே எழுந்திருந்து கை கால் சுத்தி பண்ணிக் கொண்டு அந்த தேவதாசி வீட்டிக்குப் போய்

பேசிக் கொண்டு இருக்கிற போது அவளுடனே சிநேகமாயிருக்கிறவனுடனே சொப்பனம் கண்ட விருத்தாந்தம் சொன்னான்.

அவன் நல்லதென்று அந்த சினேகிதனாயிருக்கப்பட்டவன் அந்த தேவதாசியுடனே போய் இந்த சேதியைச் சொன்னான். அந்த விசேஷம் கேட்டு அவள் ஒரு உபாயம் பண்ணினாள். ராத்திரி உன்னண்டையிலே படுத்திருந்தேனென்று வார்த்தை வசம் சொல்லி ராத்திரி என்னுடனே என்ன சொன்னாய். காலமே ஆயிரம் பொன் கொடுக்கிறோனென்று போனாயே. இப்போ சொப்பனம் கண்டேனென்று சொல்லுகிறாய். ராத்திரி நீ என்னிடத்துக்கு வந்த ஆயிரம் பொன் விசுவாசம் கொடுத்து அப்பாலே போவென்று பிராமணனை மறைத்துப் போட்டாள். அந்தப்படியே பிராமணன் மறியிலே இருந்தான். அதை வருகிற பேர் போகிற பேர் கண்டு இது என்னவென்று கேட்கச்சே தேவதாசியிடமும் பிராமணனிடமும் கேட்டு இந்த வழக்கு இங்கே தீராது செட்டியார் கடையிலே இருக்கிற கிளிப்பிள்ளையினிடத்துக்குப் போய்ச் சொன்னால் கிளிப் பிள்ளை தீர்த்துவிடுமென்று சொன்னார்கள். அப்படியே இருவரும் கூடி கிளியிடம் போய் இரண்டு பேரும் வழக்குச் சொன்னார்கள்.

அந்தக் கிளிப்பிள்ளை இருவரையும் அழைத்து இருவர் வழக்கையும் கேட்டு இந்த வழக்கு நிர்ணயம் பண்ணுகிறதற்கு

இருவரையும் அப்பாலே போகச் சொல்லி சபை நிறைந்திருக்கிறவர்களைப் பார்த்து இந்த வழக்கு எப்படி என்று கேட்க அதுக்கு சபையார் உங்களுக்குத் தெரியாதது நாங்களென்ன சொல்லப் போகிறோமென்று சொன்னார்கள்.

நிலை கண்ணாடி கொண்டு வரச் சொல்லி அத்தை அங்கே நிறுத்தி ஆயிரம் பொன் கொண்டு வரச் சொல்லி கண்ணாடிக்கும் பிறகே கொட்டி அந்த தேவதாசியை அழைத்து, வாரும் பெண்ணே! உன்னுடைய சிநேகிதனாகி இருந்தவன் உன்னண்டைக்கு வந்து புணர்ச்சி பண்ணுகிறதற்கு அவகாசமில்லாத படியினாலே ராத்திரி காலத்திலே சொப்பனம் கண்ட அந்த சொப்பனத்தை உன்னுடனே சொன்னதுக்கு வழக்கு வந்தாய். அந்த வழக்குத் தீரும் வகை எப்படியென்றால், இந்த நிலைக் கண்ணாடியைப் பாரென்று சொல்ல அப்போ தேவதாசி பார்த்து கண்ணாடிக்கும் பிறகே பணமிருக்கிறதென்று சொன்னாள். அதுக்கு கிளிப் பிள்ளை அவன் உன்னுடனே பேசினது மெய்யானால் இந்த கண்ணாடி வழியாய் இந்த ஆயிரம் பொன்னும் வாங்கிக் கொண்டு போவென்று சொல்ல சபையார் எல்லாம் நல்ல புத்தி சொன்னீர்களென்று சொன்னார்கள்.

அந்தத் தேவதாசி கிளிப்பிள்ளையைப் பார்த்து வழக்கு ஓரமாய் சொன்னாயே. உன்னை எந்த விதத்திலேயும் கொண்டு போய் ஆய்ந்து கறிச் சமைத்து தின்னாமல் போனால் என்பேர்

குணபரமாலையல்ல என்று தலை குனிந்துக் கொண்டு சொன்னாள். அதைக் கிளிப்பிள்ளை கேட்டு சபை நிறைந்திருக்கிற போது தேவடியாளைப் பார்த்து, அடி வெள்ளாட்டி உன் தலையைச் சிரைப்பித்து அஞ்சு குடுமி வைத்து தலையிலே சாணியை வைத்து நடைவிளக்கேற்றி ஓட்டி வையாமல் போனால் என்பேர் கிளியல்ல என்று சொல்லிற்று.

அப்போ தேவடியாள் உன் சபதமும் என் சபதமும் பார்ப்போமென்று போனாள். தேவடியாளுக்கு பேச வாய் எழும்பாமல் மனதிலே கோபமாய் போய் தன் வழக்கை தோற்றுப்போகச்செய்த கிளியைக் கொல்ல உபாயம் தொடுத்தாள். அதெப்படி என்றால் அந்தப் பட்டணத்து தனதானன் என்கிற செட்டியார் குமாரனைத் தன் வீட்டுக்கு அழைத்து வரச் சொல்லி அவன் கையில் விசுவாசம் வாங்காமல் கைக்குள்ளே போட்டுக் கொண்டு அவனுக்கு ஆசையை மிகுதியும் உண்டாக்கி ஆயிரம் இரண்டாயிரம் கொடுத்தாலும் வாங்காமல் ஒரு நாள் அதிக உல்லாசங்களாய் அவனுக்கு மதன சாஸ்திரமும் கற்பித்து உல்லாசமாய் கிரீடை அனுபவிக்கிற போது செட்டியார் குமாரனுக்கு இவள் பேரில் அதிக மோகமாய் சந்தோஷப்பட்டு உனக்கு என்ன வேணுமென்று கேட்டான்.

அப்போ நல்ல சமயம் பார்த்து உங்கள் வீட்டிலே இருக்கிற கிளிப்பிள்ளை மேல் ஆசையா இருக்கிறது. அந்தக்

கிளிப்பிள்ளையை தனக்குக் கொடுக்க வேணுமென்று கேட்டாள். அதுக்கு செட்டியார் குமாரன் சொல்லுவான் அந்தக் கிளிப்பிள்ளையாலே எங்கள் தரித்திரம் விமோசம் ஆச்சுது. இந்த சேதி எங்கள் தாய் தகப்பன் கேட்டால் என்னைப் பண்ணாத கீர்த்தி பண்ணுவார்களென்று வெகு சிந்தனைப்பட்டான். அதுக்கு இவள் பின்னையும் அவனுக்குத் தயவு வருகிறாப் போல லீலாவினோதங்களால் அவன் மனதைப் பிரியப்படுத்திவித்து சமயம் அறிந்து அந்தக் கிளிப்பிள்ளையைக் கொடுக்க வேணுமென்று கேட்டாள். அதுக்கு, நல்லது கிளிப்பிள்ளையை கொண்டு வந்து தருகிறேனென்று சொன்னான். அப்படியே கொண்டு வருகிறேன் என்று சொல்லி அவளுடைய மோகாந்தகாரத்தால் அந்தக் கிளிப்பிள்ளையை தாய் தகப்பனை அறியாமல் எடுத்துக் கொண்டு போய் கொடுத்தான்.

அப்போ அஸ்தமிக்கிற சமயமாச்சுது. அப்போ தேவதாசி கிளிப்பிள்ளையைக் கையிலே வாங்கி நீ ஒர வழக்குத் தீர்த்தாயே என்று தலையிலே குட்டி இப்போ நீ என் கையிலே அகப்பட்டுக் கொண்டியே இப்போ உன்னை ஆய்ந்து கறிப் பண்ணி தின்கிறேன் பாரு. இப்போ உன்னுடைய சபதம் வென்றதோ. என்னுடைய சபதம் வென்றதோ என்று தன் வீட்டு வெள்ளாட்டிகளை அழைத்து அவள் கையிலே கொடுத்து இந்தக்

கிளியை உயிரோடே மயிரைப் பிடுங்கி அறிந்து கறி சமைக்கச் சொல்லிக் கொடுத்து விட்டு கோவிலுக்குப் போனாள்.

ஆண்டச்சியாள் சொன்னபடிக்கு உயிரோடே மயிரைப் பிச்சுப் போட்டு கல்லுமேலே வைத்துப் போட்டு அரிவாள் மணை எடுக்கப் போனாள் அந்த சமயத்திலே கிளி எழுந்திருந்து சலதாரையில் புகுந்து கொண்டது. அவள் அரிவாள் மனையை எடுத்துக் கொண்டு வந்து கிளியைப் பார்த்தாள். கிளி காணாதபடியினாலே பூனை எடுத்துப் போச்சுதென்று ஒரு கோழியைப் பிடித்து கறி சமைத்து வைத்தாள். கோவிலுக்குப் போனவள் வீட்டுக்கு வந்து வெள்ளாட்டிச் சிறுக்கியைக் கிளிக்கறி சமைச்சியோ என்று கேட்டாள். சமைச்சேன் என்றாள். தன் கலத்தைக் கழுவி வரச் சொல்லி சாதமும் கிளிக்கறியும் போடச் சொல்லி தலையை எடுத்து வழக்குச் சொன்ன வாயைக் கடிக்க வேணுமென்று கடித்துத் தின்றாள். இதுவெல்லாம் இந்த கிளிப்பிள்ளை சலதாரையிலிருந்து கேட்டுக் கொண்டு நீ எங்கே தப்புகிறாயென்று மனதிலே எண்ணிக் கொண்டு சலதாரையிலே தானே தினமும் ஆகாரம் பண்ணிக் கொண்டு இருக்கச்சே இறகு முளைத்தது. பறக்க வந்ததன் பிறகு பறந்து போய் அந்த பட்டணத்திலே இவள் படியேறி சேவிக்கிற கோவிலிலே சுவாமியை சேர்ந்துக் கொண்டு இருக்கையிலே அந்தத் தேவடியாள் தினம் தினம் கோவிலுக்குப் போய் பூசை

முடிந்து எல்லோரும் வீட்டுக்குப் போன பிறகு சுவாமி கிட்டபோய் சுவாமி என்னை உடலோடே கயிலாசம் கொண்டு போக வேணுமென்று தினமும் கும்பிட்டுக் கொண்டு வருவாள்.

அது கண்டு கிளிப்பிள்ளை இவளை மரியாதை குலைக்க இது சமயம் என்று பார்த்துக் கொண்டு ஒரு நாள் சுவாமி சொல்லுகிற பாவனையாக நீ சொர்க்கம் அடைய வேணுமென்றால் உன் உடைமை, உப்பந்தி, வீடு, வாசல், ரொக்கம் ஆசையும் விட்டு, மக்கள் மனிதர் புருஷராசையும் விட்டு, நிர்மலாய் அஞ்சு பஞ்ச பூதத்தையும் ஒன்றாக்கிச் சுத்தமாய் ஒரு மனதாய் வந்து கேட்டால் கட்டோடே கயிலாசம் கொண்டு போகிறோம் என்று சொல்ல சுவாமியார் கட்டளை இப்படியே வருகிறேன் சுவாமி என்றாள். கிளி சுவாமி சொல்லுகிற பாவனையாய் சொல்லும்.

உன்னுடைய ஆஸ்திபாஸ்தியெல்லாம் தானம் தருமம் பர உபகாரம் பண்ணிவிட்டு தலையை சிரைச்சு பசுவின் சாணத்தை தலை மேலே வைத்து அதின் பேரிலே பசுவின் நெய்யாலே விளக்கேற்றி வைத்துக் கொண்டு வண்ணானுடுப்பு உடுத்திக் கொண்டு நாலு முழத்திலே ஒரு சீலை காவி துவைத்து மேலே போட்டுக் கொண்டு ருத்திராட்சமும் தரித்துக் கொண்டு பண்டார வேஷமும் ஆக சன்னதிக்கு முன்னே வந்தாயானால் உன்னைக் கயிலாசத்துக்கு அழைத்துப் போகிறோம் என்று

சொன்னது. அப்போ தேவடியாள் சுவாமி என்றைக்கு வருகிறதென்று கேட்க அப்போ சுவாமி சொல்லுகிறாப் போல கிளிப்பிள்ளை, வெள்ளியன் இன்றைக்கு வந்தாயே ஆனால் அந்தப்படி கொண்டு போய் சேர்க்கிறோம் என்று சொல்ல அப்படியே வருகிறோம் என்று போய் அந்தப் பட்டணத்திலே அதிமோகமா இருக்கிற பேருக்குச் சொல்லி விட்டு வீட்டுக்கு வந்து வீட்டிலிருக்கிற உடைமை உப்பந்தி எல்லாம் வீடுவாசல் மாடு கன்றுகள் சகலமும் அரிதேசி பரதேசி சோகி சங்கமன் பார்ப்பான் சகலமான பேருக்கும் தான தருமம் பர உபகாரம் பண்ணிவிட்டு தலையை மொட்டை பண்ணிக் கொண்டு வண்ணானுடுப்பும் உடுத்திக் கொண்டு காவி வேஷ்டியும் போட்டுக் கொண்டு விபூதியும் பூசிக் கொண்டு தலைமேல் விளக்கை வைத்துக் கொண்டு சன்னதிக்கு வருகிற போது தேவடியாள் கூட்டோடே கயிலாசத்துக்குப் போகிறாளென்று அந்தப் பட்டணத்திலே இருக்கிற ராசாக்கள் மந்திரி பிரதானிகள் தனதானன் என்கிற செட்டி அவன் மகனும் பின்னும் பட்டணத்திலுள்ள செட்டி, வர்த்தகர்கள், சேவகர்கள், மறுதேசத்து ராசாக்கள், மந்திரிகள், பிரதானிகள், சகல பேரும் வந்து கோவிலைச் சுற்றி நிறைந்து இருக்க அந்தத் தேவடியாள் ஆடல் பாடலுடனே வருகிற போது ராசா மந்திரி பிரதானி சேவகர் சுற்றிக் கொண்டு வர இப்படி ஆடலுடனே வந்து கோவில்

முன்னே ஆடிக் கொண்டு நிற்கிற போது சுவாமி என்று தேவடியாள் சொல்லிக் கொண்டு நிற்கிறாள்.

சகலமும் தானம் பண்ணிவிட்டு சுங்க வடிவாய் அசனம் பண்ண ஒரு காசுமில்லாமல் தலை மேலே நெய் விளக்கு வைத்துக் கொண்டு வந்தேன். சுவாமி கிளிப்பிள்ளை கோபுரத்து மேலிருந்து சொல்லுகிறது. அந்த பட்டணத்து ராசாவைப் பார்த்து, ஓகோ ராசாவே இந்த தேவடியாள் கூடோடே கயிலாசம் போகிறதைப் பார்க்க வந்தீர்களோ. அந்த வேடிக்கை பார்த்தது போதும். இந்த வேடிக்கையைக் கேளுங்கோள் என்று கிளிப்பிள்ளை சுவாமிக்கும் பின்னேயிருந்துக் கொண்டு சுவாமி சொல்லுகிற பாவனையாய் சொல்லுகிறது.

ஓய் ராசாவே நீயுமொரு தட்சண தேசமாளுகிற ராசாவாச்சுதே. இதுவே வினாவாய்க் கேளும். முன்னே ஒரு கிளிப்பிள்ளை அண்டைக்கு இந்தத் தேவடியாள் வழக்குப் போனாள். அந்தக் கிளி தருமமான படி வழக்குச் சொன்னால் அது உள்ளபடி வருமொழிய அதிகம் வருமோவென்று அறியாமல் தனதானன் என்கிற செட்டியார் மகனைத் தொடுத்துக் கொண்டு அவனைக் கொண்டு கிளிப்பிள்ளையை அழைப்பித்து அந்தக் கிளியை உயிருடனே சிறகைப் பிச்சு சமைக்கச் சொல்லிவிட்டு கோவிலுக்குப் போனாயே. அப்படியே அந்த வெள்ளாட்டி உயிருடனே மயிரைப்பிடுங்கிவிட்டுச் சலதாரைக் கல்லின் பேரில்

வைத்துவிட்டு அரிவாள்மனை எடுக்கப் போனாள். அந்த சமயத்தில் கிளிப்பிள்ளை சலதாரையில் புகுந்து கொண்ட படியினாலே வெள்ளாட்டி உனக்கு பயந்து ஒரு கோழியைக் கறி சமைத்து வைத்தாள். நீ கோவிலுக்குப் போய் வந்து கிளிக்கறி சமைத்தாயோ என்று கேட்டாயே. அவள் சமைத்தோம் என்று சொல்லிக் கிளிக்கறியை எல்லாம் போடச் சொல்லி தலைக் கறியெடுத்து வழக்குச் சொன்ன வாயே என்று கடித்துத் தின்றாயே அப்போ அந்த கிளி கேட்டுக் கொண்டு இருந்தது. ஒரு மாதத்துக்கும் பிறகு இறகு முளைத்து பறந்து வந்து நம்முடைய அடைக்கலமாக வந்து சேர்ந்தது. நீ இப்படி பாவம் செய்யலாமோ அந்தப் பாவம் இப்போ அனுபவித்து நாலு வீடு இருந்துண்டு. புறந்திண்ணையில் படுத்திருக்கக் கண்டு சகலமான பேரும் சீ......போவென்று துரத்துவார்கள் என்று சொல்லிவிட்டு கிளிப்பிள்ளை வெளியே புறப்பட்டு இப்புறம் வந்து இப்படிக் கொற்ற பாவம் செய்த பாவியை சுவாமியார் கூடோடே கொண்டு போகுமோ என்று சொல்லிவிட்டு பறந்து போய் விட்டது. உச்சினி வந்து பட்டி அரண்மனைக்குப் போய் பட்டி மடியிலே அமர்ந்து கொண்டது. பட்டியிடம் கிளி, அந்த ஆசாரியை காடாறு மாதம் போவோமென்று அழைத்துக் கொண்டு போனோமே அங்கே ஒரு கிளிப்பிள்ளை செத்துக் கிடந்தது. அதிலே புகுந்து தனக்கு மாம்பழம் கொண்டு வரச்

சொன்னான். ஆன படியினாலே அந்த ஆசாரியினுடைய சூது நானறியாமல் என் உடலை விட்டுக் கிளி உடலிலே போனதின் பிறகு அவன் தன் உடலை விட்டு என் உடலிலேலே புகுந்து கொண்டு தன் உடலைத் தகனம் பண்ணிவிட்டு உச்சினி வந்தான். நான் காடாறு மாதம் சென்றாலொழிய வருகிறதில்லை என்று தேசதேசமெல்லாம் திரிந்து சஞ்சாரம் பண்ணிக் கொண்டிருந்தேன். ஒரு பட்டணத்திலே ஒரு தேவடியாள் என்னைக் கொல்ல வேணுமென்று நினைத்தாள். நான் அவளை மோசம் பண்ணிப் பட்டணத்தை விட்டு விட்டு வந்தேனென்று தான் பட்ட பாடெல்லாம் பட்டியுடனே சொன்னார்.

அப்போ பட்டி சொல்லுவான். காடாறு மாதம் போன ராசா மூன்று நாளையிலே வருவாரோ என்று சந்தேகப்பட்டு அரண்மனையிலே வைத்து அந்த வாசல் மூடிவிட்டு அந்தப் பாதியிலே தாதிகளை நாலு பேரை சிங்காரித்து அந்த நாலு பெண்களிலே ஒருத்தியை ராசாவின் பெண் சாதி என்று நேமித்து வைத்து தாதிகளுக்குக் கெட்டி பத்திரம் பண்ணிவிட்டு எதிரே போய் பார்த்தளவிலே ராசாவினுடைய உடலிலே ஆசாரியினுடைய உயிரிருந்த படியினாலே பேசாதிருந்தான். அதன் பிறகு உடலுக்குச் சேதமில்லையே உயிருடனே ராசா வந்து சேருவாரென்று திட சித்தம் பண்ணிக் கொண்டு தாதியிருக்கிற அரண்மனையே கொண்டு போய் விட்டேன். நீரும்

கிளிப்பிள்ளையாக வந்தீரல்லோ. சந்தோஷமாச்சுது என்று அரண்மனையிலே பத்திரமாக வைத்துவிட்டு விக்கிரமாதித்தனாக இருக்கிற ஆசாரியிடத்துக்கு வந்தார்.

வந்து நீரும் நாமும் ஆட்டுக்கிடா வளர்க்கிறோமே. பாய்ச்சலுக்கு விட்டுப் பார்க்க வேணுமென்று பட்டி சொல்ல அப்படியே அரண்மனையிலே இருக்கிற கிடாயிலே இரண்டு கிடாய் தருவித்து ஒரு கிடா ராசாவினுடைய கிடா ஒரு கிடா பட்டியினுடைய கிடா என்று நிர்ணயம் பண்ணி பத்து நாளைக்கு நன்றாய் மேய்த்து இரண்டு கிடாவுக்கும் மேய்ப்பு போடுகிற பேரை பட்டி அழைத்து தன் கிடாவுக்கு மத மேத்தச் சொல்லி ராசாவுடைய கிடாவுக்கு மதம் குறைக்கச் சொல்லி திட்டப்படுத்தினான். அதன் பிறகு விக்கிரமாதித்த ராசா என்கிற ஆசாரியுடனே வந்து இன்றைக்கு ஆட்டுக்கிடா பாய்ச்சலுக்கு விட்டுப் பார்க்க வேணுமென்று சொல்ல அப்படியே ஆகுதென்று பட்டி கிளியை மடியிலே வைத்துக் கொண்டு ஆட்டுக்கிடா இரண்டையும் பாய்ச்சலுக்கு விட்டார்கள். அப்போ ராசாவுடைய கிடா ஓடிப் போக வழி பார்க்கிற வேளையிலே உடலை விட்டு கிடா உடலிலே புகுந்தான். அப்போ கிளி உடலிலே இருந்த ராசா விர்ரென்று தன்னுடைய உடலிலேலே புகுந்து கொண்டு சிம்மாசனம் ஏறி விக்கிரமாதித்த ராசாயிருந்து கொண்டு ஆச்சாரி புகுந்திருக்கிற கிடாவைப் பிடித்து வரச்

சொல்லி உச்சினி மாகாளி பட்டணத்திலே ஒரு வாத்தியாருண்டு. அவர் பிள்ளைகளைப் படிப்பித்துக் கொண்டு இருப்பார். அந்த வாத்தியார் பதினெட்டு சாதியிலே பதினெட்டு பெண்களைக் கல்யாணம் பண்ணி ஆயிரம் பிள்ளைகளுக்கு ஓதி வைக்கிற வாத்தியாரைப் பிடுங்கினார்கள். அப்போ அந்த வாத்தியார் வந்து விக்கிரமாதித்த ராசாவுடனே சொன்னார்.

அவன் ஓதுவித்த வாத்தியாரையும் மரியாதை பண்ணலாமா. குருவுக்கு ரெண்டகம் பண்ணலாமோ என்று அந்தப் பதினெட்டுப் பெண்களையும் உச்சினி மாகாளிக்குப் பலியிட்டாப் போல ஆசாரி நமக்கு சினேகமாயிருந்தவன். நமக்கு மோசம் பண்ணினானல்லவோ. இவனைக் கொண்டு போய் உச்சினி மாகாளிக்குப் பலியிடச் சொன்னார். அப்படி ஆசாரி புகுந்திருந்த ஆட்டுக் கிடாவை காளி முன்னே கொண்டு போய் நிறுத்தி ஒரு வெட்டிலே வெட்டிவிட்டார்கள். நீயும் அப்படி விக்கிரமாதித்த ராசாவைப் போல இப்படிக் கொற்ற சகாயமும் தான தருமம் தயாளமும் கொடையும் நீதியும் தனுவும் உண்டானால் இந்த சிம்மாசம் ஏறலாம் என்று முப்பத்தோராம் பதுமை சொல்ல போசராசா வெட்கிப் போனான்.

முப்பத்தோராம் பதுமை முற்றும்

## முப்பத்திரண்டாம் பதுமை கதை

பின்னையும் சிறிது நாளைக்கும் பிறகு போசராசன்

சிம்மாசம் ஏற வருவான். அப்போ முப்பதிரண்டாம் பதுமை சொல்லும் கதை "ஓகோய் போசராசனே கேளும். இந்த சிம்மாசனம் விக்கிரமாதித்த ராசாவுக்கே அல்லாமல் மற்ற ஒருவருக்கும் பொறுக்காதென்று ,சொல்லுகிறது. உச்சினி மாகாளி பட்டணத்திலே விக்கிரமாதித்தராசாவும் பட்டியென்கிற மந்திரியும் மனு நீதியாக ஆறிலொரு கடமை கொண்டு ஆசார மணிகட்டி தரும சிந்தனையுடனே ராச்சியபாரம் பண்ணுகிற நாளையிலே விக்கிரமாதித்த ராசாவானவர் காடாறு மாதம் போய் சஞ்சாரம் பண்ணிக் கொண்டு வந்ததன் பிறகு ஒரு நாள் ராத்திரி பதினெட்டு நாழிகைக்கு ராசா நகர் சோதனைக்குப் புறப்பட்டு பட்டணமெல்லாம் சுற்றி வேறே அதிசயமில்லாதபடியினாலே அரண்மனைக்கு வந்தனர்.

அரண்மனை வாசலில் காகங்கள் இடுகிற முட்டையும் பொரிக்கிற குஞ்சுகளும் பிழைக்கிறதில்லை. நாமென்னமாய்ப் பிழைக்கப் போகிறோம் என்று விகாரப்பட்டுக் கொண்டு இந்த ஊரின் கொடுமையோ. அல்லவென்றால் நாம் செய்த தீவினைப் பயனோவென்று மந்திரி என்கிற காகம் ராசா என்கிற காகத்துக்குச் சொல்ல அந்த காகங்களெல்லாம் கூடி விக்கிரமாதித்த ராசா வாசலில் கூடியிருந்தால் ராசா விசாரிப்பாரே என்று அரண்மனை வாசலிலே கூட்டம் கூடியிருந்தது. ராசா கண்டு பட்டியாகிய மந்திரியை அழைத்து

இந்த காகங்கள் கூடியிருக்கிறது ஏது காரியம் என்று கேட்பார். அப்போ பட்டி நயனபாஷையினாலே காகங்களைக் கேட்க காகங்கள் பட்டியைப் பார்த்துச் சொல்லும். நாங்கள் தங்கள் பட்டணத்திலே இருந்து சஞ்சாரம் பண்ணிக் கொண்டு இருக்கிறபடியினாலே என்னென்று பிழைக்கப் போகிறோம். எங்களுடைய தெய்வம் விக்கிரமாதித்த ராசா அரண்மனை வாசலில் வந்து காத்திருக்கிறோமென்று மந்திரி என்கிற காகம் சொல்ல அந்த வார்த்தையைப் பட்டி கேட்டு விக்கிரமாதித்த ராசாவுக்கு அறிக்கை பண்ணினார்.

அப்போ விக்கிரமாதித்த ராசா உங்கள் துன்பம் மூன்று நாளையிலே தீர்த்துக் கொடுக்கிறோம் என்று சொல்லி அனுப்பச் சொன்னார். அப்படியே பட்டி வந்து காகங்களை அழைத்து நம்பிக்கை வார்த்தைகளாக உங்களுடைய துன்பம் மூன்று நாளையிலே தீர்த்துக் கொடுக்கிறோம் என்று சொல்லி அனுப்பினார். காகங்கள் தங்களுடையதாவுக்குப் போயிற்று. அதன் பிறகு விக்கிரமாதித்த ராசா கொலுவிலே இருந்து கொலு முடிந்து அரண்மனைக்குப் போகிறபோது பட்டியை அழைத்து இன்று முதல் மூன்று நாளைக்குள்ளாக காகங்கள் சேதிகளை திட்டப்படுத்தி நமக்குச் சொன்னாலாச்சுது. இல்லாதே போனால் நம்முடைய சமுகத்துக்கு வர வேண்டாமென்று சொல்லிவிட்டு அரண்மனைக்குப் போய் விட்டார்.

பட்டி, அரண்மனைக்குப் போகாமல் இதுக்கு நாம் என்ன செய்வோம் என்று விசாரப்பட்டுக் கொண்டு இருக்கிறபோது ராத்திரி பதினைந்து நாழிகைக்கு மேல் தெய்வ லோகத்திலே இருந்து சப்த கன்னிகைகள் ஏழு பேர் பூலோகத்துக்கு வந்து ஆடை ஆபரணங்கள் கதம்ப கஸ்தூரி பரிமள சுகந்தம் தரித்துக் கொண்டு விக்கிரமாதித்தனுடைய அரண்மனையை நோக்கி வருகிறபோது பட்டி இவர்களைப் பார்த்து பயந்து தூண் மறைவிலே ஒதுங்கிக் கொண்டு இவர்கள் எங்கே போகிறார்களோ என்று பார்த்தான்.

அந்த சப்த கன்னிகைகள் ஏழு பேரும் விக்கிரமாதித்த ராசா இருக்கிற அரண்மனையே போனார்கள். ஆனதால் பட்டி வெகு விசாரப்பட்டு நம்முடைய ராசாவுக்கு என்ன கபடு பண்ணுவார்களோ தெரிய வராதே என்று அவர்கள் அறியாமல் தானும் பின் தொடர்ந்து போனார். அப்போ பதினெட்டு கட்டு வாசல் பூட்டு முத்திரை போட்டு சாத்தியிருந்தது. இவர்கள் போகிற அதட்டியிலே திறவுகோல் போட்டு திறந்தாப் போலே பதினெட்டு கட்டு வாசலும் திறந்து கொண்டது. அப்பால் போகிற போது விக்கிரமாதித்த ராசா தூங்கிக் கொண்டிருக்கிறார். அப்போ இந்த சப்த கன்னிகைகளும் பன்னீர் கொண்டு ராசாவின் பாதத்தைக் கழுவி புஷ்பம் போட்டு அர்ச்சனை பண்ணி பூசை முடிந்த பின்பு அந்த புஷ்பமெல்லாம்

எடுத்து முந்தாணியாலே அவர் பாதத்தைத் துடைத்துவிட்டுத் திரும்பினார்கள். அப்போ பதினெட்டு கட்டு வாசலும் நடந்து வருகிற போது எப்போதும் போலே பூட்டிக் கொண்டது.

இவைகளெல்லாம் பட்டி பார்த்துக் கொண்டு இருந்து தானும் கூடவே அவர்கள் அறியாமல் புறப்பட்டார். இப்போ சப்த கன்னிகள் ஏழு பேரும் புறப்பட்டுப் போனார்கள். அவர்கள் எங்கே போகிறார்களோ என்று பட்டியும் கூடவே அவர்களைக் காணாமல் தொடர்ந்து போகிறபோது அங்கே ஒரு மலைக்குள்ளாக ஒரு குகையிருந்தது. அதிலே சப்த கன்னிகைகள் புகுந்து அப்பாலே போனார்கள். பட்டியும் கூடவே தொடர்ந்து போனார். அப்புறம் போகிறபோது ஒரு பட்டணம். அந்தப் பட்டணத்திலே கடைகள். கடைத் தெருவுகள். அரண்மனை வாசல் இதுவெல்லாம் பார்க்கிற போது அங்கே இருக்கிற மனுஷர் தூங்குகிறாப் போலே செத்துக் கிடந்தார்கள். அது கடந்து அப்பால் போகிற போது ஒரு இருட்டாக இருக்கிற பட்டணம். அந்தப் பட்டணத்துக்குப் போகிற போது பட்டிக்கு வழி தெரியாமல் அடி பெண்ணே! நானும் கூட வருகிறேன் என்று கூப்பிட்டார்.

அப்போ இந்த கன்னிகள் ஏழு பேரும் திரும்பிப் பார்த்து மானிட சீவன் தொடர்ந்து வருகிறானென்று ஆகாசத்திலே பறந்து போய் விட்டார்கள். அதன் பிறகு பட்டி இவர்களைக் காணாமல்

திகைத்து திரும்பி இருட்டென்கிற பட்டணமும் கடந்து இப்பால் வருகிற போது செத்துக் கிடக்கிற சீவாத்துமா என்கிற பட்டணமே வந்து இதிலே இருக்கிற அதிசயத்தைச் சோதித்துப் பார்க்க வேணுமென்று போகிற போது கடைகள் கடை வீதிகள் அரண்மனை வாசல் இதுகளெல்லாம் பார்க்கும் இடத்தில் அங்கங்கே இருக்கிற மனுஷர், யானை, குதிரை, மாடு, கன்று, பறக்கப்பட்ட பட்சிகள் எல்லாம் தூங்குகிறாப் போல செத்துக் கிடந்தது. அப்பால் ஒரு அரண்மனைக்குள்ளாகப் போகிறபோது அங்கே ஒரு பெண் விளக்கு வைத்துக் கொண்டு வீணை வாசித்துக் கொண்டு இருந்தாள். அவ்ளை பட்டி கண்டார். அவள் பட்டியைப் பார்த்து வேகமாக அப்புறம் புறப்பட்டு போனாள். பட்டியும் தொடர்ந்து போனார். அங்கே ஒரு ஆறு போகிறது. அந்த ஆற்றில் அவள் காலில் தண்ணீர் படாமல் போனாள். அப்படிப் பட்டி நடக்க மாட்டாமல் நீந்திக் கரை ஏறினார். அவள் பின்னையும் போனாள். பட்டியும் தொடர்ந்து போனார். அப்பால் போகிறபோது அவள் அரண்மனைக்குப் போனாள். போனவுடனே வெள்ளாட்டி சிறுக்கி தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். அதை வாங்கி தான் கை கால் கழுவிக் பண்ணிக் கொண்டு அரண்மனையிலே புகுந்தாள். அங்கே ஒரு கட்டில் போட்டிருந்தது. அந்தக் கட்டிலே ரத்தின விளக்கு வைத்திருந்தது. அந்த விளக்கு

முன்னே போய் இவள் நின்றாள். பட்டி போய் கட்டிலின் மேலிருந்தார். அப்போ விளக்கைப் பார்த்து சிரித்தாள். அந்த விளக்கு மூக்கிலிருந்து ஒரு சீட்டு வந்தது. அந்த சீட்டை வாங்கி இவர் கையிலே கொடுத்தாள். அந்தச் சீட்டை வாசித்துப் பார்க்க அதிலே இந்த பெண்ணை மூன்று பேச்சிலே பேச வைத்தால் அவனுக்குப் பாரியாவாள் என்று எழுதிருந்தது. அப்படியே பேச வைக்கிறோம் என்று பட்டி அவள் கையைப் பற்றி இழுத்தார். அப்போ அவள் ஊமென்று கையை உதறினாள். அந்த அதட்டியிலே பட்டியானவர் உச்சினி பட்டணமே வந்து விழுந்தார்.

அப்போது பொழுதும் விடிந்தது. அதன் பிறகு விக்கிரமாதித்த ராசா காலமே எழுந்திருந்தி சரீர சுத்தி பண்ணிக் கொண்டு கொலுவுக்கு வந்து பட்டியை அழைத்து நாம் ராத்திரி சொன்ன சேதிக்கு மறு உத்திரவு சொல்லாமல் போனதென்ன என்று கேட்க அப்போ பட்டி, சுவாமி நான் ராத்திரி ஒரு அழிசெயல் கண்டேன். அது கேளும் என்று சொன்னார். அது எப்படி என்றால் சுவாமியார் சொன்ன சேதி கேட்டு நான் என்னுடைய அரண்மனைக்குப் போகாமல் விசனப்பட்டுக் கொண்டு இருக்கிற போது தெய்வ லோகத்திலே இருந்து சப்த கன்னிகள் வந்தார்கள். அவர்களைக் கண்டேன். அவர்கள் எங்கே போகிறார்களென்று நான் பின் தொடர்ந்து

போகச்சே அந்த ஏழு பேர் கன்னிகள் தேவரீர் அரண்மனைக்கு வந்தார்கள். அவள் வந்து தங்களைப் பாத பூசை பண்ணிக் கொண்டு இப்புறம் வந்தார்கள். அதைப் பார்த்துக் கொண்டு பின்னும் அவரைத் தொடர்ந்து போனேன். அவ்விடத்தில் அதிசயமிப்படி என்று சொன்னார்.

விக்கிரமாதித்த ராசா கேட்டு நல்லது என்று சொன்னார். ராத்திரிக்கு அந்தப்படி ஒப்புவிக்கிறாயோ என்று ராசா பட்டியைக் கேட்க அந்தப்படியே ஒப்புவிக்கிறேனென்று பட்டி சொல்ல அன்று ராத்திரி விக்கிரமாதித்த ராசாவானவர் தூங்குகிறாப் போல சயனித்துக் கொண்டு விழித்திருந்தார். அப்படியே அந்த கன்னிகள் ஏழு பேரும் வந்து விக்கிரமாதித்த ராசாவின் பாதத்தை பன்னீரால் சுத்தி பண்ணி புஷ்பம் போட்டு அர்ச்சனை பண்ணி அதன் பிறகு அந்த புஷ்பத்தை எடுத்துக் கொண்டு போகிற போது விக்கிரமாதித்த ராசா பின் தொடர்ந்து போனார்.

அப்போ அவ்விடத்தில் ஒரு மலை. அந்த மலைக்குள்ளாக ஒரு குகை. அந்த குகையிலே புகுந்து சப்த கன்னிகளும் போகிற போது ராசாவும் கூடவே போனார். அப்புறம் போகிறபோது ஒரு பட்டணம். அதிலே கடைகள் கடைத்தெரு. யானை, குதிரை, பறக்கப்பட்ட பட்சிகளெல்லாம் தூங்குகிறாப் போல செத்துக் கிடந்தது. அதுவிட்டு அப்பாலே ஒரு இருட்டென்கிற பட்டணம். அந்த பட்டணத்துக்குப் போகிற

போது ராசாவுக்கு வழி தெரியாமல் அடி பெண்ணே நானும் கூட வருகிறேனென்று கூப்பிட்டார்.

அப்போ இந்த சப்த கன்னிகள் ஏழு பேரும் திரும்பிப் பார்த்து மானிட சீவன் தொடர்ந்து வருகிறதென்று ஆகாசத்திலே பறந்து போய் விட்டார்கள். அப்போ விக்கிரமாதித்த ராசாவுக்கு வழி தெரியாமல் திகைத்து திரும்பி செத்துக் கிடக்கிற சீவாத்துமா என்கிற பட்டணமே வந்து இது அதிசெயமாயிருக்கிறது. இதை சோதித்துப் பார்க்க வேணுமென்று போகச்சே அப்பால் அரண்மனைக்குள்ளாக போகிறபோது அவ்விடத்தில் ஒரு பெண் விளக்கு வைத்துக் கொண்டு வீணை வாசித்துக் கொண்டு இருந்தாள். அவளை விக்கிரமாதித்த ராசாவானவர் கண்டார். அவள் இவரைப் பார்த்தாள். பார்த்தவுடனே சற்றே நின்று எழுந்திருந்து அப்புறம் போனாள். இருவரும் கூடத்தானே தொடர்ந்து போனார். அவ்விடத்திலே ஒரு ஆறு போகிறது. அந்த ஆத்துக்கு அவள் காலில் தண்ணீர் படாமல் போனாள். அப்போ விக்கிரமாதித்த ராசா இந்த அதிசயமெல்லாம் பார்த்து வேதாளத்தை வரவழைத்து அதன் பேரிலேறிக் கொண்டு காலில் தண்ணீர் படாமல் போனார். அப்புறம் அவள் அரண்மனைக்குப் போனாள். வெள்ளாட்டிச் சிறுக்கி தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். அந்த தண்ணீரை வாங்கி கை கால் சுத்தி பண்ணிக் கொண்டு

அரண்மனையே போனாள். அவ்விடத்தில் ஒரு கட்டில் போட்டிருந்தது. அந்தக் கட்டிலின் பக்கத்திலே ஒரு ரத்தின விளக்கு வைத்திருந்தது. அந்த விளக்கு கிட்ட போய் நின்றாள். ராசாவும் கட்டிலின் பேரிலிருந்தார். அப்போ அந்தப் பெண் விளக்கைப் பார்த்து சிரித்தாள். விளக்கிலிருந்து ஒரு சீட்டு வந்தது. அந்த சீட்டை எடுத்து ராசாவின் கையிலே கொடுத்தாள். ராசா வாசித்துப் பார்க்க இந்தப் பெண்ணை மூணு பேச்சிலே பேசிவித்தால் அவருக்குப் பாரி என்று எழுதிருந்தது. அந்தப்படியே பேசுவிக்கிறேனென்று விக்கிரமாதித்த ராசா வெகு சந்தோஷப்பட்டார்.

வேதாளத்தை அழைத்து இவளை மூன்று பேச்சு பேசுவிக்கிறாப்போல ஒரு கதை சொல்லச் சொன்னார். அப்போ வேதாளம் கதை சொல்லும், "மதுராபுரி என்றொரு பட்டணம். அந்தப் பட்டணத்திலே மதுரேசன் என்றொரு ராசா. அவருக்கு ஒரு குமாரன். அவன் அழகு சவுந்தரியத்திலே வெகு ரூபமாயிருப்பான். அவனுக்கு அழகான ஸ்திரியாயிருப்பாள். இருவரும் சுந்தரமான படியினாலே கெந்த கஸ்தூரி பரிமள சுகந்தங்களெல்லாம் அணிந்து கொண்டு ரதியும் மன்மதனும் போலே இருக்கிற போது அந்த பரிமள வாசனை தெய்வ லோகத்துக்கு வீசும். அப்படி உப்பரிகையிலே இருந்து சஞ்சாரம் பண்ணிக் கொண்டு இருக்கிற நாளையிலே ஒரு நாள் சப்த

கன்னிகள் ஏழு பேரும் அந்த உப்பரிகைக்கு மேலாக போகிற போது அந்த பரிமள வாசனைகள் கண்டு இதேது அதிசயமாகயிருக்கிறது. இதைப் பார்ப்போம் என்று சப்த கன்னிகைகளும் யோசனை பண்ணிக் கொண்டு இருக்கிற போது அதிலே ஒருத்தி சொல்லுவாள். நாம் சுவாமி தரிசனத்துக்குப் போகிறோமே இப்ப வேண்டாம். சுவாமி தரிசனையானதின் பிறகு வந்து பார்ப்போம் என்று சொல்ல அப்படியே ஆகட்டும் என்று போய் சுவாமி தரிசனை பண்ணி திரும்பினார்கள்.

உப்பரிகை வழியாக வருகிறபோது வந்து பார்த்து இந்த ராசகுமாரனும் அவனுடைய ஸ்திரியும் இருவரும் ரதியும் மன்மதனும் போலே துங்குவதைக் கண்டு வெகு சந்தோஷப்பட்டு அந்த ராச குமாரனை நாமெடுத்துக் கொண்டு போய் நித்தமொருவர் கட்டளையாக வைத்துக் கொள்ளுவோம் என்று பேசிக் கொண்டு இந்த ராசகுமாரனை எடுத்துக் கொண்டு போனார்கள். அதன் பிறகு தினமொருத்தி முறையாக வைத்துக் கொண்டு அனுபவித்தார்கள்.

அதிலே ஒருத்தி அய்யய்யோ இந்த ராசகுமாரன் பெண் சாதியும் நம்மைப் போல ஆசைப்பட்டு இருக்கிறவளல்லாமல் வேறில்லையே. அந்த தோஷம் நமக்கென்னத்துக்கு வேண்டாமென்று அவள் முறை அன்றைக்கு இந்த

ராசகுமாரனைக் கூட்டிக் கொண்டு போய் அந்த ராசகுமாரன் பெண்சாதியிடம் விட்டாள். விடிந்து வருகிற போது எடுத்துக் கொண்டு போவாள். இப்படி இருக்கிற நாளையிலே இந்த ராசகுமாரன் பெண் சாதி துங்கி போனவளெழுந்திருந்து பார்க்கிற போது புருஷனைக் காணாமல் போனாள்.

அதன் பிறகு இந்தப் பெண்ணுக்கு அரண்மனை சுற்றி சேவகரைப் போட்டு காவல் வைத்து பத்திரமாயிருக்கிற போது இந்த ராசகுமாரன் தெய்வ லோகத்திலே இருந்து வந்து இவளை நித்திரை போகிற போது சஞ்சாரம் பண்ணின படியினாலே வயிற்றிலே மூன்று மாதம் கெர்ப்பமாச்சுது. இந்த சேதி தாதிகளறிந்து ராசாவுக்கு அறிக்கை பண்ணினார்கள். அந்த சேதி ராசா கேட்டு நம்முடைய குமாரனைக் காணாமல் ஒரு வருஷம் போலாச்சுதே. இப்போ இந்த சேதி பிறந்ததென்ன என்று வெகு சஞ்சலப்பட்டு இப்படிப் பட்டவள் ஆகாதென்று தலையாரிகளை அழைப்பித்து இவளை வெட்டிப் போடச் சொல்லுவார்.

அப்போ பேசா மடந்தை என்கிறவள் 'அய்யய்யோ' என்பாள். அந்த வார்த்தை விக்கிரமாதித்த ராசா கேட்டு பேச்சு ஒன்றாச்சுதென்பார்.

ளஅதன் பிறகு தலையாரிகள் வந்து இந்த ராசகுமாரன் பெண் சாதியைக் கூட்டிப் போய் வெட்டிப் போடுவோம் என்று

கொண்டு போனார்கள். ஒருவன் இந்தப் பெண் கற்ப்பினியாய் இருக்கிறவளை எப்படி வெட்டுகிறதென்று யோசனை பண்ணிக் கொண்டு இருந்து ராசாவின் பேச்சைத் தவிர்த்து நாமொரு காரியம் செய்ய வேண்மென்று அந்தப் பெண்ணை வெட்டுகிற போது வெட்டறாதபடியினாலே அந்தப் பெண்ணைக் காட்டிலே ஒட்டி விட்டார்கள்.

அந்தப் பெண் இதென்ன காரணமென்று வருத்தப்பட்டுக் கொண்டு போகிற போது அழகாபுரி என்றொரு பட்டணம். அந்தப் பட்டணத்துக்கு சமீபத்தில் தண்ணீர் பந்தலிருந்தது. அதிலே போயிருக்கிற போது அந்தப் பட்டணத்திலே இருக்கிற தேவதாசி மகள் விழுந்து போனாள். அதனாலே அந்தத் தாய்க்கிழவி தேசாந்தரம் போக வேணுமென்று புறப்பட்டு தண்ணீர்ப் பந்தலிலே வந்திருந்தாள். அப்போ அந்த ராசகுமாரத்தியைக் கண்டு நீயாரென்று கேட்டாள். அப்போ இவள் சொன்னது என் புருஷன் காலம் சென்று போனார். எனக்கு வேறே ஆதரவுயில்லை. நான் பிழைக்க வந்தேனென்று சொன்னாள். அப்போ இந்த தாய்க்கிழவி என் மகளும் விழுந்து போனாள். அதனாலே நானும் புறப்பட்டு வந்தேன். நீ எனக்கு மகளுக்கு மகளாயிருக்கிறாயோ என்று கேட்டாள்.

அதுக்கு இவள் நல்லதென்று சொல்ல அவளைக் கூட்டிக் கொண்டு வந்து தன்னிடம் வைத்துக் கொண்டு இருக்கிற

நாளையிலே இந்த ராசகுமாரத்திக்குப் பத்து மாதமும் சரியாகச் சென்று வயறு வலியெடுத்து மெய் நொந்து படுகிறபோது அப்போ தாய்க்கிழவியாகிறவள் அய்யோ மகளே மெய் நொந்து படுகிறாயே. அதுக்கு உங்கள் தேசத்து வளப்பம் பார்ப்போமோ. எங்கள் தேசத்து வளப்பம் பார்ப்போமோ என்று கேட்க ராசகுமாரத்தி சொல்லுவாள். எங்கள் தேச வளப்பம் நானறியேன். உங்கள் தேச வளப்பப்படிக்குப் பாரென்று சொல்ல அந்த தாய்க்கிழவி கண்ணைக் கட்டி பார்க்கிறபோது கோடி சூரியப் பிரகாசம் போலே ஒரு ஆண் பிள்ளை பிறந்தது.

அந்தப் பிள்ளையைக் கிழவியானவளெடுத்து தூரக் கொண்டு போய் எறிந்துவிட்டாள். அப்போ பேசா மடந்தை என்கிறவள் ‘அய்யய்யோ’ என்பாள். விக்கிரமாதித்த ராசா பேச்சு இரண்டாச்சுதென்று சொன்னார்.

அப்போ அந்த ராசகுமாரத்திக்கு மயக்கம் தெளிந்து பிள்ளை எங்கே என்று தாய்க்கிழவியைக் கேட்குமிடத்தில் அதுக்குத் தாய்க்கிழவி மாறுபாடாகச் சொன்னாள். மகளே நீ உதிரமும் உதிரக்கட்டியுமாய்ப் பெற்றாயே. அதை எடுத்து எறிந்துவிட்டேனென்று சொன்னாள். அது ராசகுமாரத்தி கேட்டு அழுது கொண்டிருந்தாள்.

அதன் பிறகு எறிந்துவிட்ட பிள்ளை கூகாவென்று அழுகிற சத்தம் கேட்டு தேவர்களெல்லாரும் அந்த பிள்ளையிடம்

வந்து ராத்திரி முப்பது நாழிகையும் பிள்ளை அண்டையிலே காத்துக் கொண்டிருந்து நீ சீமானாய் ஐம்பத்தாறு தேசமும் ஆளுவாயென்று சொல்லி அந்த பிள்ளையை எடுத்துக் கொண்டு போய், பிள்ளையார் கோவிலிலே வைத்துவிட்டுப் போனார்கள். அதன் பிறகு ஆதிசேஷன் வந்து குடைபிடித்து நாவாலே நக்கிவிட்டுப் போச்சுது. அதனாலே அந்தப் பிள்ளைக்கு சர்ப்பனம் பாஷையும் தெரிய வந்தது. பி ற கு அந்தப் பட்டணத்து ராசாவின் பெண்சாதிக்கு பிள்ளையில்லாமல் வெகுநாளாய் பிள்ளையாருக்கு பூசை பண்ணிக் கொண்டு வருவாள். அப்படியிருக்கிற நாளையிலே பிள்ளையார் முன்னே இந்தப் பிள்ளை அழுதுக் கொண்டிருக்கிறதைக் கண்டு ராசாவின் பெண்சாதி எடுத்து வெகு சந்தோஷப்பட்டு நமக்குப் பிள்ளையார் புத்திர சந்தானம் கொடுத்தாரென்று இரு கையிலே எடுத்து மார்போடு அணைத்தாள். அவள் உடம்பு பச்சொடம்பாகி பால் சுமந்தது. அப்போ அரண்மனைக்குக் கொண்டு போனாள். அந்தப் பிள்ளையை நன்றாய் நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாக வளர்த்து ஐந்து வயதிலே பள்ளிக்கு அனுப்பி, பதினெட்டுப் பாஷையும் கற்பித்து ஆறு வயதிலே சிலம்பம் பழக்கி யானை ஏற்றம், குதிரை ஏற்றம் பழக்கி ஏழு வயதிலே பதினெட்டு ஆயுத பரிட்சையும் கற்று சகல கலை வல்லவனாக யானை ஏற்றத்துக்கு தேவேந்திரனைப் போலவும் குதிரை ஏற்றத்துக்கு

நகுலனைப் போலவும் வளர்த்தார்கள்.

இப்படி இருக்கிற நாளையிலே ஒரு நாள் இந்த ராச குமாரன் யானை மேலே ஏறிக் கொண்டு வீதி வழியாய் வருகிறபோது தேவடியாள் வீதி வழியே வருகிறபோது இவனுடைய தாயார் தலை முழுகி மயிராத்திக் கொண்டு வாசலிலே நிற்கிறபோது இந்த ராசகுமாரன் கண்டு மோகித்தான். அந்த தாய்க்கிழவியை அழைப்பித்துக் கேட்கிற போது அப்படியே ஆகட்டுமென்று ராசகுமாரனை வரச் சொன்னாள். அந்த ராசகுமாரன் தன்னுடைய அரண்மனைக்குப் போய் சூரியன் அஸ்தமித்ததின் பிறகு ஆடை ஆபரமும் தரித்துக் கொண்டு கதம்ப கஸ்தூரி பூசிக் கொண்டு ...... படியிலே பசுவின் கன்று ..... ராசாவானவன் என்னைக் கடந்துக் ..... சட்டை பண்ணுவானோ என்று சொல்ல ..... ம ..... தன்னுடைய அரண்மனைக்கு வந்து தன்னை .... பிள்ளையாமல் பிள்ளையாரை நித்தம் பூசை பண்ணிக் ..... கொண்டு இருக்கிறதைக் கண்டு பிள்ளையார் நமக்குபு ..... டு அந்தத் தேவடியாளை அழைத்து வரச் சொல்லி இவள் ... டுவேனென்று சொல்லி அப்போ அவர் காலும் கையும் ..... பந்தலிலே இருந்தேன். அப்போ இந்த ராசகுமாரத்தியு ..... ன்றாள். அதுக்கு நான் என் மகளுக்கு மகளாயிரு என்று ..... று வலி எடுத்து நொந்து பட்டாள். அப்போ நான் ..... டேன். இது ஒழிய வேறொரு சேதிகளுமில்லை

..... யிலே வைத்து சுட்டுப் போட்டார். பின்பு தா ..... பட்டணம். அந்த பட்டணத்தில் மருரேசன் என்கிற ..... ட காலத்துக்கு ஆத்தோரத்தில் உப்பரிகை ..... இப்படி இருக்கிற நாளையிலே ஒரு நாள் தெய்வ லோகத்திலே இருந்து சப்த கன்னிகள் ஏழு பேரும் உப்பரிகையின் மேலாக போகிற போது அந்த பரிமள வாசனையைக் கண்டு ஏழு பேரும் வந்த பார்த்து இருவரும் நித்திரை போகிற போது ராசாவை எடுத்துக் கொண்டு போனார்கள். இந்த சேதி எங்கள் மாமனார் கேட்டு எனக்குச் சுற்றி வரக் காவலாளரை வைத்து இருக்கிறபோது ஒரு நாள் தாதிகள் போய் ராசாவுடனே உன் மருமகள் மூன்று மாதம் கர்ப்பிணி என்று அறிக்கை பண்ணினார்கள். ராசா கேட்டு நம்முடைய குமாரனை ஒரு வருஷமாய்க் காணாமலிருக்க இந்த அவதூறு ஏதென்று தலையாரிகளை அழைத்து இவளை வெட்டிப் போடுங்கோ என்று சொன்னார். அப்படியே என்னை வெட்டினார்கள். வெட்டறாதபடியினாலே தலையாரிகள் இந்தத் தோஷம் நமக்கு என்னத்துக்கு என்று சொல்லி வெட்டாமல் காட்டில் ஒட்டி விட்டார்கள். அப்போ நான் அய்யோ அநியாயமோ என்று வருகிறபோது அழகாபுரி பட்டணத்துக்கு சமீபமாக ஒரு தண்ணீர்ப் பந்தலிருந்தது. அதில் வந்திருந்தேன். அங்கே இந்த தாய்க்கிழவியும் வந்திருந்தாள். அப்போ அந்த தாய்க் கிழவி எனக்கு வேறே ஆதரவு இல்லை. நீ எனக்கு மகளாக

இரு என்று சொல்ல வந்தாள். எனக்கு வேறே ஆதரவு இல்லாதபடியினாலே நானும் நல்லதென்று சம்மதித்தேன். அதன் பிறகு என்னை அவள் வீட்டுக்குக் கூட்டி வந்தாள்.

இப்படி , சொல்லிக் கொண்டே இருக்கச்சே ராசகுமாரத்திக்கு மெய்யெல்லாம் பசலை நிறமாகி முலைப்பால் சுரந்து பீறீட்டு அந்த ராச குமாரன் பேரில் விழுந்தது. அப்போ தாயென்று அறிந்து தாயாருக்கு மூடு பல்லக்கு கொண்டு வரச்சொல்லி அதின் பேரிலே வைத்துக் கொண்டு தன்னுடைய அரண்மனைக்கு அழைத்துப் போனார். அப்போ தங்கள் தகப்பனார் சேதியைத் தாயாரைக் கேட்கும் இடத்தில் நடந்த வித்தாந்தம் எல்லாம் சொன்னாள்.

அந்த சேதி கேட்டவுடனே தன்னுடைய தகப்பன் தெய்வலோகத்திலே இருக்கிறான். அதுக்கு நாம் எப்படிப் போவோம் என்று ஆலோசனை பண்ணி கருடன் என்கிற வடிவெடுத்து தெய்வ லோகத்துக்குப் பறந்து போய் சப்த கன்னிகளிடம் போகிற போது அவர்கள் இவனைக் கல்லாகச் சபித்துப் போட்டார்கள்.

அப்போ பேசா மடந்தை என்கிறவள் 'அய்யய்யோ' என்பாள். அதுக்கு விக்கிரமாதித்த ராசா பேச்சு மூன்றாச்சு என்று சொல்ல அப்போ பேசா மடந்தை அவனை எழுப்பி பெண்ணுக்கும் வேண்டிய வரத்தையும் கொடுத்து பூஷணங்களும்

கொடுத்து போ என்று சொல்லி அவர் கையில் விடை பெற்றுக் கொண்டு விக்கிரமாதித்த ராசா உச்சினி வந்து சேர்ந்தார். அப்படி நீயும் சகாயமும் தான தருமம் பர உபகாரமும் பண்ண வல்லமையானால் இந்த சிம்மாசனம் ஏறலாம் என்று முப்பத்திரண்டாம் பதுமை சொல்ல போசராசாவானவர் மிகுதியும் வருத்தப்பட்டு ..... பண்ணிப் போடுகிறேன் என்று சொல்ல அந்த வார்த்தையை முப்பத்திரண்டாம் பதுமை கேட்டு சொல்லுகிறது.

கேளும்! போசராசனே ..... த தேவையில்லை. சிம்மாசனத்தின் பேரிலே ஒரு கையைப் போட்டுக் கொண்டு ராச்சிய பாரம் பண்ணிக் கொண்டு இரும் என்று சொல்லிற்று.

ஸ்ரீ மதேராமனு சாயளை மகா. ஸ்ரீ வேணுகோபாலாயன்மைகா:- விசுவாவசு ஜீ ஸ்ரீபங்குனி மிக. உ துவாதசியும் சோம வாரமும் ஆயிலிய நட்சத்திரமும் சுகர்ம நாம யோகமும் ..... நாழிகைக்கு விருஷப லக்கினத்தில் சத அளரு ஜீ மார்ச்சு மி யக.உ. ராச ஸ்ரீ டாக்கு துரை ஸ்டன் காயபு பெரிய துபா ..... யார் அனந்தப்பிள்ளை எழுதிக் கொடுத்த முப்பத்திரண்டு பதுமை சொல்லும்.

விக்கிரமாதித்த ராசா கதை முற்றும்

ஸ்ரீராமஜெயம்.

முப்பத்திரண்டு பதுமை கதை முற்றும்.

ஓம் சாந்தி. சாந்தி. சாந்தி...